1-15 பிப்ரவரி 2002 ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



ஆண்டிப்பட்டி மோசடிக்கு தேர்தல் ஆணையத்தின் காவடி




படிப்பகம்

www.padippakam.com

# மின்சார நகரத்தில் இருண்டு கிடக்கும் தொழிலாளர் வாழ்க்கை

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைத்தால்தான் நாட்டின் பொருளாதாரம் நிமிர்ந்து நிற்கும் என்று தனியார்மயத்தின் ஆதரவாளர்கள் பேசி வருகின்றனர். ஆனால், ஏற்கனவே அரசிடமுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் முதுகெலும்பாக இருக்கும் தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்களின் அவல வாழ்க்கையே தனியாரின் கோரமுகத்தைக் காட்ட போதுமானது.

நெய்வேலி அனல் மின் நிலையம் - I விரிவாக்கக் கட்டுமானப் பணி குறிப்பிட்ட காலத்தில் நிறைவடைந்து, இலாபம் ஈட்டியதை என்.எல்.சி. நிர்வாகம் பத்திரிகைகளில் செய்தியாக வெளியிட்டுள்ளது.

இந்தக் கட்டுமானப் பணி வெளிநாட்டு நிறுவனமான அன்சால்டோ-விடம் கொடுக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் மூலம் பென்னார் இண்டியா, கேமன் இண்டியா, டாடா, சிம்ப்ளக்ஸ், யூபி இன்ஜினியரிங், கிரிலோஸ்கர், மெக்லிங் பாரத் போன்ற கம்பெனிகளுக்கு தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலைதர மறுத்து, வெளிமாநிலங்களிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்து 12 மணி நேரம் உழைப்புக்கு வெறும் 45 ரூபாய் சம்பளம் கொடுத்துத் கொத்தடிமைகளாக நடத்தினர். இதற்கெதிராக ''உள்ளூர் தொழிலாளிக்கு வேலை கொடு! தொழிலாளரைக் கொத்தடிமையாக நடத்தாதே! அரசு நிர்ணயித்த ஊதியம் மற்றும் உரிமைகளைக் கொடு'' எனக் கோரி பல்வேறு தொழிற்சங்கங்களும் போராடின.

வழக்கம் போலவே இத்தொழிற்சங்கங்கள் அனைத்தும் நிர்வாகத்தோடு சமரசம் செய்து கொண்டதோடு, பா.ம.க தொழிற்சங்கத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி என்பவன் நிர்வாகத்துக்கு அடியாட்களை ஏற்பாடு செய்யும் தரகனாகவும் செயல்பட்டான். விடுதலைச் சிறுத்தைகளின் தொழிற்சங்கத்தினர், நிர்வாகத்திடமிருந்து துணை வேலைகளுக்கான (சப் ஒர்க்) ஆர்டர்களைப் பெறுவதற்காகத் தங்களுக்குள்ளேயே தாக்கிக் கொண்டனர்.

இந்நிலையில் பு.ஜ.தொ.பி.கு.வின் தொழிற்சங்கமான பகத்சிங் இன்கோ தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர் சங்கம் மட்டும் பலமுறை நிர்வாகத்தையும் தனியார் கம்பெனியையும் எதிர்த்து துண்டறிக்கை, சுவரொட்டி, வாயில் கூட்டம், ஆர்ப்பாட்டம், 'லேபர் கமிசன்' மூலம் சட்டரீதியான போராட்டங்கள் எனப் பல வழிகளில் தொழிலாளர்களை அணி திரட்டி வந்தது. பலமுறை வேலை நிறுத்தமும் செய்து அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தது.

தொடர்ச்சியான இந்த நடவடிக்கைகளால் அரண்டுபோன இக்கம்பெனிகளும், நிர்வாகமும் முன்னணித் தோழர்களைப் பேச்சு வார்த்தை என்ற பெயரில் சமரசத்திற்கு அழைத்தனர். அதற்கு மசியாததால் அவர்களின் 'கேட் பாஸ்'களைப் பிடுங்கிக் கொண்டு, ரவுடிகளை வைத்து மிரட்டியும், போலீசின் மூலம் பொய் வழக்கு பதிவு செய்தும் அடாவடித்தனமாய் நடந்து கொண்டனர்.

இவற்றைக் கண்டு அஞ்சி பின்வாங்கி விடாமல் பகத்சிங் இன்கோ மற்றும் ஒப்பந்த தொழிலாளர் சங்கம் உறுதியாகப் போராடி, தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தி சட்டப்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுத் தந்தது. சங்கத்தின் உறுதியைக் கண்டு அலையலையாகத் தொழிலாளர்கள் பகத்சிங் சங்கத்தில் வந்து இணையத் தொடங்கினர்.

தொழிலாளர் மத்தியில் பகத்சிங் இன்கோ ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் ஆதரவு பெருகி வந்ததைக் கண்ட கம்பெனிகள் உள்ளூர் ரவுடிகளைச் சேர்த்து 'காண்ட்ரக்ட் ஓனர் சங்கம்' என்ற அடியாள் படையை உருவாக்கினர். இந்தப் பொறுக்கி கும்பலின் பலத்தைக் காட்டி, பென்னர் இண்டியா கம்பெனி தொழிலாளர்களுக்கு 3 மாத சம்பளமும், போனசும் தராமல் அலட்சியமாக நடந்து கொண்டது.

நிர்வாகம் மற்றும் கம்பெனிகளின் இந்த அடாவடித்தனத்தையும், தொழிலாளர் விரோதப் போக்கையும் கண்டித்து பகத்சிங் இன்கோ ஒப்பந்த தொழிலாளர் சங்கம் 17.2.01 அன்று தொடர் முழக்க ஆர்பாட்டம் நடத்தியது. நிர்வாகத்தின் ஆணவத்திற்கு எதிராகவும், மத்திய - மாநில அரசுகளின் தனியார்மயமாக்கத்திற்கு எதிராகவும் தொழிலாளர் ஒற்றுமை கட்டியமைக்கப்பட வேண்டியதை வலியுறுத்தி முழக்கங்களும், உரைகளும் அமைந்தன.

அதனைத் தொடர்ந்து 600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் என்.எல்.சி. நிர்வாக அதிகாரியைச் சந்தித்து மனு கொடுத்தனர். அவரோ பேச்சு வார்த்தை என்ற பெயரில் முன்னணியாளர்களை மிரட்டியும், இனி யாருக்கும் இங்கே வேலை கிடையாது என்று 'கேட் பாஸ்'-ஐ பிடுங்கிக் கொண்டு விரட்டியும் ஆணவத்தோடு நடந்து கொண்டார். நிர்வாக அதிகாரியின் ஆணவத் திமிருக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் பகத்சிங் சங்கம் அடுத்த கட்ட போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகிறது.




தகவல்:
பகத்சிங் இன்கோ தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்,
நெய்வேலி.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 17

இதழ் 5—6

16 சன. - 15 பிப். 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18



மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


### ஆண்டிப்பட்டி தேர்தல்:

## தேர்தல் ஆணையத்தின் பித்தலாட்டம் எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனம்

**ஊ**ழல் - கிரிமினல் குற்றங்கள் புரிந்தவர்கள் ஆட்சிக்கு வருவதை இன்றைய அரசியல் சட்ட அமைப்பின் கீழ் தடுக்க முடியாது என்பதை ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. அது மட்டுமல்ல; அரசு அமைப்பின் பிற உறுப்புகளைப் போலவே 'நடுநிலையான' தேர்தல் ஆணையமும் சீரழிந்து கிடப்பதை இத்தேர்தல் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

சென்னை - சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகளில் எம்.எல்.ஏ.-க்களின் மறைவைத் தொடர்ந்தும், ஆண்டிப்பட்டியில் பாசிச ஜெயா போட்டியிடுவதற்காக அத்தொகுதி எம்.எல்.ஏ. பதவி விலகியதையடுத்தும் இம்மூன்று தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தலுக்கு இரு மாதங்களுக்கு முன்பிருந்தே ஆளுங்கட்சியும் அரசும் அங்கு முகாமிட்டு அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டதோடு, ஆயிரக்கணக்கான போலி வாக்காளர்களும் சேர்க்கப்பட்டதை ஆதாரத்துடன் எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கக் கோரின. அதைத் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் பார்வையாளராகத் தமிழகத்துக்கு வந்து இத்தொகுதிகளில் குறுகிய கால இடைவெளியில் விசாரணை நாடகமாடினார், கே.ஜி. ராவ் என்ற அதிகாரி. ஆனாலும் விசாரணையின் போது ஆளுங்கட்சிக்கு விசுவாசமாகச் செயல்பட்டு அதிகாரிகள் ஒத்துழைக்க மறுத்ததோடு, ஆண்டிப்பட்டியில் தேர்தல் ஆணைய அதிகாரிகளை ஆளுங்கட்சி குண்டர்கள் ''கெரோ'' செய்து விரட்டியடித்தனர்.

இத்தனைக்கும் பிறகும் சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகளில் மட்டும் வாக்காளர் சேர்ப்பில் முறைகேடுகள் உள்ளதாகக் கூறி இடைத் தேர்தலைத் தள்ளி வைத்த தேர்தல் ஆணையம், அந்த அளவுக்கு ஆண்டிப்பட்டியில் முறைகேடுகள் நடக்கவில்லை என்று தேர்தலை நடத்த உத்தரவிட்டுள்ளது. இதைக் கண்டித்து தமிழக எதிர்க்கட்சி எம்.பி.-கள் தலைமை தேர்தல் ஆணையர் கிருஷ்ணமூர்த்தியிடம் முறையிட்ட பின்னரும், அவற்றைப் பரிசீலிக்காமல் தன்னிச்சையாக அவர் ஆண்டிப்பட்டி முறைகேடுகளுக்கு மட்டும் வேறு அளவுகோலை வைத்துத் தேர்தலை நடத்த உத்தரவிட்டுள்ளார். எதிர்க்கட்சிகளின் புகார்களை வன்மையாக மறுத்தும், கண்டித்தும், திட்டமிட்டபடி ஆண்டிப்பட்டியில் தேர்தல் நடைபெறும் என்று சர்வாதிகாரமாக அறிவித்தும், பாசிச ஜெயா தாமதமின்றி மீண்டும் முதல்வராவதற்கு தேர்தல் ஆணையம் வெளிப்படையாகவே காவடி தூக்கியுள்ளது. நடுநிலையானது, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது, சுயேட்சை அதிகாரம் கொண்டது என்றெல்லாம் பீற்றிக் கொள்ளப்பட்ட தேர்தல் ஆணையத்தின் முகத்திரையும் கிழிந்தது.

ஆண்டிப்பட்டியில் முறையான - நியாயமான தேர்தல் நடக்காது என்று கூப்பாடு போட்ட தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி, இக்கேடுகெட்ட ஜனநாயகத்தையும் அங்கீகரித்து வேட்பாளரை நிறுத்தியுள்ளது. தி.மு.க.-வையும் அ.தி.மு.க.-வையும் எதிர்க்கும் அதேசமயம் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள பா.ஜ.க.-வையும் ஆதரிப்போம் என்று தனி ஆவர்த்தனம் செய்கிறது, ம.தி.மு.க. சட்டமன்றத் தேர்தலின்போது பாசிச ஜெயா கும்பலின் காலை நக்கிக் கிடந்த காங்கிரசு, த.மா.கா. மற்றும் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் ஜெயா கும்பலால் அடுத்தடுத்து எட்டி உதைக்கப்பட்ட பின்னரும் கூட, பாசிச ஜெயாவை எதிர்த்து வேட்பாளரை நிறுத்த மறுத்து, கொல்லைப்புற வழியாக ஜெயாவை ஆதரிக்கின்றன. தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கும் அ.தி.மு.க.-வுக்கும் மாற்றாக இவர்கள் பரபரப்பூட்டிய மதச்சார்பற்ற மூன்றாவது அணியை உருவாக்கும் முயற்சியும் ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதையாகிவிட்டது.

எல்லாவற்றையும் பாசிச ஜெயா கும்பலிடம் ஏற்கனவே அடகு வைத்துவிட்டு இன்று இழப்பதற்கு ஏதுமில்லாத ஓட்டாண்டிகளான இக்கட்சிகள், எஞ்சியிருக்கும் புதிய தமிழகம் கட்சியை ஆதரித்தால், தேவர் சாதி ஓட்டு வங்கியைப் பகைத்துக் கொள்வதாகிவிடும் என்று அஞ்சி அக்கட்சியையும் ஆதரிக்காமல் விலகியே நிற்கின்றன. ''மதவாத பா.ஜ.க. - தி.மு.க. கூட்டணியையும் ம.தி.மு.க.-வையும் எதிர்ப்போம்; மக்கள் விரோத அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தரமாட்டோம்; மூன்றாவது அணியுமில்லை; பொது வேட்பாளருமில்லை; நியாயமாகத் தேர்தல் நடக்காது என்பதால் பங்கேற்கவுமில்லை; புறக்கணிக்கவுமில்லை. மக்கள் தங்கள் மனசாட்சிப்படி செயல்படட்டும்'' என்று கூறித் தங்களின் துரோகத்தையும், மோசடியையும் மறைக்க முயலுகின்றன.

ஒருபுறம், தி.மு.க. - பா.ஜ.க.-வின் இந்து மதவெறி பாசிசக் கூட்டணி; மறுபுறம், சாதிய ஓட்டு வங்கி பலமும் பண பலமும் குண்டர் பலமும் அதிகாரமும் கொண்டு வெறியாட்டம் போடும் பாசிச ஜெயா அணி. இவ்விரண்டையும் இன்றைய போலி ஜனநாயக அரசியலமைப்போடு சேர்த்து தூக்கியெறிய, தேர்தல் பாதையைப் புறக்கணித்து உழைக்கும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுவதைத் தவிர இனி வேறு வழி கிடையாது. போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து சந்தர்ப்பவாத - பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகளை அரசியல் அரங்கிலிருந்து விரட்டியடிக்காமல் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் முடியாது. ●

படிப்பகம்

www.padippakam.com

# உணவு மானியத்தின் உண்மைக் கதை

ரேசன் கடைகளின் மூலம் விற்கப் படும் அரிசியின் விலையை உயர்த்தி யதைத் தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கும் ஜெயா கும்பல், புதிய குடும்ப அட்டை களை வழங்குவதற்கு நடத்தத் தொடங்கிய கணக்கெடுப்பையும் நிறுத்தி வைத்திருக் கிறது. இவற்றுக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பும், இடைத்தேர்தலும் சேர்ந்துதான் இப்பொருளாதாரத் தாக்கு தலை ஒத்தி வைக்கும்படி ஜெயா கும்பலை நிர்ப்பந்தித்துள்ளன.

வறுமைக் கோட்டுக்கு மேலும், கீழும் வாழும் மக்களைக் 'கண்டுபிடித்து', அவர் களுக்குத் தனித்தனியான குடும்ப அட்டை களை வழங்கும் திட்டம் தமிழகத்தில் இப்பொழுதுதான் மூக்கை நுழைத்திருந் தாலும், ஐந்தாண்டுகளுக்கு முன்பே மைய அரசு இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என உத்தரவு இட்டிருந் தது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய முழு பொறுப்பும் மாநில அரசு களிடம் இருப்பதனால், இந்தத் திட்டம் இந்தியாவெங்கும் ஒரே நாளில் நடை முறைக்கு வரவில்லை. ஒருபுறம் உலக வங்கியின் நெருக்குதல், மறுபுறம் உடனடி யாக எந்தவொரு பெரிய தேர்தலும் இல்லை என்ற நிலையில், பாசிச ஜெயா இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கிளம்பி விட்டார்.

இந்தியாவில் வறுமைக் கோட்டுக்கு மேலும், கீழும் மக்கள் வாழ்ந்து வருவது ஐந்தாண்டுகளுக்கு முன்பு முளைத்த விசய மல்ல; என்றாலும், இப்பொழுது திடீரென தனித்தனியாகக் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டால், "உரம், மின்சாரம், அரிசி, கோதுமை - இவையெல்லாம் மலிவாக கிடைக்க வேண்டும் என்பதற்காக மானியம் தரப்படுகிறது; இந்த மானியத்தால் பற்றாக் குறை அதிகமாகிக் கொண்டே போகிறது. பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் என்றால், மானியத்தை வெட்ட வேண்டும். அதேசமயம் ரேசனில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலையேற் றத்தால் ஏழைகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே, வறுமைக் கோட்டுக்கு மேலே/கீழே என்று பிரிக் கிறோம்" என அரசு கரிசனத்தோடு பதில் தருகிறது.

அரசு, ஆளுங்கட்சி, நடுநிலை நாளே டுகள், பொருளாதார நிபுணர்கள் - இவர்கள் அனைவரும் அரசின் பற்றாக்குறைக்கு மக்கள் மீது பழி போடுவது ஒருபுறமிருக் கட்டும்; நடுத்தர வர்க்கத்து கனவான்கள், படிப்பாளிகள்கூட, "அரசாங்கத்தால எத்தனை நாள்தான் இலவசமா கொடுத்துக் கிட்டே இருக்க முடியும்?" என்று அரை வேக்காட்டுத்தனமான கேள்வியை எழுப்பி, இந்த மானிய வெட்டை நியாயப் படுத்துகிறார்கள்.

* * *

ரேசன் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்கு தமிழக அரசும் 'மானியம்' கொடுத்தாலும், மைய அரசு வழங்கும் 'மானியம்'தான் பிரதானமானது. 1999-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் மைய அரசு உணவுப் பொருட்களுக்கு ஒதுக்கிய 'மானியம்' 9,200 கோடி ரூபாய்; அடுத்த ஆண்டு மைய அரசினால் ஒதுக்கப்பட்ட 'மானியம்' 12,215 கோடி ரூபாய்; இந்த 'மானியம்' 2001-2002-ஆம் ஆண்டில் 13,675 கோடி ரூபாயாக அதிகரித்திருக் கிறது.

ஒவ்வொரு ஆண்டும் 'மானிய'த் தொகை அதிகரித்துக் கொண்டு போவதைப் பார்க்கும்பொழுது, பற்றாக்குறை இருந் தாலும் கூட, ஏழை மக்களின் வயிற்றில் மைய அரசு அடிக்க விரும்பவில்லை என்பது போலத் தோன்றும். ஆனால், இந்தப் பல ஆயிரம் கோடி மானியமும், ஏழை மக்கள் ரேசன் கடைகளில் வாங்கும் அரிசி, கோதுமை விலைகளை மலிவாக வைத்திருப்பதற்கு மட்டும்தான் பயன்படு கிறதா என்பதுதான் கேள்வி.

கடந்த மூன்று ஆண்டுகளில் உணவு மானியம் 4,475 கோடி ரூபாய் - 48 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதே மூன்று ஆண்டு களில் ரேசன் மூலம் மக்களுக்கு விற்கப் படும் உணவுப் பொருட்களின் விலையும் கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1998-99-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு ரூ. 2.50-க்கு வழங்கப்பட்ட கோதுமை, இன்று ரூ. 4.65-க்கும், ரூ. 3.50-க்கு வழங் கப்பட்ட அரிசி இன்று ரூ. 6.10-க்கும் வழங் கப்படுகிறது.

மைய அரசு வழங்கும் மானியம் தவிர, தமிழக அரசும் உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்குகிறது. 2001-ஆம் ஆண்டு வரவு - செலவின்படி, தமிழக அரசு உணவுப் பொருட்களுக்கு வழங்கும் மானியம் 1500 கோடி ரூபாயாக அதிகரித் திருக்கிறது. அதேசமயம் கடந்த மூன்றாண் டுகளில் ரேசன் அரிசியின் விலை 75 சத வீதம் (ரூ. 2.00-லிருந்து ரூ. 3.50) உயர்த்தப் பட்டுள்ளது.

சாதாரண பொருளாதாரக் கணக்கின் படி, ஒவ்வொரு ஆண்டும் உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியம் அதிகரிக்கிறது என்றால், ஒன்று ரேசன் கடை

நாற்பது ரூபாய் தினக்கூலியில் வாழ்க்கையோடு போராடும் கிர்ஜி ருக்ஜி தௌடா (உட்கார்ந்திருக்கும் பெண்) வசதியாக வாழ்வதாக மகாராஷ்டிரா அரசு கண்டுபிடித்திருக்கிறது: வக்கிரக் கணக்கெடுப்பு.



www.padippakam.com

களின் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலை, ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் விலை மலிவாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இதற்கு நேர்மாறாக, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலை கடந்த இரண்டு ஆண்டுகளில் 80 சதவீதமும், வறுமைக் கோட்டுக்கு மேல் வாழும் குடும்பங்களுக்கு 200 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது.



நெல் கொள்முதலை நடத்தாமல் இழுத்தடிக்கும் தமிழக அரசைக் கண்டித்து, தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் நடத்திய சாலை மறியல்.

சொல்லிக் கொள்ளப்படும் இந்த ''உணவு மானியம்'', உணவுப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கும் பலன் அளிக்கவில்லை; உணவுப் பொருட்களை வாங்க வேண்டிய மக்களுக்கும் முழுசாகப் போய்ச் சேரவில்லை. அப்படியென்றால், ஒவ்வொரு ஆண்டும் கொட்டப்படும் பல ஆயிரம் கோடி மானியத்தைத் தின்னும் பெருச்சாளிகள் யார்?

இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் கிட்டதட்ட 6 கோடி டன் அளவிற்கு அரிசியும், கோதுமையும் கொட்டிக் கிடக்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் ரேசன் அரிசி, கோதுமையின் விலை தாறுமாறாக உயர்த்தப்பட்டதால், மக்கள் வாங்குவது குறைந்து போய் தேங்கிப் போனதால்தான் 6 கோடி டன் 'கையிருப்பு' உள்ளது. இதை முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள்கூட ஒத்துக் கொள்கிறார்கள்

ஒரிசாவில் பழங்குடி இன மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருந்த பொழுது கூட, இந்து மதவெறிக் கூட்டணி அரசு தனது கையிருப்பில் உள்ள உணவு தானியங்களை மலிவான விலைக்கோ அல்லது ''வேலைக்கு உணவு''த் திட்டத்தின் மூலமோ அவர்களுக்கு வழங்க முன்வரவில்லை. இப்படி நாயிடம் கிடைத்த தேங்காயைப் போல, மைய அரசிடம் குவிந்து கிடக்கும் உணவு தானியங்களை கெட்டுப் போகாமல் பராமரிப்பதற்கு மொத்த உணவு மானியத்தில் சரி பாதித் தொகை கொட்டப்படுகிறது.

1992-93 புள்ளி விவரப்படி, மைய அரசு தனது கையிருப்பில் இருந்த உணவு தானியங்களைப் பராமரிப்பதற்கு உணவு மானியத்தில் 12 சதவீதம் செலவழித்தது; இப்பராமரிப்புச் செலவு 1994-95-இல், மொத்த மானியத்தில் 44 சதவீதமாக அதிகரித்தது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரும், பராமரிப்புக்கு 44 சதவீதம்தான் செலவாகிறது என வைத்துக் கொண்டால், கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட உணவு மானியத்தில் (ரூ. 13,675 கோடி) பராமரிப்புக்குச் செலவழிக்கப்பட்ட தொகை 6,017 கோடி ரூபாய். இந்திய மக்கள் குறைந்த விலையில் அரிசி, கோதுமையை வாங்குவதற்கு இந்த 6,000 கோடி ரூபாயைப் பயன்படுத்த முன்வராத அரசு, கிடங்குகளில் கொட்டிக் கிடக்கும் உணவு தானியங்களைப் பெருச்சாளிகள் தின்று தீர்ப்பதற்குப் பயன்படுத்துகிறது.

விலை குறையவில்லை என்றால், ரேசன் கடைகளின் மூலம் மானிய விலையில் வழங்கும் அரிசி, கோதுமையின் அளவாவது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே சென்றிருக்க வேண்டும். ஆனால், இங்கும் உண்மை நேர்மாறாக இருக்கிறது.

கடந்த ஆண்டு அரசு தந்துள்ள புள்ளி விவரப்படி, இந்தியாவெங்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு ரேசன் கடைகளின் மூலம் மானிய விலையில் விற்க ஒதுக்கப்பட்ட கோதுமை 528 இலட்சம் டன்; அரிசி 659.8 இலட்சம் டன். ஆனால், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு விற்கப்பட்ட கோதுமை 145.6 இலட்சம் டன்; அரிசி 326.9 இலட்சம் டன். இதுபோல, மிகவும் வறிய நிலையில் வாழும் மக்களுக்கு விற்பதற்கு ஒதுக்கப்பட்ட 21 இலட்சம் டன் கோதுமையில், அவர்களுக்கு வழங்கப்பட்டது வெறும் 14.8 இலட்சம் டன்தான்.

ரேசன் மூலம் விற்கப்படும் அரிசி, கோதுமையின் விலையும் குறையவில்லை; ரேசன் மூலம் விற்கப்படும் உணவுப் பொருட்களின் மொத்த அளவும் அதிகரிக்கவில்லை. இப்படியிருக்கும்பொழுது, ஒவ்வொரு ஆண்டும் உணவு மானியம் அதிகரித்துக் கொண்டே போவதன் மர்மம் என்ன?

இந்தக் கேள்விக்கு விவசாயிகளின் தலையைப் போட்டு உருட்டுகிறது, மைய அரசு. இந்திய உணவுக் கழகம் விவசாயிகளிடமிருந்து தேவைக்கு அதிகமாக அரிசியையும், கோதுமையையும் அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்வதால் மானியம் உயர்ந்து கொண்டே போவதாகக் காரணம் காட்டப்படுகிறது.

கட்டாயக் கொள்முதல் என்ற பெயரில் நெல், கோதுமை விவசாயிகளின் முழு விளைச்சலையும் அரசே வாங்கிக் கொள்வதுபோல ஒரு நாடகத்தை அரசு வெகுகாலமாக நடத்தி வருகிறது. உண்மையில் ஒரு ஆண்டின் மொத்த விளைச்சலில் 13 சதவீத நெல், கோதுமையைத்தான் அரசு வாங்கி சேமிக்கிறது. இதனால், மீதி விளைச்சல் அனைத்தையும் மண்டி வியாபாரிகளிடம், அவர்கள் கேட்கும் அடிமாட்டு விலைக்கு அளக்க வேண்டிய அவலத்தில்தான் விவசாயிகள் தள்ளப்படுகின்றனர்.

உரம், பூச்சி மருந்து போன்ற இடுபொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே போவதால்தான், நெல்லுக்கும், கோதுமைக்கும் அரசு தரும் ஆதார விலை அதிகரிக்கிறதேயொழிய, இதனால் விவசாயிகளொன்றும் குபேரர்களாகி விடவில்லை. விவசாயிகளுக்குத் தரப்படுவதாகக் கூறப்படும் உர மானியம் முழுவதையும் சட்டபூர்வமாகச் சுருட்டிக் கொள்பவர்கள் உர ஆலை முதலாளிகள்தான். இவர்களின் தலையைத் தட்டி உரம், பூச்சி மருந்தின் விலையைக் குறைக்க வக்கற்ற ஆட்சியாளர்கள், விவசாயிகளிடமிருந்து நெல்லையும், கோதுமையையும் கொள்முதல் செய்வதையே நிறுத்திவிடத் திட்டம் போடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஜெயா பதவிக்கு வந்தவுடனேயே, அரிசி மண்டி முதலாளிகளும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மண்டி முதலாளிகளுக்குச் சாதகமாக தமிழக அரசு கொள்முதல் செய்வதைத் தட்டிக் கழிப்பதால், தஞ்சை நெல் விவசாயிகள் 560 ரூபாய்க்கு விற்க வேண்டிய நெல் மூட்டையை, நானூறு ரூபாய்க்கு மண்டி வியாபாரிகளிடம் விற்க வேண்டிய அவலத்தில் தள்ளப்பட்டுவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

ரேசன் கடைகளின் மூலம் ஓரளவு குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதைத் தண்டச் செலவு எனத் திட்டித் தீர்த்த உலக வங்கிகூட, உணவு மானியத்தில் 50 சதவீதத் தொகையைப் பராமரிப்புக்குச் செலவு செய்வதை வெட்டிச் செலவு எனக் குறிப்பிடுவதில்லை. ஏனென்றால், மக்களின் பெயரால் முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிப்பதற்கு இந்த வெட்டிச் செலவுதான் அடிப்படையாக இருக்கிறது.

கடந்த 1995-ஆம் ஆண்டு மைய அரசு தனது கோதுமை கையிருப்பில் இருந்து 52 இலட்சம் டன் கோதுமையை, மானிய விலையில் வர்த்தகச் சூதாடிகளுக்கு விற்றது. இந்திய உணவுக் கழகக் கிடங்குகளில் கோதுமை நிரம்பி வழிவதைக் காட்டி, இந்த விற்பனை நியாயப்படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டும், இதே போன்று மானிய விலையில் கோதுமை வெளிச் சந்தையில் விற்கப்பட்டது. மைய அரசு, ஒரு கிலோ கோதுமைக்கு குறைந்தபட்சமாக இரண்டு ரூபாய் மானியம் கொடுப்பதாக வைத்துக் கொண்டால், இந்த விற்பனையின் மூலம் அரசு உணவு மானியத்தில் இருந்து வியாபாரிகளுக்கு 1040 கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுத்திருக்கிறது.

2000-ஆம் ஆண்டு இறுதியில் 13 இலட்சம் டன் கோதுமை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இதன்மூலம் உணவு மானியத்தில் இருந்து மட்டும் வியாபாரிகளுக்குக் கிடைத்த இலாபம் 540 கோடி ரூபாய்.

மண்டி வியாபாரிகள் உணவு மானியத்தில் அடிக்கும் இந்தச் சட்டபூர்வக் கொள்ளை ஒருபுறமிருக்க, அவர்கள் வருடம் தவறாமல் சட்டவிரோதமாக அடிக்கும் கொள்ளை தனிக்கதை!

மைய அரசின் உணவு அமைச்சரே, ''ஒவ்வொரு ஆண்டும் கிட்டதட்ட 35 சதவீத உணவு தானியங்கள் - 50 முதல் 60 இலட்சம் டன் அரிசியும், கோதுமையும் ரேசன் கடைகளில் இருந்து கடத்தப்பட்டு, வெளிச்சந்தையில் விற்கப்படுவதாக'' ஒப்புக் கொண்டிருக்கிறார். குத்து மதிப்பாகக் கணக்கிட்டால் கூட, இந்தக் கடத்தலால் உணவு மானியத்தில் இருந்து வியாபாரிகள் அடிக்கும் சட்டவிரோதக் கொள்ளை 2500 கோடி ரூபாயைத் தாண்டும்.

கள்ளச் சாராய கும்பலுக்கும் போலீசுக்கும் இடையே எத்துணை நெருக்கம் இருக்கிறதோ, அதுபோலத்தான் இந்த அரிசி கடத்தல் கும்பலுக்கும் உணவு அமைச்சகத்துக்கும் இடையேயும் உறவு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அரிசி கடத்தல் கும்பலுக்குத் தளபதிகளாக இருக்கும் மண்டி வியாபாரிகள், அரிசி ஆலை அதிபர்களின் வியாபார நலனைப் பாதுகாப்பதுதான் உணவு அமைச்சரின் வேலை.

அரசின் கையிருப்பில் உள்ள உணவு தானியங்களைப் பராமரிப்பதற்கான செலவு, மானியத்தில் முதலாளிகளுக்குக் கிடைக்கும் பங்கு - இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மக்களுக்கு ஒதுக்கப்படும் உணவு மானியம் அற்பத் தொகையாகத்தான் இருக்கும். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் வாங்க முடியாதபடி ரேசன் அரிசி, கோதுமை விலை உயர்த்தப்பட்டிருப்பதன் மூலம், இந்த அற்ப மானியமும் மக்களுக்குப் போய்ச் சேர்ந்து விடாமல் தடுக்கப்படுகிறது.

* * *

மக்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுவதாகக் கூறப்படுவதே மோசடி எனும் பொழுது, அந்த உணவு மானியம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்பதற்காகதான் கணக்கெடுப்பு நடத்துகிறோம் என ஜெயா கும்பல் கூறுவது மோசடிக்கு மோசடியாகத்தான் இருக்க முடியும்.

இரண்டாயிரம் ரூபாய் - இதுதான் வறுமைக் கோட்டுக்கு மேலும், கீழும் வசிப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஜெயா கும்பல் முன்வைக்கும் பொருளாதார அளவுகோல். மாதம் இரண்டாயிரம் ரூபாய் வருமானத்தில் ஒரு ''அளவான குடும்பம்'' வசதியாக வாழ்ந்துவிட முடியுமா? வீட்டு வாடகை, போக்குவரத்துச் செலவு, ஸ்கூல் பீஸ், கரண்ட் பில் என இதையெல்லாம் கழித்துவிட்டால், இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில் தினமும் பிரியாணி அரிசியா வாங்கிச் சாப்பிட முடியும்?

''பளிங்கு தரை, மொசைக் தரை போட்ட வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கிறானா? பைக், ஸ்கூட்டர் வச்சிருக்கானா?'' என வறுமைக் கோட்டுக்கு மேலே வசிப்பவர்களைக் கண்டுபிடிக்க ஜேம்ஸ்பாண்ட் பாணியில் துப்பறிகிறது, தமிழக அரசு. வருமானவரி, விற்பனை வரி அலுவலகங்களுக்குள் புகுந்து வந்தாலே, வறுமைக் கோட்டுக்கு மேலே வசதியாக வாழ்பவர்களைக் கண்டுபிடித்துவிட முடியும். இந்த வழியை விட்டுவிட்டு, மொசைக் தரை, ஸ்கூட்டர், செல்போன் என்ற அற்பத்தனமான அளவு கோல்களின் மூலம், நடுத்தர வர்க்கத்துக்கும் ஏழை மக்களுக்கும் இடையே கொம்பு சீவிவிடப் பார்க்கிறது, தமிழக அரசு.

இலக்கு குறிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் (**Targeted Public Distribution System**) என்றழைக்கப்படும் இப்புதிய திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு வாரிக் கொடுக்கப் போவதைப் போல பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், ஏற்கனவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட மகாராஷ்டிரா மாநில மக்களின் அனுபவமோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது.

**வறுமைக் கோட்டுக்கு கீழும், மேலும் வாழ்பவர்களைக் கண்டுபிடிக்க தமிழக அரசு நடத்திய கணக்கெடுப்பு: ரேசன் கடைகளை ஒரேயடியாக இழுத்து மூடுவதற்கான தந்திரம்.**



மகாராஷ்டிரா மாநிலத் தலைநகர் மும்பையில் உள்ள தாராவியில் மட்டும் 84,099 குடும்பங்கள் வசிக்கின்றன. இவற்றுள் பெரும்பாலானவை, கூலித் தொழிலாளி, உதிரிப் பாட்டாளிகளின் குடும்பங்கள். இந்த 84,099 குடும்பங்களுள், 144 குடும்பங்கள்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் என அம்மாநில அரசு கண்டுபிடித்திருக்கிறது. இந்த 144 குடும்பங்கள் தவிர, பிற குடும்பங்களுக்கு உணவு மானியம் கிடையாது.

இந்த வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களுக்காவது 'குறைந்த' விலையில் ரேசன் அரிசியும், கோதுமையும் ஒதுக்கப்பட்ட அளவிற்குக் கிடைக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. ''இந்தப் புதிய அட்டை கொடுத்ததிலிருந்து எல்லாம் பாழாய்ப் போச்சு; கடந்த ஒரு வருடமா அரிசியும், கோதுமையும் வழங்கப்படுவது கிடையாது. அப்படியே கிடைச்சாலும், எங்கக் குடும்பத் தேவைக்குப் பத்தாது; வெளியில் விக்கிற விலைக்கும் ரேசன்



படிப்பகம்

www.padippakam.com

விலைக்கும் வித்தியாசமே இல்லை'' என்கிறார் ஷகிலா என்ற குடும்பத் தலைவி.

''நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட ஒரு அளவான குடும்பத்திற்கு, மாதமொன்றுக்கு 60 கிலோ அரிசியோ/கோதுமையோ அவசியம் தேவை'' என இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், இப்புதிய திட்டம் பச்சை நிற குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு ஒதுக்கும் அரிசி/கோதுமை வெறும் 20 கிலோதான். மீதித் தேவைக்கு இவர்களும் ஊதா நிற குடும்ப அட்டை கொடுக்கப்பட்டவர்களைப் போல ரேசன் கடையில் ஒன்பது ரூபாய் கொடுத்துதான் அரிசி வாங்க வேண்டும். பச்சை அட்டை குடும்பங்களுக்கு 20 கிலோவும் முழுசாகக் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகவே, ஒரே நேரத்தில் 20 கிலோ அரிசியையும் வாங்க வேண்டும் என அவர்களை அரசு நிர்பந்திக்கிறது.

''சனங்ககிட்டே பணம் இல்லாதபொழுது, அரிசியும், கோதுமையும் ரேசன் கடையில் இருக்கும். பணத்தைச் சேர்த்துக் கிட்டுப் போனா, ரேசன் கடை காலியாகக் கிடக்கும்''.

''பல மாசங்களா ரேசன் கடையில ஒண்ணுமே இருக்காது. சரக்கு வந்துட்டா, நாங்க போய் வாங்கறதுக்குள்ளே காலியாகிப் போய்விடும். எனக்கு ஒதுக்கப்பட்ட அரிசியும், கோதுமையும் எங்கே போச்சுன்னு யாருக்குத் தெரியும்?'' - இப்படி இந்தப் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் இலட்சணத்தைப் புட்டு வைக்கிறார்கள் ஒரிசாவின் பழங்குடியினப் பெண்கள்.

✱ ✱ ✱

''அரசு பெயரளவுக்கு விவசாயிகளிடம் நடத்தும் கொள்முதல்; இந்திய உணவுக் கழகம்; பொது விநியோகத் திட்டம்'' - இந்த மூன்றும் இருக்கும் வரை உணவு தானிய விற்பனையில் இறங்க எந்தவொரு பன்னாட்டு நிறுவனமும் தயாராக இல்லை என்பதை உலக வங்கி, அரசிடம் கறாராகத் தெரிவித்துவிட்டது. ஓட்டுப் பொறுக்குவதற்கு இந்த மூன்றும் தேவை என்பதால்தான், பொது விநியோகத் திட்டத்தை உடனடியாக ஒழித்துக் கட்டாமல், அதன் கழுத்தை மெல்ல மெல்ல நெறிக்கத் தொடங்கியிருக்கிறது, ஆளும் கும்பல்.

இது ஒருபுறமிருக்க, அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வது; இருப்பு வைத்துக் கொள்வது; உணவு தானிய மொத்த விற்பனையில் ஈடுபடுவது - இந்த மூன்று துறைகளிலும் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு வசதியாக, அத்தியாவசிய உணவு தானியச் சட்டத்தைத் திருத்தப் போவதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்தத் துறைகளில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்கள் முதல் பத்தாண்டுகளில் எவ்வித வரியும் கட்டத் தேவையில்லை என்ற சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மன்றத்தைச் சேர்ந்த உணவு மற்றும் விவசாயக் கழகம், ''ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள துணை சகாரா நாடுகளைக் காட்டிலும், இந்தியாவில்தான் அதிக அளவில் ஊட்டச் சத்து குறைவான மக்கள் வாழ்கிறார்கள்; ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளுள் 50 சதவீதக் குழந்தைகள் நோஞ்சான்களாக உயிர் வாழ்கின்றன'' என்று அறிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட தருணத்தில் பொது விநியோகத் திட்டத்தை முற்றிலுமாக ஒழித்து, உணவு தானிய வர்த்தகத்தை எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, பன்னாட்டு நிறுவனங்கள் - உள்ளூர் வர்த்தகச் சூதாடிகளின் கையில் ஒப்படைப்பது என்பது, இந்தியாவில் இன்னொரு சோமாலியாவை உருவாக்குவதாகவே முடியும்!

● ரஹீம்

## வாசகர் கடிதம்

✱ கஜானா காலி; - களவாடியது யார்? கட்டுரை, உலக வங்கி கடனால் பலன் அடைந்திருப்பது அதிகாரிகள், அரசியல்வாதிகள் முதலான கொள்ளை கும்பல்தான் என்பதையும், அவர்களின் ஊழல், புறம் பேசும் தன்மை, சந்தர்ப்பவாதத்தையும் ஆணித்தரமாகவும், புள்ளி விவரங்களுடன் கூறியுள்ளது. கடனைத் திருப்பி கட்ட வேண்டுமென்றால் இந்தக் கும்பலின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து கட்டுவதுதான் நியாயமென்பதைத் தெளிவுபடுத்தி கூறியுள்ளது சாலப் பொருத்தம்.

- பொன். இராதாகிருஷ்ணன்,
செல்லூர்.

✱ பயங்கரவாதத்தை இடுப்பிலே கட்டிக் கொண்டு அய்யோ பயங்கரவாதம் ஆபத்து! என்று அத்வானி கத்துவதாக உள்ள கார்டூன்படம் சிறப்பு. இந்தியா - பாகிஸ்தான் பாவை கூத்துக்கு நூலைக் கையில் வைத்திருப்பது அமெரிக்க மாமா என்பதை இரு நாட்டு மக்களும் உணரத் தொடங்கி விட்டார்கள். 'இது நம்ம ஆளு' கட்டுரை தெளிவான படப்பிடிப்பு. தவறு செய்வதில் சூத்திரன், பார்ப்பான், தலித் என்று பாகுபாடு பார்ப்பது ஆபத்தானது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

- செம்மலர் மா. நடராசன்,
அறந்தாங்கி.

✱ இந்துவெறிக் கூட்டணிக்கு 'பொடோ'! இடதுசாரி முன்னணிக்கு 'பொகா'! என்ற 'பங்காளி'களைப் பற்றிய கட்டுரை படித்தேன். 'பங்காளிகளைப் பதம்பார்த்து வெட்டனும்' என்று மக்கள் சரியாகவே சொல்லியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மார்க்சிய நூல்களை, புதையல்களை சிவகாசி பட்டாசு கடைக்கு எடைக்குப் போட்ட இந்த கும்பலிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும். எடைக்குப் போட்டதோடு 'கம்யூனிசம் ஒழிந்தது' என்று கனவு காண்கிறது போலும். அதனால்தான் பிது பூஷன் மஹடோ கையில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைப் பார்த்ததும் எடைக்குப் போட்டது இவன் கைக்கு எப்படி வந்தது என்று ஆத்திரத்தோடு கைது செய்திருக்கிறது.

பாவம்! மார்க்சியம் வெறும் காகிதம் என்று இவர்கள் கருதுகிறார்கள் போலும்! மார்க்சியம் வெறும் காகிதம் அல்ல; இது வொரு பீனிக்ஸ் பறவை. இதைப் புரியாத மேற்கு வங்க முதல்வர் புத்த தேவ் பட்டாச்சாரியாவா? அல்லது 'சொத்த' தேவ் பட்டச்சாரியாவா?

- சா. செல்வராஜ்,
மைய கலைக்குழு, ம.க.இ.க.

✱ கஜானா காலி; களவாடியது யார்? கட்டுரை நன்று. 700 கோடி ரூபாய் பற்றாக்குறைக்கு 3500 கோடி ரூபாய் வரி விதிப்பு, விலை உயர்வு செய்து மக்கள் மீது சுமையை ஏற்றியது ஜெ பினாமி அரசு. ஏற்கனவே வரிவசூல், குத்தகை, ஆலை அதிபர்கள், பத்திரப் பதிவுகள் மூலம் மொத்தம் 9000 கோடி ரூபாய் அனாமத்தாய் வெளியில் இருக்கிறது. இதை வசூல் செய்ய முடியாத் கையாலாகாத அரசு மக்கள் மீது பொருளாதார பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துள்ளது. பேருந்து தொழிலாளர்களுக்கு 'போனஸ்' கூட தராமல், காவல் துறைக்கு 107 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைக் காணும்போது வயிறு எரிகிறது. அர்ஜெண்டினா நாட்டைப் போன்று இங்கு நடக்கும் காலம் விரைவில் வரும்!

- கா. ஷபியுல்லாஹ்,
ஏரிப்புதூர்.

✱ பா.ஜ.க. அரசின் உள்நாட்டு ஒடுக்குமுறை நடவடிக்கைகளும், பிராந்திய மேலாதிக்க வெறியுமே பயங்கரவாதத்தின் ஊற்று மூலமாக உள்ளதை எடுத்துக்காட்டியது தலையங்கம். கருணாநிதியின் 'திடீர்' கைதைக் காட்டி தமிழகம் முழுக்க போராட்டம் நடத்திய ஓட்டுக் கட்சிகள், மக்களுக்கு விலையேற்றம் என்றதும் அறிக்கை விட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பது இவர்களும் உலக வங்கியின் எடுபிடிகள்தான் என்பதைக் காட்டியது. இவ்விதழின் அட்டைப்படம் பளீரென இருந்து பார்த்தவுடன் படிக்கத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. வாசகர் வட்டத்தில் ''இது நம்ம ஆளு! தமிழினை, தலித்திய பிழைப்புவாதிகளின் புதிய சித்தாந்தம்'' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட சிறப்புரை வாசகர்களுக்கு புதிய பார்வையைக் கொடுத்தது.

— வாசகர் வட்டம், திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# பாக். மீது நிழல் போர் மக்கள் மீது நிஜப் போர்

இந்திய மக்கள் அன்றாட வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும் பொழுது, இந்து மதவெறிக் கும்பலோ பாகிஸ்தான் மீது போர் தொடுக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மேற்கே பாகிஸ்தானை ஒட்டியுள்ள குஜராத், பஞ்சாப், இராசஸ்தான் மாநிலங்களின் எல்லைப்பகுதிகளில் இரண்டு இலட்சம் போர் வீரர்களும், பீரங்கிகளும், போர் விமானங்களும் குவிக்கப்பட்டுள்ளன. அரபிக்கடலில் மற்ற போர்க் கப்பல்களோடு, விமானந் தாங்கி போர்க் கப்பலும் மிதக்கிறது. இவையெல்லாம் போதாதென்று, அணுகுண்டுகளை வீசுவதற்கு வசதியாக அக்னி, பிருத்வி ஏவுகணைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ''எல்லா தயாரிப்புகளும் முடிந்து விட்டன; எப்படிப்பட்ட போரையும் நடத்துவோம்'' எனப் பத்திரிகையாளர்களிடம் முண்டாவைத் தட்டுகிறார், இராணுவத் தளபதி பத்மனாபன். பங்குச் சந்தை தரகர்கள் கம்பெனிகளின் பங்குகளுக்குப் பதிலாக, போர் மீது பணம் கட்டிச் சூதாடுமளவுக்கு முறுகல் நிலை நீடிக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் மீது இப்பொழுது போர் தொடுக்குமா, தொடுக்காதா என்பது கோடி ரூபாய்க்கான கேள்வியாகத் தொக்கி நிற்கும் அதே சமயம், இந்த முறுகல் நிலை தொய்ந்துவிடாதபடி, தேசியவெறிக் கூச்சல் போரை நடத்தி வருகிறது இந்துமதவெறிக் கும்பல்.

''நம்மிடம் இருக்கும் எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்துவோம்; அது எதிரியை எவ்வளவு தூரம் காயப்படுத்தினாலும் கவலைப்பட மாட்டோம்'' என அணுகுண்டைக் காட்டி பாகிஸ்தானை மிரட்டுகிறார், ''கவிதை'' மனம் கொண்ட வாஜ்பாயி.

''மிதவாதி'' வாஜ்பாயியே இப்படி போர் வெறிப் பிடித்து ஆடினால், ''தீவிரவாத'' ஆர்.எஸ்.எஸ். காரர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

''தீவிரவாதத்தின் ஊற்றுக் கண்ணாக இருப்பது பாகிஸ்தான்; அதனை ஒழித்துக் கட்டுவதற்கான தருணம் வந்துவிட்டதாகவும், இந்தப் போரை எதிர்ப்பவர்களையும் ஒரேயடியாக நசுக்கிவிட வேண்டும்'' என்றும் ஆர்.எஸ்.எஸ். தனது பத்திரிகையில் தலையங்கம் என்ற பெயரில் போர்ப் பிரகடனத்தை வெளியிட்டது.

இராமர் கோவில் கட்டுவதில் மும்முரமாக இருக்கும் வி.இ.ப., ''பாகிஸ்தானின் மீது அணுகுண்டுகளைப் போடுங்கள்; அப்படி நீங்கள் பாகிஸ்தான் மீது போர் தொடுத்தால், நாங்கள் இராமர் கோவில் கட்டுவதைத் தள்ளிப் போடுவோம்'' என இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சியோடு பேரம் நடத்தியது. இராமரைக் காட்டி முசுலீம்களைக் கொல்வதைவிட, இந்தப் போரைக் காட்டி முசுலீம்களைக் கொல்வது ரொம்ப எளிதானது என்பதில் வி.இ.ப.வுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

வாஜ்பாயி, அத்வானி போன்ற இந்து மதவெறியர்கள் எல்லாம் ''பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டும்'' என வெறிக் கூச்சல் போட்டால், ஆர்.எஸ்.எஸ்.இன் சித்தாந்தவாதி அருண் ஷோரி, ''உள்நாட்டிலும் போர் நடைபெற வேண்டும்'' என்கிறார். ''இத்துணை பிரச்சினைக்கும் காரணம் இந்தத் தாராளவாத ஜனநாயக அமைப்பு முறை தான்; இதனை முதலில் கைகழுவுங்கள்'' என்கிறார் அவர். அதாவது, ஒரு உள்நாட்டு கலவரத்தைத் தொடங்கி நடத்தி இந்து ராஷ்டிரத்தை அமையுங்கள் என்பதைத்தான் அருண் ஷோரி சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.

நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் ''பயங்கரவாதிகள்'' என முத்திரை குத்தப்பட்டு வேட்டையாடப்படுகிறார்கள்; ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறும் அருண்ஷோரி மாண்புமிகு அமைச்சராக வலம் வருகிறார். நகைக்கத்தக்க முரண்பாடல்லவா இது?

இந்து மதவெறிக் கும்பல் நடத்தி வரும் இந்த தேசியவெறிக் கூச்சலுக்கு, வெளியில் இருந்து ''தேசியவாதி''களும் ஒத்து ஊதுகிறார்கள். குறிப்பாக, 'தேசிய'ப் பத்திரிகையான இந்தியா டுடே, ''இன்னும் ஏன் போரைத் துவங்காமல் தாமதப்படுத்துகின்றீர்கள்?'' எனக் கொம்பு சீவிவிட்டது. இந்திய வெளியுறவுத் துறைச் செயலராக இருந்த ஜி. பார்த்தசாரதி என்ற பார்ப்பனர், ''நீங்கள் எங்களை காசுமீரில் இரத்தம் சிந்த வைத்தால், நாங்கள் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை ரத்து செய்து உங்களைப் பட்டினி போட்டுச் சாகடிப்போம்'' எனச் சவால் விட்டார்.

இந்தப் போர்வெறிக் கூச்சலுக்கும், போர் தயாரிப்புகளுக்கும் இந்து மதவெறியர்கள் சொல்லும் ஒரே காரணம், ''காசுமீர்''. ''காசுமீரை நம்மிடமிருந்து பிரிக்க பாக். தூண்டிவிடும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு போர்தான் ஒரே வழி; இதை இந்திய மக்கள் அனைவரும் ஒரு மனதாக ஆதரிக்கிறார்கள்'' என்கிறார் வாஜ்பாயி.

''பாகிஸ்தானைத் தட்டி வையுங்கள்'' என அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷிடம் மன்றாடும் அத்வானி.





படிப்பகம்

www.padippakam.com

கிராமத்தில் நிலத்தைத் தரிசாக, அம்போ என விட்டுவிட்டு, பிழைப்பு தேடி நகரத்திற்கு ஓடும் விவசாயியை, காசுமீர் மண்ணைக் காக்கப் போராடு எனக் கூறுவது முரண்பாடு நிறைந்த கேலிக்கூத்தாக இல்லையா? ஆனாலும், இந்தக் கேலிக்கூத்தான தேசபக்திக்கு நடுத்தர வர்க்கம் மகுடிக்கு மயங்கும் பாம்பு போல தலையை ஆட்டுகிறது.

தெற்காசியப் பகுதியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வலுவாகக் காலூன்றி இருக்கும் நிலையில், ''காசுமீர் பிரச்சினையைப் போர் தொடுத்துத் தீர்த்து விடுவோம்'' என இந்து மதவெறிக் கும்பல் சவடால் அடிப்பதற்கு அடிப்படையும் கிடையாது; அருகதையும் கிடையாது. அத்வானி அமெரிக்கா சென்று திரும்பியது; இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயரும், அமெரிக்காவின் உள்துறைச் செயலர் காலின் பொவெல்லும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் வந்தது - இவையனைத்தும் காசுமீர் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடு அதிகரித்து வருவதையே காட்டுகின்றன. ஆனாலும், இந்தியாவோ காசுமீர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பை அனுமதிக்கமாட்டோம் என இரட்டை வேடம் போட்டு, போலித்தனமான தேசபக்தியில் மக்களை மூழ்கடிக்கப் பார்க்கிறது.

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்த சில நாட்களிலேயே ''இறுதிப் போர்'' என்று கூறி போர் தயாரிப்புகளை இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி முடுக்கி விட்டது. ஆனால் இன்றோ, போரைத் தன்னிச்சையாகத் துவக்கவும் வழியில்லாமல், பேச்சு வார்த்தைக்குப் போகவும் முடியாமல் ஆப்பசைத்த குரங்காக மாட்டிக் கொண்டு முழிக்கிறது. அமெரிக்கா சென்ற அத்வானி எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாக். தூண்டி விடுவது பற்றிய 'அசைக்க முடியாத ஆதாரங்களை' அமெரிக்காவிடம் கொடுத்த பின்னும் கூட, ''ஒரே நாளில் முஷாரப் தீவிரவாதிகளை ஒழித்துவிடுவார் என இந்தியா எதிர்பார்க்கக் கூடாது'' எனக் கூறி இந்தியாவின் மூக்கணாங்கயிறை அமெரிக்கா இறுக்கிப் பிடித்துவிட்டது.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் - அரபிக்கடல் வழியாக எண்ணெய்க் குழாய்கள் அமைக்கும் நோக்கத்திற்காக தெற்காசியாவில் தீவிரவாதிகளுக்கு

**நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் ''பயங்கரவாதிகள்'' என முத்திரை குத்தப்பட்டு வேட்டையாடப்படுகிறார்கள்; ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறும் அருண்ஷோரி மாண்புமிகு அமைச்சராக வலம் வருகிறார்.**

எதிரான உலகப் போரை நடத்திக் கொண்டிருக்கும் அமெரிக்கா, இந்தியாவை குறுக்கு சால் ஓட்ட ஒருக்காலும் அனுமதிக்காது. மேலும், பாக். அதிபர் முஷாரப் தீவிரவாதத்துக்கு எதிராக உரையாற்றிய பின் இந்தியா வந்த அமெரிக்க உள்துறைச் செயலர் காலின் பொவெல், படைகளை எல்லையில் இருந்து திரும்பப் பெற இந்தியாவிற்கு நெருக்கடி கொடுக்கத் துவங்கிவிட்டார்.

பாக். அதிபர் முஷாரப் ஜெய்ஷ் - இ - முகம்மது, லஷ்கர் - இ - தோய்பா என்ற இரு முசுலீம் தீவிரவாத அமைப்புகளை அமெரிக்காவின் அறிவுரையின்படி தடை செய்தது; பாகிஸ்தான் மண்ணில் தீவிரவாதத்துக்கு இடமில்லை எனப் பேசியது - இவற்றின் மூலம் சர்வதேச ஆதரவையும்; ''காசுமீர் ஒவ்வொரு பாகிஸ்தானின் இரத்தத்திலும் ஓடுகிறது'' எனப் பேசியதன் மூலம் உள்நாட்டு முல்லாக்களின் ஆதரவையும் பெற்று விட்டார்.

ஆனால், இந்து மதவெறியர்களுக்கு (ஒருபுறம்) எல்லையில் இருந்து படைகளைத் திரும்பப் பெற வேண்டிய ஏகாதிபத்தியங்களின் நிர்பந்தம்; அதேசமயம், ஒரு தோட்டா கூட சுடாமல், படைகளைத் திரும்பப் பெறுவது உள்நாட்டில் கௌரவப் பிரச்சினை மட்டுமல்ல; உ.பி. தேர்தலும் கவிழ்த்துவிடும் என்ற பயம் மறுபுறம். இதனால்தான் அவர்கள், பாக். அதிபர் தனது பேச்சை செயலில் காட்டட்டும் என வீறாப்பு பேசத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே, உ.பி. தேர்தல் முடியும்வரை எல்லையில் படைகள் இருக்கும்; இந்தியா - பாக். குழாயடிச் சண்டையும் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

**போர்வெறி - தேசியவெறிக் கூச்சலை எதிர்த்து இந்தியாவிலும் (மேலே) பாகிஸ்தானிலும் (கீழே) நடந்த ஆர்ப்பாட்டங்கள்.**






தேசிய வெறி - இந்து மத வெறி - இந்த இரண்டையும் கலந்து உ.பி. தேர்தலில் இந்துக்களின் ஓட்டுக்களை அறுவடை செய்யத் தயாராகி வருகிறது பா.ஜ.க. இந்து மத வெறியை எதிர்கொள்வதற்கே தடுமாறும் எதிர்க்கட்சிகளால் இந்தத் தேசவெறிக்கு முகம் கொடுக்கவே முடியாது. ஏனென்றால், காசுமீர் பிரச்சினை, தேசிய ஒருமைப்பாடு, எல்லை தாண்டிய பயங்கரவாதம் - இந்தப் பிரச்சினைகளில் இந்துமதவெறியர்களின் நிலைப்பாடும், அவர்களை எதிர்ப்பதாகக் கூறும் காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடும் ஒன்றுதான். காசுமீர் பிரச்சினையைத் தீர்க்க காசுமீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும் என்ற தீர்வை ஆளும் வர்க்கக் கட்சிகளான காங்கிரசும், பா.ஜ.க.வும் எந்தளவுக்கு வெறுத்து ஒதுக்குகிறார்களோ, அதே அளவிற்கு போலி கம்யூனிஸ்டுகளும் அத்தீர்வைச் சாடுகிறார்கள்.

அதனால்தான், காசுமீர் பிரச்சினையைத் தீர்க்க

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் சட்டக் கல்லூரி மாணவர் போராட்டம் :

# நம்பிக்கையான தொடக்கம்



கடந்த டிசம்பர் 7-ஆம் தேதியன்று சென்னை சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் போலீசார் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை எதிர்த்து சட்டக் கல்லூரி மாணவர்கள் போராடி வந்த நிலையில், உயர்நீதி மன்ற விசாரணைக் குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. சட்டக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் தமிழகமெங்கும் மாணவர்கள் மத்தியில் போலீசுக்கு எதிரான போராட்ட உணர்வைத் தூண்டிவிடவே, அரசு கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்தும் கல்லூரி விடுதிகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றியும் போராட்டத்தை முளையிலே கிள்ளியெறிய தமிழக அரசு முனைந்தது. மீண்டும் ஜனவரி 18-ஆம் தேதியன்று கல்லூரி திறக்கப்படும்போது, இந்த விவகாரம் அடங்கிப் போய்விடும் என்று ஆட்சியாளர்கள் மனப்பால் குடித்தனர்.

ஆனால், மாணவர்களின் போராட்ட உணர்வை ஒருபோதும் அடக்கிவிட முடியாது என்று ஆட்சியாளர்களின் முகத்திலே கரிபூசிவிட்டு, கல்லூரி திறக்கப்பட்ட 18-ஆம் தேதியன்றே சட்டக்கல்லூரி மாணவர்கள் பிற கல்லூரி மாணவர்களையும் அணிதிரட்டி சென்னையில் கண்டனப் பேரணியை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். தமிழகத்தின் பிற பெருநகரங்களிலும் 18-ஆம் தேதியன்று திட்டமிட்டபடி மாணவர்களின் கண்டனப் போராட்டம் நடந்தேறியுள்ளது.

போலீசு தாக்குதலை எதிர்த்து 9 நாட்களாக நடந்து வந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது ஏன்? கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில் மாணவர்களை எப்படி அணிதிரட்ட முடிந்தது? திட்டமிட்டபடி 18-ஆம் தேதியன்று கண்டனப் பேரணியை எப்படி வெற்றிகரமாக நடத்த முடிந்தது? என்று மாணவர் போராட்டக் குழுவினரிடம் கேட்டபோது,

''நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தித தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்த நிலையில், நீதிமன்ற பரிந்துரை வருவதற்கு முதல் நாளன்று இரவு இந்திய மாணவர் சங்கத்தைச் (S.F.I.) சேர்ந்தவர்கள், நாளை முதல் 'நாம் நூதன முறையில் போராட்டத்தை நடத்தலாம் என்று ஆலோசனை கூறினர். அதன்படி பிற கல்லூரி மாணவர்கள்ள அணிதிரட்ட நாங்கள் 6 முன்னணியாளர்களை அனுப்பினோம். இரவு முழுவதும் மழை மற்றும் கொசுத் தொல்லையால் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் காலையில் உறங்கிக் கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் போராட்டக் குழுவைக் கலந்தாலோசிக்காமல், இந்திய மாணவர் சங்கத்தினர் தொலைக்காட்சிகளுக்கு அழைப்பு விடுத்து போராட்டம் நிறுத்தப்படுவதாகத் தன்னிச்சையாக அறிவித்தனர்.

இதை வன்மையாகக் கண்டித்த நாங்கள், மாணவர்களின் ஒற்றுமையைக் குலைத்து விடக்கூடாது என்று கருதி போராட்டம் தற்காலிகமாகத் தான் முடிவடைகிறது. எங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கும் நாளேடுகளுக்கும் தெரிவித்தோம். ''தினமணி'' நாளேடு தவிர, பிற அனைத்து செய்தி ஊடகங்களும் இதை இருட்டடிப்பு செய்துவிட்டன.

இதே நேரத்தில் உயர்நீதி மன்ற விசாரணைக் குழுவின் பரிந்துரை வெளியானது. அது எங்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியதைக் கண்டு, நீதிமன்றத்தின் மீது வைத்திருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் எங்களிடமிருந்து போய்விட்டது. அநீதிக்கு எதிராகப் போராட வேண்டும் என்று தோன்றியதே தவிர, என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அனைத்துக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானிக்கலாம் என்று முடிவு செய்தோம். இக்கூட்டத்திலும் இந்திய மாணவர் சங்கத்தினரின் போராட்டத்தைத் திசை திருப்பும் முரண்பட்ட போக்கினால் எந்த முடிவும் எட்டப்படவில்லை. மீண்டும் டிசம்பர் 26 அன்று கூடி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், கல்லூரி விடுதிகள் மூடப்பட்டதாலும் போராட்டத்தை வழிநடத்திச் செல்ல கையாளப்பட்ட முறையில் சலிப்படைந்தும் பல மாணவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். இதனால் 26-ஆம் தேதி கூட்டம் நடைபெறவில்லை.

இந்நிலையில், தொடர்ந்து போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த முன்னணியாளர்கள் சென்னையிலேயே தங்கி விவாதித்தோம். ஓட்டுக்கட்சிகள் மீது நம்பிக்கை இழந்த நிலையில் 30-ம் தேதியன்று புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு.) அமைப்பினரைச் சந்தித்துப் பேசினோம். அவர்களது வழிகாட்டுதல்களை ஏற்று, கல்லூரி திறக்கப்படும் ஜனவரி 18-ஆம் தேதியன்று கண்டனப் பேரணி நடத்துவது; இதற்காக சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் மாணவர்களை அணி திரட்டுவது; பொது மக்களிடம் பிரச்சாரம் செய்து நிதி வசூலிப்பது எனத் தீர்மானித்தோம்.

அதன்படி நாங்கள் பொது மக்களிடம் பிரச்சாரம் செய்து நிதி வசூலிக்கப் புறப்பட்டோம். மக்கள் எங்களைப் பெரிதும் ஆதரித்துத் தங்களால் இயன்ற தொகையை அளித்து உற்சாகப்படுத்தினர். இதனால் எங்களிடமிருந்த தயக்கம் விலகி புதிய நம்பிக்கை பிறந்தது. இனி எந்தப் பிரச்சினையானாலும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று எங்களுக்கு உணர்த்தியது.

பேரணிக்கு அணிதிரட்ட நாங்கள் சென்றபோது பெரும்பாலான கல்லூரிகளில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் எங்கள் போராட்டத்தை வரவேற்று ஊக்கப்படுத்தினர். சில கல்லூரி முதல்வர்கள் வீண் பிரச்சினை வரும் என்று கருதி முதலில் எங்களை மறுத்தாலும், பின்னர் எங்கள் தரப்பு நியாயத்தை உணர்ந்து எங்களது பிரச்சாரத்துக்கு அவர்களே உறுதுணையாக நின்று ஆதரித்தனர்.

கடைசி கட்டமாக, பேரணிக்கு முதல்



படிப்பகம்

www.padippakam.com



சென்னையில்...

நாளன்று பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து அனைத்து செய்தி ஊட கங்களையும் அழைத்திருந்தோம். 13 பத்திரிகைகளின் செய்தியாளர்கள் வந்தி ருந்தனர். தொலைக்காட்சி நிறுவனங் களைச் சேர்ந்தோர் வரவில்லை. மறுநாள் - அதாவது 18-ஆம் தேதி நடைபெற வுள்ள போராட்டத்தை செய்தியாளர்களி டம் விளக்கினோம். மாணவர் பிரச்சினை என்பதால் சமூக அக்கறையுடன் செய்தியை வெளியிடுவார்கள் என்றும் நம்பினோம். ஆனால், இரண்டு பத்திரிகை கள் தவிர, வேறெந்த நாளேடும் செய்தியை வெளியிடவில்லை.

திட்டமிட்டபடி 18-ஆம் தேதியன்று காலை சட்டக் கல்லூரி அருகே மாண வர்கள் படிப்படியாகத் திரளத் தொடங் கினர். ஏறத்தாழ 150 பேருக்கு மேல் திரண் டதைக் கண்டதும் போலீசார் உள்ளே புகுந்து கலைத்துவிட முயற்சித்துத் தோல்வியடைந்தனர். நாங்கள் முழக்க மிட்டபடியே பேரணியைத் தொடங்கி யதும், போலீசார் ''கலைந்து செல்லுங்கள், இல்லையேல் கைது செய்வோம்'' என்று அச்சுறுத்தினர். ஆனால், போராட்டத்தில் உறுதியாக இருந்த மாணவர்கள் இதைப் பொருட்படுத்தாமல் பேரணியைத் தொடர்ந்தனர். பின்னர் 4 மாணவிகள் உள்ளிட்டு 53 முன்னணியாளர்கள் போலீ சாரால் கைது செய்யப்பட்டு கொண்டித் தோப்பு சமூகக் கூடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு எங்களிடம் முகவரி கேட்டுப் பதிவு செய்ய போலீசார் முற்பட்டனர். நாங்கள் ஒவ்வொருவராக எங்களது பெயரைக் கூறி, ''பாதுகாலவர்: கல்லூரி முதல்வர், டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி, சென்னை'' என்று முகவரி கொடுத்தோம். அனைவரும் இதேபோல முகவரி கொடுத்ததால், போலீசார் என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறினர். பின்னர், மாலை 5 மணியளவில் ''இது முன்னெச்சரிக்கை கைதுதான்; நீங்கள் போகலாம்'' என்று விடுதலை செய்தனர்.

இப்பேரணியில் பெருமளவில் மாண வர்கள் திரள உறுதியளித்திருந்தனர். இருப்பினும் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம், இப்பேரணி வெற்றிகரமாக நடைபெறவிடாமல் தடுக்கும் நோக்கத் துடன், 18-ஆம் தேதியன்று விடுமுறை அறிவிக்குமாறு தமிழக அரசு அனைத்துக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி கல்லூரிகளை மூடச் செய்து விட்டது.

சென்னை தவிர, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் கண்டனப் பேரணி, வகுப்புகளைப் புறக்க ணிப்பது, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்பது முதலான வழிகளில் போராட்டம் நடந்தேறியுள்ளது.

இப்போராட்டம் முழுமையாக வெற்றி அடையவில்லை எனினும் நம்பிக் கையுடன் அடியெடுத்து வைத்துள்ளோம். மாணவர்கள் ஒருங்கிணைந்த கண்ணோட் டத்தில் செயல்பட வேண்டிய அவசி யத்தை உணர்ந்துள்ளோம். சட்டக் கல்லூரி மாணவர் பிரச்சினை மட்டுமின்றி, கல்விக் கட்டண உயர்வு - பேருந்துக் கட்டண உயர்வு ஆகியவற்றுக்கு எதிராகவும், மாணவர்களின் ஜனநாயக உரிமைக்கான பேரவைத் தேர்தல் அனைத்துக் கல்லூரிக ளிலும் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடும் மாணவர்களை ஒருங் கிணைத்துப் போராட முயற்சித்து வரு கிறோம்'' என்று போராட்டக் குழுவினர் விளக்கினர்.

எந்தவொரு ஓட்டுக் கட்சியின் ஆத ரவோ தயவோ இல்லாமல் மாணவர்கள் இப்பேரணியை நடத்தியிருப்பது நம்பிக் கையான தொடக்கம். அதிலும் கல்லூரிக ளுக்கு விடுமுறை அளிக்கப்பட்ட சூழலில் தொடர்ந்து போராட்டத்துக்கு அணிதி ரட்டி, மக்கள் ஆதரவுடன் இப்பேரணியை நடத்திய செயலானது போராட்டக் குழுவின் முன்முயற்சியையும் உறுதிப் பாட்டையும் நிரூபித்துக் காட்டுகிறது. இது ஆரம்ப வெற்றிதான் எனினும், துரோக அமைப்புகளைப் புறக்கணித்து, புரட்சிகர அமைப்புகளில் இணைந்து செயல்படு வதன் மூலம் தமிழக மாணவர்கள் இறுதி வெற்றியை நிச்சயம் சாதிக்க முடியும்.

— நமது செய்தியாளர்கள்

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

பா.ஜ.க. கிளப்பிவிடும் போர்வெறிக் கூச்சலை எதிர்ப்பதாகக் கூறும் சி.பி.எம்., எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா பாதிக்கப்பட்டிருப்பதை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்ல பா.ஜ.க. ஆட்சி அமைத்த கமிட்டியில் ஒட்டிக் கொண்டது. இந்த எல்லை தாண்டிய பயங் கரவாதத்தைக் காட்டி தான் இந்து மதவெறிக் கும்பல் தனது போர்வெறியை நியாயப் படுத்துகிறது என்பதை சி.பி.எம். வசதியாக மறந்து விடுகிறது. தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் ஆளும் வர்க்கக் கும்பலின் தேசிய வெறிக்கு வால் பிடிக்கும் சமூக ஜனநாயகவாதக் கட்சிகளாக இரண்டு போலி கம்யூனிஸ்டுகளும் சீரழிந்து கிடக்கிறார்கள்.

இந்தப் போர்ச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய ஆளும் வர்க்கம் இரண்டு விசயங்களைச் சாதித்துக் கொள்ளத் துடிக்கி றது. ஒன்று, தெற்காசியாவின் பேட்டை ரவு டியாக மட்டுமல்லாது, ஆசியாவில் அமெ ரிக்காவின் அடியாளாகவும் செயல்பட இந்தியா விரும்புகிறது. இதற்காக காசுமீர் பிரச்சினையில் அமெரிக்கா திணிக்கும் தீர்வை மட்டுமல்லாது, அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கத்தையும் ஏற்றுக் கொள்ளவும் இந்தியா தயாராகி வருகிறது. இதன் தொடக்கமாக, இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டஸ் அமெரிக்கா சென்ற பொழுது, இந்தியக் கப்பற்படை மலாக்கா ஜலசந்தியில் அமெரிக்க கப்பல்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு தரும் முடிவு எடுக்கப் பட்டுள்ளது. சீனாவின் கம்யூனிச பூச்சாண் டியைக் காட்டி இந்த அமெரிக்க இராணுவ மேலாதிக்கம் நியாயப்படுத்தப்படுகிறது.

இரண்டாவதாக, போர் அபாயத்தைக் காரணமாகக் காட்டி வரிகளை ஏற்றி, கஜா னாவை நிரப்பிக் கொள்ளவும் திட்டம் போடுகிறது இந்து மதவெறிக் கும்பல். போர் தொடங்குவதற்கு முன்பே பெட்ரோ லியப் பொருட்களின் மீது 1500 கோடி ரூபாய் அளவிற்கு தலால் வரியை உயர்த் திய அரசு, பட்ஜெட்டில் மிகப் பெரும் பொருளாதாரத் தாக்குதல்களைத் தொடுக்கத் தயங்காது.

''இந்தப் போர் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுதலை செய்யும்'' என்றார் வாஜ்பாயி. ஆனால், இதற்கு நேர்மாறாக, ஒருபுறம் தேசப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆளும் கும்பலின் பொரு ளாதார நெருக்கடிகள் மக்களின் மீது ஏற்றி வைக்கப்படுகிறது. இன்னொரு புறமோ, ''உலக பயங்கரவாத எதிர்ப்பு'' என்ற அமெ ரிக்காவின் போர்த் தந்திரக் கூட்டணியில் இந்தியாவை இணைக்க முயலுவதன் மூலம், நாட்டையும் மக்களையும் மேலும் பல பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நிரந் தர இலக்காக்குகிறது.

● முத்து


படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் மேலாண்மையில் எதிரிகள் சறுக்குப் பாதையில் புலிகள்

இலங்கையில் ரணில் விக்ரமசிங்கே தலைமையிலான புதிய அரசு பதவியேற்றுள்ளதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்குமிடையே போர் நிறுத்தமும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளும் மீண்டும் தொடங்கியுள்ளன. மீண்டும் நார்வே தூதுக் குழுவை நடுவராக இருதரப்பினரும் அழைத்துள்ளனர். இப்படி இருதரப்பும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு முயற்சிப்பது முதன்முறையாக நடப்பதல்ல. ஏற்கனவே 5 முறை இப்படி பேச்சு வார்த்தைகள் நடந்து தோல்வியில் முடிந்த நிலையில், இப்போது 6-வது முறையாக புதிய ஆட்சியில் மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் தொடர்கின்றன.

சிங்கள இனவெறி அரசு தனது மொத்த வருவாயில் கால் பங்கிற்கும் மேலாக இராணுவத்துக்குச் செலவிட்டு தமிழீழத்தின் மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போரினால் மீளமுடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளிக்கிறது. இன்னுமொரு போரைத் தொடர வேண்டுமானால் கடந்த ஆண்டில் செலவிட்டதைவிட மேலும் பல கோடிகளை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி எதிர்திசையில் சரிந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில், போரினால் மட்டுமே ஈழப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது என்ற நிலைக்கு சிங்கள ஆளும் வர்க்கங்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளன.

இதேபோல, விடுதலைப் புலிகளும் இராணுவத் தீர்வினால் மட்டுமே ஈழ விடுதலையைச் சாதிக்க முடியாது என்ற நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில், அமெரிக்காவில் செப்டம்பர் 11 அன்று நடந்த பயங்கர வாதத் தாக்குதலைத் தொடர்ந்து ஏகாதிபத்திய உலகில் பயங்கரவாத எதிர்ப்பு எனும் பொதுக் கருத்து வலுவாக உள்ளது. இந்தியா, அமெரிக்கா மட்டுமின்றி ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளும் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துள்ளன. இவ்வாண்டு தொடக்கத்தில் பிரிட்டனும் தனது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் புலிகளுக்குத் தடை விதித்துள்ளது. இந்நிலைமைகளின் காரணமாகவே, புலிகளும் சமாதான பேச்சு வார்த்தைகளை ஏற்க வேண்டிய நிலைக்குக் கட்டாயமாகத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன்படியே, கடந்த ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதி நடந்த ''மாவீரர் தின''த்தன்று புலிகளின் தலைவர் பிரபாகரன், சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்குத் தாங்கள் எப்போதுமே தயாராக இருப்பதாகவும் தமிழ் மக்களின் விருப்பம் பிரிவினைவாதமோ தீவிரவாதமோ அல்ல என்றும் சமாதானத்தை விரும்பும் தமிழீழ மக்கள் தற்போதைய நிலையில் ஓர் இடைக்கால ஏற்பாட்டையே எதிர்பார்க்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். நாடாளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான ரணில் விக்ரமசிங்கேயும் போர் நிறுத்தம் - சமாதான பேச்சு வார்த்தை - இடைக்கால நிர்வாகம் - அதிகாரப் பரவல் எனும் திட்டத்தை தனது தேர்தல் பரப்புரைகளில் குறிப்பிட்டார். தேர்தலில் புலி ஆதரவு பெற்ற தமிழர் தேசியக் கூட்டணிக் கட்சிகளும் ரணில் விக்ரமசிங்கேயின் ஐக்கிய தேசிய முன்னணியை ஆதரித்து நின்றன.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து ரணில் விக்ரமசிங்கே பிரதமராகப் பதவியேற்றதும், புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை மார்ச் மாதத்தில் தொடங்கும் என்று அறிவித்து, இதற்கென அமைச்சரவைக் குழுவையும் நிறுவி ஆயத்த ஏற்பாடுகளை முடுக்கிவிட்டார். புலிகளும் கிறிஸ்துமஸ் முதலாக ஒரு மாத காலத்திற்கு நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்து, சமாதான பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளை வரவேற்பதாகக் கூறினர். அதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கூட்டணி அரசும், தானும் போர் நிறுத்தத்தைக் கடைபிடிப்பதாக அறிவித்து, கடந்த ஏழாண்டுகளாக தமிழீழப் பகுதிகளில் விதிக்கப்பட்டிருந்த போக்குவரத்து - பொருளாதாரத் தடைகளை நீக்கி சில சலுகைகளையும் வழங்கியுள்ளது. தற்போது புலிகள், போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டித்துள்ளனர்.

புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தை முயற்சிகளுக்கு முன்பாக, இந்தியாவின் ஒப்புதலையும் ஆதரவையும் பெற வாஜ்பாயியைச் சந்திக்கும் இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கே.



இதற்கிடையே, பிரதமராகப் பதவியேற்றதும் டெல்லிக்கு வந்த ரணில் விக்ரமசிங்கே, இந்திய ஆட்சியாளர்களைச் சந்தித்து இச்சமாதான முயற்சிகளுக்கு இந்திய ஆட்சியாளர்களின் ஒப்புதலையும் ஆதரவையும் பெற்றுச் சென்றுள்ளார். எதிர்க் கட்சித் தலைவியும் இலங்கை அதிபருமான சந்திரிகா, நேபாளத் தலைநகரில் அண்மையில் நடைபெற்ற ''சார்க்'' மாநாட்டில், தானும் இச்சமாதான முயற்சிகளை வரவேற்று ஆதரிப்பதாகத் தெரிவித்தள்ளார்.

மொத்தத்தில் தெற்காசியப் பிராந்திய மேலாதிக்க வல்லரசான இந்தியா மட்டுமின்றி, இலங்கையின் ஆளும் வர்க்கங்களும் ஒன்றுபட்டு இச்சமாதான முயற்சியில் இறங்கியுள்ளதோடு, உலக நாட்டாண்மைக்காரனாகிய அமெரிக்காவின் பதிலியாகச் செயல்படும் நார்வே தூதுக்குழுவை நடுவராக மீண்டும் அழைத்துள்ளன. இவையனைத்தும் சிங்கள ஆளும் வர்க்கங்கள் அரசியல் ரீதியில் சாதகமான நிலையிலும் வலுவான மேலாண்மையிலும் உள்ளதையே காட்டுகின்றன. இலங்கையின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாகாண சுயாட்சி எனும் அதிகாரப் பரவல் திட்டத்தைத் திணிப்பதே சிங்கள - இந்திய ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையக் கட்டிடம் தகர்க்கப்பட்ட செப்டம்பர் 11 நிகழ்ச்சிக்குப் பிறகு பயங்கரவாதப் பீதியூட்டி புரட்சிகர - ஜனநாயக அமைப்புகள் மற்றும் விடுதலை இயக்கங்கள் மீது பாசிசத் தாக்குதலை ஏவுவது ஏகாதிபத்திய உலகின் பொதுப் போக்காக உள்ள நிலையில், சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் நயவஞ்சகமாகத் திணிக்க எத்தனித்துள்ள தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிக்கும் ஆற்றல் புலிகளுக்கு அறவே கிடையாது. ஈழத் துரோகிகளைப் புறக்கணித்து, தமிழரின் சுயநிர்ணய உரிமையை மையமாகக் கொண்ட ''திம்பு'' கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை ஆதரித்துப் போராடி வரும் ஈழப் போராளி குழுக்கள் மற்றும் ஜனநாயக இயக்கங்களை ஈழத்தில் இயங்க விடுவதும் ஐக்கியப்படுவதும்தான்


படிப்பகம்

www.padippakam.com

சிங்களஇனவெறி அரசின் சதித் திட்டங்களை முறியடித்து அரசியல் மேலாண்மையைப் பெற்றுத் தரும். ஆனால் புலிகளோ, தமது விசுவாச தமிழர் கட்சிகள் அல்லாத அனைத்து போராளிக் குழுக்களையும் முற்போக்கு - ஜனநாயக இயக்கங்களையும் தடை செய்து ஒடுக்கி, தங்களை மட்டுமே தமிழீழ மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகளாக நியமித்துக் கொண்டதன் விளைவாக, இன்று நெருக்கடியில் சிக்கி, வேறு வழியின்றி மீண்டும் இந்தியாவின் தயவுக்கும் மேலாதிக்கத் தலையீட்டுக்கும் மன்றாடி நிற்கின்றனர்.



வன்னிக் காட்டுக்குள் புலிகளின் மறைவிடத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நார்வே தூதுக் குழுவினர்.

புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நடத்தத் திட்டமிட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இந்தியா உதவ வேண்டும் என்றும், இச்சமாதான பேச்சு வார்த்தையை நடத்துவதற்கு வசதியாக இலண்டனிலுள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் சென்னையில் தங்க அனுமதிக்க வேண்டும் என்றும், பேச்சு வார்த்தையை சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம் ஆகிய ஏதாவதொரு தென்னிந்திய நகரத்தில் நடத்த இந்தியா அனுமதிக்க வேண்டும் என்றும் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். "அமைதிப் பேச்சு வார்த்தைக்கு முழு ஆதரவு அளித்துள்ள இந்தியா, இந்த உதவியையும் செய்ய வேண்டும்; இந்த ஏற்பாட்டையும் இந்தியாவின் முக்கிய பங்கையும் இலங்கை அரசு நிராகரிக்காது என்றே நம்புகிறோம்" என்கிறார், புலிகளின் அரசியல் பிரிவு தலைவரான தமிழ்ச் செல்வன். சர்க்கரை நோயினாலும் சிறுநீரகக் கோளாறினாலும் அவதிப்படும் ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெறவும், பேச்சு வார்த்தைகளின்போது வன்னிக் காட்டுக்குள் சென்று பிரபாகரனுடன் கலந்தாலோசனை செய்யவும் சென்னையில் அவர் தங்குவது வசதியாக இருக்கும் என்று புலிகள் இதற்குக் காரணம் கூறுகின்றனர்.

ஆண்டன் பாலசிங்கம் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்க வேண்டியிருப்பதையும், அவரது உடல் நிலையையும் ஒரு சாக்காக வைத்து, இந்தியாவின் தலையீட்டையும் மேலாதிக்கத்தையும் வலிந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் இந்தியாவை மீண்டும் ஈழ விவகாரத்தில் இழுப்பதே புலிகளின் உண்மையான நோக்கமாக உள்ளது. புலிகளின் கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் இந்தியா ஏற்குமானால், இந்தியாவில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையானது நடைமுறையில் கைவிடப்படுவதோடு, இந்தியாவும் இப்பேச்சு வார்த்தைகளில் 'பார்வையாளராக' பங்கேற்பதாகிவிடும். இந்த எதிர்பார்ப்புகளோடுதான் பாலசிங்கத்தை சென்னையில் தங்க வைக்கும் கோரிக்கையை புலிகள் வலிந்து முன்வைக்கின்றனர்.

புலிகளின் கோரிக்கை பற்றி பத்திரிகைகளில் செய்தி வெளிவரத் தொடங்கியதுமே, பயங்கரவாதப் பீதியூட்டி, புலிகளை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது என்று பார்ப்பன பாசிஸ்டுகளான துக்ளக் "சோ", ஜெயலலிதா, சுப்பிரமணி சுவாமி கும்பல்களும், இளங்கோவன், வாழப்பாடி, வாசன் ஆகிய காங்கிரசு கழிசடைகளும் பெருங்கூச்சல் போட்டனர். பினாமி அரசின் முதல்வர் பன்னீர் செல்வம், புலிகளின் பயங்கரவாதப் படுகொலைகளைப் பட்டியல் போட்டு ஒருக்காலும் புலிகளை அனுமதிக்கக் கூடாது என்று மைய அரசுக்குக் கடிதம் எழுதினார். அதைத் தொடர்ந்து, தமிழக அரசின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்று ஆதரிப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் ஐ.டி. சாமி அறிவித்துள்ளார்.

இந்திய ஆட்சியாளர்கள் புலிகளின் கோரிக்கையை நிராகரிக்கக் காரணம், ஈழ விவகாரத்தில் மீண்டும் இந்தியா தலையிட விரும்பவில்லை என்பதல்ல; இந்தியாவின் தலையீட்டையும் மேலாதிக்கத்தையும் ஏற்றுக் கொள்வதோடு, சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் முன் வந்துள்ள புலிகளை, தமது கோரிக்கைகளிலிருந்து இன்னும் கீழே இறங்கிவரச் செய்ய நிர்ப்பந்திக்கும் அச்சுறுத்தல் உத்தியே இது.

இச்சதியை அம்பலப்படுத்தி முறியடிக்கத் திராணியற்று புலி வேசம் கட்டி ஆடும் வை.கோ.-வும் இராமதாசும், புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரினாலும் பா.ஜ.க. கூட்டணியையும் பதவியையும் பாதுகாத்துக் கொள்வதே குறியாகி ஈழ விவகாரத்தில் மைய அரசின் முடிவுகளை ஏற்பதாகவே கூறுகின்றனர். கருணாநிதியோ, பயங்கரவாதப் புலிகளிடமிருந்து ஏற்கனவே விலகி நிற்பதாக அறிக்கை விடுத்து, மைய அரசின் நம்பகமான விசுவாசியாகக் காட்டிக் கொள்கிறார். இந்நிலையில் தி.க. வீரமணியும் நெடுமாறனும் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய - மாநில அரசுகள் மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டும் என்று இந்திய மேலாதிக்கவாதிகளின் தலையீட்டை வெளிப்படையாகவே வரவேற்கின்றனர்.

மறுபுறம், சமாதானப் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு மீண்டும் இராணுவத் தீர்வுதான் ஒரே வழி என்று புலிகள் போரில் இறங்குவார்களானால், தற்போதைய நிலைமையில் அது தற்கொலைப் பாதையாகவே முடியும். ஏனெனில், குறிப்பாக செப்டம்பர் 11 நிகழ்ச்சிக்குப் பிறகு உலகின் எல்லா முனைகளிலும் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அமெரிக்க வல்லரசு தனது படைகளை அனுப்பி வெளிப்படையாகவே ஆக்கிரமித்து வருகிறது. அமெரிக்கா தலைமையில் ஓரணியில் திரண்டு நிற்கும் உலகின் பல நாடுகளது பிற்போக்கு - பாசிச ஆளும் வர்க்கங்களும் பயங்கரவாதப் பீதியூட்டி புரட்சிகர - ஜனநாயக அமைப்புகளையும் விடுதலை இயக்கங்களையும் மிருகத்தனமாக ஒடுக்கி வருகின்றன. இந்நிலையில் புலிகள் மீண்டும் போரில் இறங்கி நெருக்கடி முற்றினால், ஏற்கனவே பயங்கரவாத அமைப்பு என்று தடை செய்யப்பட்டுள்ளதைக் காரணம் காட்டி, அமெரிக்காவின் ஆசியுடன் இந்திய - சிங்களப் படைகளோடு பன்னாட்டுப் படைகளும் ஈழத்தில் குவிக்கப்படலாம் என்ற அபாயமும் நிலவுகிறது.

இப்படி எல்லா வகையிலும் எதிரிகளின் கை மேலோங்கி உள்ளது. அதேசமயம் அரசியல் அடிப்படையில்லாத புலிகளின் இராணுவ வாதமும், புலிகள் பின்பற்றி வரும் ஜனநாயக விரோத பாசிசக் கொள்கையும் ஈழ விடுதலைப் போரை சறுக்குப் பாதையில் தள்ளிவிட்டுள்ளது.

● தமிழ்மணி



படிப்பகம்

www.padippakam.com

## மறுகாலனியாதிக்கம் :

# அமெரிக்காவின் புதிய உத்திகள்

வெல்லெஸ்லி பிரபு - ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பிரிட்டிசு காலனியாதிக்க ஆட்சியின் தலைமை ஆளுநராக (1798 முதல் 1805 வரை) இருந்தவர். அவர் இந்தியாவில் தனது காலனிய ஆட்சியை நிலைநாட்ட துணைப்படைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இத்திட்டத்தில் கையொப்பமிடும் இந்தியாவிலுள்ள சமஸ்தான அரசுகள், ஆங்கிலேயப் படை ஒன்றையும் ஆங்கிலேயப் பிரதிநிதி ஒருவரையும் 'நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும்; இதற்கான செலவுகளையும் அந்த அரசுகளே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

இத்திட்டத்தை ஏற்க மறுக்கும் சமஸ்தான அரசுகள் மீது ஆங்கிலேயர்கள் படையெடுப்பார்கள். திட்டத்தை ஏற்றுக் கொண்டால், ஆங்கிலேயர்களுக்கு சமஸ்தான அரசு அடிமைப்படுவதோடு, அதன் படைகளுக்கும் தண்டச் செலவு செய்ய வேண்டும். இப்படி இரட்டை நுகத்தடியில் சிக்கிக் கொண்டு பல சமஸ்தான அரசுகள் வீழ்ந்ததைத் தொடர்ந்து ஆங்கிலேயர்கள் படிப்படியாக தமது காலனிய ஆட்சியை விரிவாக்கினர். பின்னர் 1848-ஆம் ஆண்டில் தலைமை ஆளுநராக வந்த டல்ஹௌசி பிரபு என்ற காலனியாதிக்கவாதி, நல்லாட்சியற்ற நாடுகளை பிரிட்டிசு இந்தியாவுடன் இணைக்கும் திட்டத்தைக் கொண்டு வந்து அன்றைய அயோத்தி நவாப் ஆட்சியையும், பஞ்சாபையும் ஆக்கிரமிப்புப் போர் மூலம் கைப்பற்றி காலனிய ஆட்சியை விரிவாகவும் ஆழமாகவும் நிறுவினார்.

இவையெல்லாம் 200 ஆண்டுகளுக்கு முன்பு காலனியாதிக்கவாதிகள் ஒரு நாட்டை ஆக்கிரமித்து அடிமைப்படுத்த கையாண்ட உத்திகள். இவையெல்லாம் பள்ளிக்கூட பாடப் புத்தகங்களில் கூறப்படும் பழைய வரலாறு என்று ஒதுக்கி விடமுடியாது. ஏனென்றால் அதே வரலாறு தொடர்கிறது. இன்றும் காலனியாதிக்கவாதிகள் அதே ஆக்கிரமிப்பு உத்தியை புதிய வடிவில் தொடருகிறார்கள்.

அன்று பிரிட்டிசு ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவில் காலனியாதிக்கத்தை நிறுவிய காலத்தில், துணைப் படைத் திட்டத்தின் மூலம் தமது ஆக்கிரமிப்புப் படைகளுக்கான செலவையும் இந்திய சமஸ்தான அரசுகளே செலுத்த வேண்டுமென்றனர். இன்று அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் ஒரு நாட்டை ஆக்கிரமித்து, தமது விசுவாசிகளின் ஆட்சியை நிறுவிய பிறகு, இப்போரில் தமக்கு ஏற்பட்ட செலவையும் அந்த நாடுதான் தரவேண்டுமென்கின்றனர். இத்தொகையை ஐ.எம்.எப்; உலக வங்கி ஆகிய தமது ஆதிக்கக் கருவிகள் மூலம் வேறு வழிகளில் வசூலித்துக் கொள்வதோடு, தமது மேலாதிக்கத்தையும் நிறுவிக் கொண்டு இரண்டு வழிகளில் தமது கொள்ளையைத் தொடர்கின்றனர். இதற்கு அண்மைக்கால உதாரணமாக யுகோஸ்லாவியா திகழ்கிறது.

ஐரோப்பாவின் பால்கன் பிராந்தியத்திலுள்ள யுகோஸ்லாவியா 1990-களில் தனித்தனி தேசிய இன அரசுகளாகப் பிளவுபட்டபோது, பெரும்பான்மை இனத்தவரான செர்பியர்கள், மிகப்பெரிய பிராந்தியத்தை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ள பிற சிறுபான்மை இனத்தவர் மீது பாசிச காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். குறிப்பாக, கொசாவோவில் அல்பேனியச் சிறுபான்மையினர் மீதான செர்பியர்களின் கொலைவெறியாட்டம் தலைவிரித்தாடிய போது - ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகள் யுகோஸ்லாவியா மீது போர் தொடுத்தன.

ஏறத்தாழ 75 நாட்களுக்கு மேல் நடந்த இப்போருக்குப் பின்னர் நடந்த அதிபர் தேர்தலில் முந்தைய போலி சோசலிச அதிபர் மிலோசெவிச்சுக்கு எதிராக தமது விசுவாசியான கோஸ்டுனிகாவை நிறுத்தி ஏகாதிபத்தியங்கள் வெற்றிப் பெறச் செய்தன. அதன் பிறகு முன்னாள் அதிபர் மிலோசெவிச்சும் அவரது ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டதோடு, போர்க் குற்றங்களுக்காக விசாரணையும் நடந்து வருகிறது.

யுகோஸ்லாவிய பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குத் திருப்புதல், நாட்டைப் புனரமைப்பது என்ற பெயரில் ஏகாதிபத்திய நாடுகளும் உலக வங்கியும் ஐ.எம்.எப்-பும் பெருமளவு கடனுதவி செய்ய ஓடோடி வந்தன. எந்த நாடுகள் யுகோஸ்லாவியா மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தினவோ, அந்த நாடுகள்தான் இப்போது கடனுதவி செய்யக் கிளம்பின.

உண்மையில் அது மனிதாபிமான அடிப்படையில் தரப்பட்ட கடனுதவி அல்ல; அது பகற்கொள்ளைக்கான ஆயுதம். எந்தநாடு கடன் கொடுக்கிறதோ அந்த நாட்டின் ஏகபோக நிறுவனங்கள்தான் போரினால் நாசமாக்கப்பட்ட யுகோஸ்லாவியாவில் சீரமைப்புப் பணிகளைச் செய்யும் என்று ஒப்பந்தம் போடப்பட்டது. அதைத் தொடர்ந்து பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் யுகோஸ்லாவியாவில் படையெடுத்து, மாதத்துக்கு 100 டாலருக்கும் குறைவான அற்பக்கூலிக்கு யுகோஸ்லாவிய மக்களையே வேலைக்கு அமர்த்திக் கொண்டு, மிக அதிகமான ஒப்பந்தப் புள்ளிக்கு ஏலம் எடுத்து, சீரமைப்புப் பணிகளின் பெயரால் அவை பகற்கொள்ளையைத் தொடர்கின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், மறுசீரமைப்புக்காக ஏகாதிபத்திய நாடுகள் கொடுத்த கடன் தொகையானது, பன்னாட்டு நிறுவனங்களின் பைகளுக்கே திரும்பச் செல்கிறது.

இதுவும் போதாதென்று ஐ.எம்.எப். எனும் ஆதிக்கக் கருவியைக் கொண்டும் ஏகாதிபத்திய வல்லரசுகள் யுகோஸ்லாவியாவை ஆட்டிப் படைக்கின்றன யுகோஸ்லாவி

அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகள் யுகோஸ்லாவியா மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போரின் பேரழிவு; இப்போருக்கான செலவுகளையும் யுகோஸ்லாவியாதான் தரவேண்டும் என்று மேலாதிக்கம் செய்கிறது அமெரிக்கா.





படிப்பகம்

www.padippakam.com

யாவின் வெளிநாட்டுக் கடன் 1400 கோடி டாலரைத் தாண்டி விட்டது. இதில் பெரும் அளவு அமெரிக்காவின் சிட்டி வங்கியும், ஜெர்மனியின் வெஸ்ட்டாட்ஷே வங்கியும்தான் கொடுத்துள்ளன. அக்கடனைத் திருப்பிச் செலுத்தவும் வட்டி கட்டவும்தான் ஐ.எம்.எப். கடனுதவி செய்கிறது. ஆனால் அந்நாட்டைச் சீரமைக்கவே ஐ.எம்.எப். பெருமளவு கடனுதவி செய்து வருவதாக ஏகாதிபத்திய பத்திரிகைகள் மாய்மாலம் செய்து வருகின்றன. கடனுதவியைத் தொடர்ந்து ஐ.எம்.எப் விதிக்கும் கட்டளையால் யுகோஸ்லாவியாவில் அரசுத் துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்குத் தனியாருக்கு விற்கப்படுவதோடு, தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள். மானியங்கள் வெட்டப்பட்டு, கட்டண உயர்வாலும் விலையேற்றத்தாலும் யுகோஸ்லாவிய மக்கள் போருக்குப் பின்னரும் மீளமுடியாத துயரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்கா தலைமையிலான ''நேட்டோ'' படைகளின் தாக்குதலுக்கும் போருக்குமஇழப்புகளுக்கும் யுகோஸ்லாவிய நாடுதான் பொறுப்பேற்க வேண்டும் என்கிறது அமெரிக்க வல்லரசு. 1999-ஆம் ஆண்டில் யுகோஸ்லாவியா மீதான போருக்கு ஏறத்தாழ 5000 கோடி டாலர் செலவிட்டதாக ''நேட்டோ'' நாடுகள் கூறுகின்றன. இத்தொகை முழுவதையும் யுகோஸ்லாவிய நாடுதான் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கின்றன ஏகாதிபத்திய வல்லரசுகள். அதாவது யுகோஸ்லாவியா மக்களைக் குண்டுவீசிக் கொன்றதற்காக, நாட்டைப் பேரழிவில் தள்ளியதற்காக, பன்னாட்டு அமைதிப் படைகளைக் கொண்டு ஆக்கிரமித்ததற்காக யுகோஸ்லாவிய மக்களே ஏகாதிபத்தியங்களுக்கு தண்டம் கட்ட வேண்டும்!

அதேசமயம், ஏகாதிபத்தியங்களின் போர்த்தாக்குதலால் யுகோஸ்லாவியாவுக்கு 4000 கோடி டாலருக்கு மேல் பொதுச்சொத்துகள் நாசமாகியுள்ளன. இதுதவிர, குண்டு வீச்சுத் தாக்குதலால் உயிரிழந்தவர்கள் போக பல ஆயிரக் கணக்கானோர் நடைபிணங்களாக அவதிப்படுவதோடு, சிறிய அளவிலான அணுகுண்டுத் தாக்குதலின் கதிரியக்கப் பாதிப்புகளால் பல ஆயிரக் கணக்கானோர் புற்றுநோய் தாக்கி சிறுகச் சிறுக செத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய பேரழிவை விளைவித்த ஏகாதிபத்திய பயங்கரவாதிகள் யுகோஸ்லாவியாவுக்கு சல்லிக் காசு கூட நிவாரணமாகத் தரமாட்டோம் என்று கொக்கரிக்கின்றனர்.

மொத்தத்தில், போரினால் யுகோஸ்லாவியா நிலைகுலைந்து கிடப்பதோடு, போர்த் தாக்குதல் நடத்திய ஏகாதிபத்தியங்களுக்கு தண்டம் செலுத்திக் கொண்டு, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பகற்கொள்ளைக்குத் தாராள அனுமதி அளித்துக் கொண்டு, பெயரளவிலான சுயாதிபத்திய உரிமையையும் இழந்து ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடிமை நாடாக மாறிக் கொண்டிருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் வளர்ச்சியடைந்த ஒரு நாட்டுக்கே இந்த கதி என்றால், ஏழை நாடுகளின் கதியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

* * *

ஏப்ரல் 30, 1975. ஏறத்தாழ 27 ஆண்டுகளுக்கு முன்பு சின்னஞ்சிறு நாடான வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நாள். அந்நாளில்தான் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்த தலைநகர் சைகோன்




**புதிய வடிவில் தொடரும் ஆக்கிரமிப்புப் போர்: அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்த வியட்நாமில் கொடிகட்டிப் பறக்கும் அமெரிக்க ஏகபோக மின்சாரக் கம்பெனி.**

(இன்று ஹோசிமின் நகர்) கம்யூனிஸ்ட் போராளிகளிடம் வீழ்ச்சியடைந்தது. அமெரிக்காவின் பொம்மை அரசின் தளபதி துவாங்வான்மின் அந்நாளில்தான் சரணடைந்தான். ஒரு சிறிய நாடு மிகப்பெரிய ஏகாதிபத்திய வல்லரசை வீழ்த்த முடியும் என்று அந்நாளில் நிரூபிக்கப்பட்டது. வீரஞ்செறிந்த வியட்நாமின் விடுதலை உலகெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் அளித்தது.

அன்று வீரத்தின் விளைநிலமாக விளங்கிய வியட்நாமின் கட்சியையும் ஆட்சியையும் படிப்படியாக கம்யூனிசத் துரோகிகள் கைப்பற்றிய பிறகு, இன்று அது மீண்டும் அமெரிக்காவின் மறுகாலனியாக மாறி வருகிறது. இந்தியாவைப் போன்றே, வியட்நாமும் உலக வங்கி - ஐம்.எம்.எப். கடன் பொறியில் சிக்கித் தவிக்கிறது. வியட்நாம் மீதான மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டுமெனில், வியட்நாமின் அரசுத் துறை போலி சோசலிசப் பொருளாதாரத்தை அகற்ற வேண்டும்; தனியார்மய - தாராளமய 'சுதந்திர' சந்தைப் பொருளாதாரத்தை நிறுவ வேண்டும் என ஐ.எம்.எப். கட்டளையிட்டது. இதை ஊக்குவிப்பதற்காக 200 கோடி டாலர் அளவுக்கு 1994-ஆம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது.

இக்கடனைக் கொடுக்கும் முன்பாக உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் இன்னொரு பேரத்தை வியட்நாம் போலி கம்யூனிச ஆட்சியாளர்களுடன் திரைமறைவில் நடத்தின. 1973-ஆம் ஆண்டின் பாரீஸ் சமாதான உடன்படிக்கையின்படி, அமெரிக்க வல்லரசு வியட்நாம் மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போரினால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு நட்ட ஈடாக 420 கோடி டாலர் தொகையை வியட்நாமுக்குத் தர வேண்டும். ஆனால் இன்றுவரை அமெரிக்கா அத்தொகையைத் தரவில்லை. அதேசமயம், வியட்நாமில் முந்தைய அமெரிக்க பொம்மை அரசு (சைகோன் அரசு) வாங்கிய கடன்களை எல்லாம் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று உலக வங்கியும் ஐ.எம்.எப்.-பும் வியட்நாமுக்கு நிபந்தனை விதித்தன. இதை ஏற்றுக் கொண்டால்தான் தனியார்மய - தாராளமய பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குக் கடன் தர முடியும் என்று எச்சரித்தன. வியட்நாமின் போலி கம்யூனிசத் துரோகிகள் இந்தக் கட்டளையையும் ஏற்றுக் கொண்டு நாட்டை மீண்டும் அமெரிக்காவுக்கு அடிமைப்படுத்தியுள்ளனர்.

அன்றைய அமெரிக்க பொம்மை அரசு வாங்கிய கடன்கள் எல்லாம் வியட்நாமை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அமெரிக்கப் படைகளின் பராமரிப்புக்கும் போர்ச் செலவுகளுக்குமே வாங்கப்பட்டன. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டு ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பிறகு, புதிய ஆட்சியாளர்களிடம் பழைய கடன்களை வசூலிக்கும் தண்டல்காரனாக ஐ.எம்.எப்.-பும் உலக வங்கியும் செயல்படுகின்றன. அதாவது, அமெரிக்க வல்லரசு வியட்நாம் மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போருக்கும் அதன் படைகளின் பராமரிப்புச் செலவுகளுக்கும் வியட்நாம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்கிறது அமெரிக்கா.

தனது காலனியாதிக்கத்தை நிலைநாட்டி மீண்டும் வியட்நாமை அடிமைப்படுத்தும்


படிப்பகம்

www.padippakam.com

நோக்கத்துடன் ஏராளமான தன்னார்வக் குழுக்களையும் மனித உரிமை அமைப்புகளையும் வியட்நாமில் உருவாக்கி அமெரிக்கா வளர்த்து வருகிறது. அமெரிக்க நாடாளுமன்றம் இத்தன்னார்வக் குழுக்களுக்கும் ''ரேடியோ ஆசியா'' என்ற வானொலி ஒலிபரப்பின் மூலம் வியட்நாமுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவும் கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கியுள்ளது. வியட்நாமில் 1975-இல் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் அதிகாரபூர்வமாக முடிவுக்கு வந்ததே தவிர, இன்னமும் காலனியாதிக்கப் போர் புதிய வடிவில் தொடர்கிறது. இராணுவ ரீதியாக வியட்நாமில் நாங்கள் தோல்வியடைந்தாலும், அரசியல் - பொருளாதார ரீதியாக இறுதியில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிடுகின்றனர்.

இதேபோல, மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான நிகரகுவாவில், அமெரிக்கா நடத்திய பயங்கரவாதப் போருக்கும் பேரழிவுக்கும் நட்ட ஈடாக 1200 கோடி தர வேண்டும் என்று ஹேக் நகரிலுள்ள அனைத்துலக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இன்றுவரை அமெரிக்கா, நிகரகுவாவுக்கு சல்லிக் காசு கூட கொடுக்கவில்லை. அதேசமயம், நிகரகுவாவின் அமெரிக்க எதிர்ப்பு சாண்டினிஸ்டா அரசைக் கவிழ்க்க தனது கூலிப் படையான ''காண்ட்ரா'' மூலம் கொலைகளையும் சதிகளையும் கட்டவிழ்த்து விட்டது. பொதுத் தேர்தலில் சாண்டிஸ்டா இயக்கத்தினரை வீழ்த்தி, தமது விசுவாசிகள் வெற்றிபெற கோடி கோடியாய் வாரியிறைத்து, புதிய கைக்கூலி அரசை 1990-களில் நிறுவியது. நிகரகுவாவில் அமெரிக்காவின் எடுபிடி அரசு நிறுவப்பட்டதும், பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் உலக வங்கியும் ஐ.எம்.எப்.-பும் பன்னாட்டு நிறுவனங்களும் படையெடுத்தன. நிகரகுவாவில் அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போருக்கான செலவுகளையும் அந்நாடே ஏற்க வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டு நிகரகுவாவும் வியட்நாம் வழியில் மறுகாலனியாக்கப்பட்டு வருகிறது.

அதிர்ச்சியூட்டும் உண்மைகளான இவையெல்லாம் புதிய உத்திகளாகத் தோன்றினாலும் அன்று காலனியாதிக்கவாதிகள் பின்பற்றிய அதே உத்திகள்தாம். அன்று பீரங்கிப் படகுத் தூது **(gun-boat diplomacy)** மூலம் அச்சுறுத்தல்; இன்று உலக வங்கி - ஐ.எம்.எப். - உலக வர்த்தகக் கழகம் மூலம் அச்சுறுத்தல். அன்று துணைப் படைத் திட்டம்; இன்று அமெரிக்கா தலைமையில் பன்னாட்டு அமைதிப்படை. அன்று வெல்லெஸ்லி - டல்ஹௌசி; இன்று அவர்களின் வாரிசு ஜார்ஜ் புஷ்; அன்று நடந்தது காலனியாதிக்கம்; இன்று நடப்பது மறுகாலனியாதிக்கம்!

● மனோகரன்

*பாலஸ்தீனம் :*

# அமெரிக்க ஆசியுடன் அடுத்த சுற்றுத் தாக்குதல்

**வா**னிலிருந்து குண்டு மழை பொழிகிறது. இராணுவக் கவச வண்டிகளின் பீரங்கித் தாக்குதலில் கட்டிடங்கள் நொறுங்கி விழுந்து தீப்பற்றி எரிகின்றன. குழந்தைகளை மார்போடு அணைத்துக் கொண்டு தெருக்களில் ஓடும் தாய்மார்கள்; அடுத்த தாக்குதல் எப்போது நடக்குமோ என்ற பீதியில் உறைந்து நிற்கும் உழைக்கும் மக்கள்.

- இவையெல்லாம் ஆப்கானில் அமெரிக்க வல்லரசு நடத்திய பயங்கரவாதப் போரின் காட்சிகள் அல்ல. மேற்காசியாவில் அமெரிக்காவின் அடியாளாகச் செயல்பட்டு வரும் இனவெறி பயங்கரவாத நாடான இசுரேல், பாலஸ்தீனிய மக்கள் மீது கடந்த இரு மாதங்களாக நடத்திவரும் கொலைவெறியாட்டத்தின் காட்சியே இவை.

கடந்த நவம்பரில் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியான மேலைக் கரையிலுள்ள ஹெப்ரான் நகரில் பேருந்து ஒன்றில் பயணம் செய்த பாலஸ்தீனியர்கள் அனைவரும் இசுரேலிய ஹெலிகாப்டர் படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அந்தப் படுகொலையின் இரத்தக் கறை உறையும் முன்னரே பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த இளம் குழந்தைகள் 5 பேர் இசுரேலிய இராணுவத்தின் குண்டு வீச்சினால் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். கடந்த ஓராண்டு காலத்தில் இசுரேலிய இனவெறி இராணுவத்தின் குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளங்குழந்தைகளின் எண்ணிக்கை 200-க்கும் மேலாகிவிட்டது. வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களும் உழுது கொண்டிருக்கும் விவசாயிகளும் கேள்விமுறையின்றி இசுரேலிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

பாலஸ்தீனிய மக்களின் ''இரண்டாவது இண்டிஃபதா'' எனும் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க எஃப்-16 ரக போர் விமானங்கள், ஹெலிகாப்டர் படை, பீரங்கி கவச வண்டிகள், எந்திரத் துப்பாக்கிகள், கண்ணி வெடிகள் என இசுரேலிய இராணுவம் ஆக்கிரமிப்பு போரை நடத்தி வருகிறது. அதன் உச்சகட்டமாக கடந்த டிசம்பர் 3-ஆம் நாளன்று பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியின் அதிபரான யாசிர் அராபத்தின் தலைமை அலுவலகம் மீதே இசுரேலிய இராணுவம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது. பாலஸ்தீன சுயாட்சி பகுதியின் போலீசு நிலையங்கள், மருத்துவமனைகள், அகதிமுகாம்கள் என கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 20-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். 200-க்கும் மேலானோர் படுகாயமடைந்துள்ளனர். எட்டாண்டுகளுக்கு முன்பு இசுரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே கையெழுத்தான 'அமைதி' ஒப்பந்தம் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டுக் கிடக்கிறது.

இசுரேலின் தற்போதைய பயங்கரவாத போருக்குக் காரணம் என்ன?

இசுரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்ற சுதந்திரமான அரசை நிறுவ வேண்டும் என்பதுதான் பாலஸ்தீன மக்களின் இலட்சியம். ஆனால் 1993-இல் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட துரோக ஒப்பந்தம், பாலஸ்தீனியர்களுக்கு தேசிய சுயநிர்ணய உரிமையை மறுத்து பெயரளவிலான சுயாட்சி உரிமையைத்தான் அளித்தது. ஆயினும் ஒப்பந்தப்படி பெயரளவிலான சுயாட்சி உரிமையையும் மறுத்து இசுரேலிய இனவெறியர்கள் பயங்கரவாதப் படுகொலைகளைத் தொடர்ந்தனர். குறிப்பாக ஜெரிகோ, ஹெப்ரான் ஆகிய நகரங்களை ஒப்பந்தப்படி தமது சுயாட்சியிடம் ஒப்படைக்கக் கோரியபோது, இசுரேலிய இனவெறியர்கள் காட்டுமிராண்டிதனமான நரவேட்டையை பாலஸ்தீனியர்கள் மீது ஏவினர்.

> **ஏகாதிபத்தியங்களின் தயவில் பெறப்படும் பெயரளவிலான சுயாட்சியால், ஒடுக்கப்படும் எந்தவொரு தேசிய இனமும் விடுதலை அடைந்துவிட முடியாது என்பதுதான் பாலஸ்தீனம் உலகுக்குத் தரும் பாடம்.**

பயங்கரவாத இசுரேலின் தொடரும் கொலை வெறியாட்டம், யாசிர் அராபத்தால் தலைமை தாங்கப்படும் சுயாட்சி அதிகாரத்தின் சமரசம், அராபத் ஆட்சியில் தீவிரமாகிவிட்ட ஊழல் - மோசடிகள் ஆகிய அனைத்தும் பாலஸ்தீன மக்களிடம் வெறுப்பையும் ஆத்திரத்தையுமே



படிப்பகம்

www.padippakam.com



**பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் ஆக்கிரமிப்பு: பெயரளவிலான சுயாட்சி உரிமையையும் பறிக்கும் இசுரேலிய இனவெறி பயங்கரவாதப் படைகளை எதிர்த்து பாலஸ்தீன மக்களின் மறியல் போராட்டம்.**

விளைவித்தன. கடந்த ஆறேழு ஆண்டுகளாக குமுறிக் கொண்டிருந்த பாலஸ்தீன மக்கள் கடந்த ஆண்டில் எரிமலையாகக் கிளர்ந்தெழுந்து "இரண்டாவது இண்டிஃபதா" எனும் விடுதலைப் போரைத் தொடர்ந்தனர். இசுரேலிய பயங்கவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க, பாலஸ்தீன இசுலாமிய தீவிரவாத அமைப்புகளான இசுலாமிக் ஜிகாத், ஹமாஸ் ஆகிய குழுக்கள் மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தின. கடந்த ஓராண்டு காலத்தில் ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை இசுரேலில் இக்குழுக்கள் நடத்தியுள்ளன.

குறிப்பாக, கடந்த நவம்பர் மாதத்தில் பாலஸ்தீன தீவிரவாதக் குழுக்களின் அடுத்தடுத்த தாக்குதல்களில் 27 இசுரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதைக் காரணம் காட்டி, "பாலஸ்தீன அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கத் தவறிவிட்டது" என்று குற்றம் சாட்டிய இசுரேலிய இனவெறி அரசு, பாலஸ்தீனத்தின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்தது. பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேசத்தின் மேலைக்கரை பகுதியிலுள்ள நாப்லாஸ், ராமல்லா, பெய்டுனியா நகரங்களும் காசாமுனை பிரதேசத்தின் பெருநகரங்களும் இசுரேலிய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டன. தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் தேடுதல் வேட்டையும் பீரங்கித் தாக்குதலும் தொடர்ந்தது. ராமல்லா நகரிலிருந்து வெளியே செல்லக்கூட பாலஸ்தீன சுயாட்சி அரசின் தலைவர் அராபத்துக்குத் தடை விதிக்கப்பட்டது. அவரது தலைமை அலுவலக வாயிலருகில் இசுரேலிய இராணுவம் முற்றுகையிட்டுக் கொண்டு நின்றது. பாலஸ்தீன சுயாட்சி பிரதேசத்தில் போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடர்ந்தன.

பாலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் மட்டுமல்ல; சமரசவாதி யாசிர் அராபத்தின் "படை-17" மற்றும் டான்ஜிம் படைகளும் கூட பயங்கரவாத அமைப்புகள்தான் என்கிறது இசுரேல். பாலஸ்தீன அரசின் போலீசார்கூட பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறது. மொத்தத்தில் பாலஸ்தீனமே ஒரு பயங்கரவாதப் பிரதேசம், எந்த உரிமையும் அம்மக்களுக்கு அளிக்கக் கூடாது என்று இனவெறி பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்குவதுதான் இசுரேலின் நோக்கமாக உள்ளது.

இத்தாக்குதலை எதிர்த்து பாலஸ்தீன மக்கள் போராட்டங்களில் இறங்கத் தொடங்கியதும், பதற்றத்தைத் தணிக்க அமெரிக்கா, ரசியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் சிறப்புத் தூதர்களும் ஐ.நா மன்றத் தூதரும் ஓடோடி வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இசுரேல் தனது குண்டுவீச்சுத் தாக்குதலையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்தினால், நாங்களும் தற்கொலைப் படைத் தாக்குதலை நிறுத்தத் தயார் என்று பாலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் ரம்ஜான் மாதத்தில் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு முன் வந்தன. ஆனாலும் இதை ஏற்க மறுத்து இசுரேலிய இனவெறி பயங்கரவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்தனர். இசுரேலின் ஆக்கிரமிப்புப் போரை முடிவுக்குக் கொண்டுவர ஆவண செய்வதாகக் கூறிய அமெரிக்க வல்லரசு அதேசமயம், பாலஸ்தீன தீவிரவாதிகளைக் கைது செய்து பயங்கரவாதத்தை ஒடுக்குமாறு அராபத்திடம் கோரியது.

அதன்படி பாலஸ்தீன சுயாட்சி அரசின் அதிபரான அராபத், பாலஸ்தீனத்தில் அவசரநிலையைப் பிறப்பித்தும், இதுவரை கண்டிராத அளவுக்கு மிகப் பெரும் எண்ணிக்கையில் ஹமாஸ் குழுவினரைக் கைது செய்தும், அவர்களின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தும் தன்னை கடைந்தெடுத்த அமெரிக்கக் கைக்கூலியாகக் காட்டிக் கொண்டார். இசுரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்களும், சந்தேகிக்கப்படுவோரும் கூட பாலஸ்தீன சுயாட்சி அரசின் போலீசாரால் விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

தனது சொந்த சகோதரர்களையே கைது செய்து சிறையிலடைத்து வதைக்கும் அராபத்தின் துரோகத்தனம் வெளிப்படையாக சந்தி சிரித்தது. ஆத்திரமடைந்த பாலஸ்தீன மக்கள் தீவிரவாதிகளைக் கைது செய்ய வரும் அராபத் அரசின் போலீசாரை விரட்டியடித்து பல பகுதிகளில் மறியல் போராட்டங்களை நடத்தினர். அராபத் அரசின் துரோகமும் தீவிரமாகிவிட்ட லஞ்ச ஊழலும் பாலஸ்தீன மக்களிடம் வெறுப்பையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்து, அவர்களை இசுலாமிய தீவிரவாதிகளின் பக்கம் தள்ளிவிட்டுள்ளது.

ஏறத்தாழ மூன்று மாதங்களாக இசுரேல் தனது ஆக்கிரமிப்புப் போரை நடத்தி வெறியாட்டம் போட்ட போதிலும், இசுலாமிய கூட்டமைப்பு நாடுகள் கண்டன அறிக்கை வெளியிட்டதற்கு மேல் வேறெந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாலஸ்தீனத்தின் மீது தாக்குதலை நிறுத்தாவிடில், பாலஸ்தீன மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையை அளிக்காவிடில் அமெரிக்காவுக்கும் இசுரேலுக்கும் எண்ணெய் கொடுக்க மாட்டோம் என்று வாயளவில் எச்சரிக்கை விடுக்கக் கூட அரபு நாடுகள் முன் வரவில்லை. "நாமனைவரும் மதத்தால் ஒன்றுபட்டவர்கள்" என்று இசுலாமிய அடிப்படைவாதிகள் எவ்வளவுதான் கூறிக் கொண்டாலும், இந்நாடுகளில் இசுலாமிய ஆளும் வர்க்க நலன்தான் முன்னே நிற்கிறது. எனவேதான் பாலஸ்தீன் குழந்தைகள் குண்டுவீச்சில் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்ட போதிலும், எந்தவொரு முசுலீம் நாட்டு அரசும் ஆளும் வர்க்கங்களும் இசுரேலின் பயங்கரவாதத் தாக்குதலை எதிர்த்து உருப்படியாக எந்த நடவடிக்கை எடுக்கவும் முன் வரவில்லை. இந்நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் இசுரேல் ஆக்கிரமிப்பு வெறியாட்டம் போட்டு வருகிறது. அப்பயங்கரவாத நாட்டுடன் இந்தியப் பயங்கரவாத அரசு வெட்கமின்றி கைகோர்த்துக் கொண்டுள்ளது.

மறுபுறம், அராபத்தின் புகழும் செல்வாக்கும் மங்கி பாலஸ்தீன மக்களிடம் அவரும் அவரது அல்ஃபத்தா இயக்கமும் தனிமைப்பட்டுப் போயுள்ள நிலையில்; அவரை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் ஏகாதிபத்தியங்கள் திணறுகின்றன. அராபத், பாலஸ்தீன தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதைக் காட்டி, ஒரு சில பகுதிகளிலிருந்து இசுரேலின் ஆக்கிரமிப்பை தற்காலிகமாக அகற்றி சமாதான நாடகமாடி வருகின்றன.

ஆனால், பாலஸ்தீன மக்களுக்குச் சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் கிடைக்காதவரை அவர்களின் போராட்டங்களும் தீவிரவாதத் தாக்குதலும் ஒருக்காலும் ஓய்ந்து விடாது; ஏகாதிபத்தியங்களை எதிர்க்காமல் அவற்றின் தயவில் பெறப்படும் பெயரளவிலான சுயாட்சியால் எந்தவொரு தேசிய இனமும் விடுதலை பெற முடியாது; அது துரோகத்தையும் பேரிழப்பையுமே விளைவிக்கும் என்பதை உலகுக்கு அறிவித்துவிட்டு, மீள முடியாத துயரத்தில் பாலஸ்தீனம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# இந்துமயமாக்கலுக்கு எதிராக பழங்குடியினர் ஆவேசம்

கிறித்தவ மிசனரிகள் ஆதிவாசிகளை மதம் மாற்றுகிறார்கள் எனக்கூறி அவர்களைத் தாக்குவது, சர்ச்சுகளைத் தகர்ப்பது, தீ வைப்பது, கொலை செய்வது என நாடெங்கும் பரவலாக கிறித்தவர்களை நர வேட்டையாடி வருகிறது ஆர்.எஸ்.எஸ்.சும் அதன் பரிவாரங்களும்.

குஜராத் டாங்ஸ் பகுதியில் கிறித்தவர்களாக மதம் மாறிய பழங்குடியின மக்களின் மீதும் அரசு ஆதரவுடன் அடக்குமுறையை ஏவி வருகிறது. அவர்களது பண்பாட்டை அழித்து பார்ப்பனமயமாக்கி தனது உயர் சாதி ஆதிக்கத்தை நிறுவ முனைகிறது.

பார்ப்பன மதம் என்ற ஒன்றுண்டே தவிர இந்துமதம் என்பது கிடையாது. அவர்களே கூறுவதுபோல அது மதமல்ல, சனாதன தர்மம். இந்த சனாதன தர்மத்தில், வாழ்க்கை முறையில் ஆதிவாசிகளுக்கு இடமே இல்லை. பார்ப்பனன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற படிநிலையிலான வர்ண அடுக்கில், இந்நால்வருக்கும் ஏவல் செய்யும் அடிமை நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட பஞ்சமனுக்கே இடமில்லை என்கிற போது, இவர்களோடு எவ்விதத் தொடர்புமின்றி காடுகளில் இயற்கையோடு இயைந்து வாழும் ஆதிவாசிகளுக்கு மட்டும் இடமிருக்குமா?

அந்த ஆதிவாசிகளை இவர்களின் மனு தர்மம் மனிதர்களாகக் கூட அறிந்திருக்கவில்லை. ஆனால் இப்போது, நீங்களும் இந்துக்கள்தான் என முத்திரை குத்தி, 'அய்யோ மதமாற்றம்' என சூலத்தால் குத்துகிறது.

மகாராட்டிர மாநிலம் தானே மாவட்டத்திலுள்ள ஒரு மலை நகரம் ஜோவ்ஹர். இங்குள்ள ஆதிவாசிகள் ஒவ்வோராண்டும் குடிநீர் பற்றாக்குறையால் கண்ட நீரையும் குடித்து வயிற்றுப் போக்கால் சாவது ஒரு தொடர் கதை. இதை எந்த ஓட்டுப் பொறுக்கிகளும் தீர்த்ததில்லை.

1970 முதல் இப்பகுதியில் ஆதிவாசிகள் மத்தியில் இயங்கி வரும் 'வனவாசி கல்யாண் ஆச்ரம்' என்ற ஆர்.எஸ்.எஸ்.சின் அமைப்புக்கும் இதுபற்றி அக்கறையில்லை ஆனால் ஆதிவாசிகள் இந்துக்கள் என்பதை நிலைநாட்ட மட்டும் தவறவில்லை. கடந்த ஆண்டு ஆதிவாசிகள் கிராமங்களில் ஒரு ரத யாத்திரை நடத்தியது இந்த வி.கே.ஏ. என்கிற வனவாசி கல்யாண் ஆச்ரம் அமைப்பு. ஆதிவாசிகளின் சிறுதெய்வ வழிபாட்டை மதிப்பதற்கு பதில் அதற்கு இந்துக் கடவுள் முத்திரை குத்தி பார்ப்பனமயமாக்கும் நிகழ்ச்சியை அரங்கேற்றியது. ரதயாத்திரையின் போது ''ஆதிவாசிகள் இந்துக்களே!'' என்கிற ஒரு சிறு வெளியீட்டை இலவசமாகத் தந்து, ''ஜகதாம்பா'' என்கிற இந்துக் கடவுள்தான் ஆதிவாசிகளின் கடவுளான ''தியோ மோக்ரா'' என்று பிரச்சாரமும் செய்தது.

வெறுமனே பிரச்சாரம் செய்தால் மட்டும் போதாது என்பதற்காக இந்துப் பண்டிகையான நவராத்திரியை 'வனோத்சவம்' (வனவிழா அல்ல வனவாசிகள் விழா) என்ற விழாவாக்கி கொண்டாடத் தொடங்கியது. ஆதிவாசிகள் வனங்களை வழிபடுவதை மறக்கடிக்கவே இவ்விழா.

ஆதிவாசிகளின் வாழ்வும் உரிமையும் காடுகளுடன் பின்னிப் பிணைந்தது. ஆனால் 'தொழில் வளர்ச்சி' என்ற பெயரில் காடுகளை அழித்தும் வனப்பாதுகாப்பு என்ற பெயரில் வாழ்வைப் பறித்தும் ஆதிவாசிகள் அவர்களது சொந்த மண்ணிலிருந்தே விரட்டியடிக்கப்படுகின்றனர்.

இந்த உரிமை இழப்புகளை எதிர்த்த போராட்டத்தில் வனவாசிகளைத் திரள விடாமல் திசை திருப்பவே வனவாசிகள் விழா!

மேலும் ஆதிவாசிகளிடமிருந்து காடுகளைப் பறித்த ஆங்கிலேயனுக்கு எதிராகப் போராடி ஆதிவாசிகளின் உரிமையை நிலைநாட்டியவர் பீர்சா முண்டா என்கிற ஆதிவாசிப் போராளி. ஆனால் அவரது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக இந்து மதத்தைக் காக்க சர்ச்சுகள், மிஷனரிகளை எதிர்த்துப் போராடியவர் என வரலாற்றையே பொய்யாக்கி, ஆதிவாசிகளின் உரிமைக்குப் போராடியவரைத் தனது ஏவலாளாகச் சித்தரித்தது, வனவாசி கல்யாண் ஆச்ரம் அமைப்பு. பீர்சா முண்டாவிற்கு பூணூல் போட்டு, அவரது வண்ணப் படத்தை அச்சிட்டு இலவசமாக விநியோகித்தது.

இதை இனியும் அனுமதிப்பது தமது வாழ்வுரிமையையே பறி கொடுப்பதாகும் என வெகுண்டெழுந்தன ''பூமி சேனா'', ஆதிவாசி ஏக்தா பரிசத்'' ஆகிய ஆதிவாசி அமைப்புகள். கடந்த நவம்பர் 18-ம் தேதி ஜோவ்ஹர் நகரில் இந்துத்துவ எதிர்ப்பு ஆதிவாசிகள் ஊர்வலம் என்று இயக்கமெடுத்து பொதுக் கூட்டம் நடத்தினர். இதற்காக ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் ஒரு மாதமாக சுவரெழுத்து, சுவரொட்டி, துண்டறிக்கைகள் மூலமும் தெருமுனைக் கூட்டங்கள் வடிவிலும் பிரச்சாரம் செய்தனர் ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆதிவாசிகள் மீது நடத்தி வரும் அடக்குமுறைகள், ஆதிக்கங்களை அம்பலப்படுத்தி பேசியும் புரட்சிகரப் பாடல்களைப் பாடியும் பிரச்சாரம் செய்தனர்.

ஜோவ்ஹர் நகரில் 'வனோத்சவ்' என்ற பெயரில் நவராத்திரி விழா நடக்கும் போது 'பூமிசேனா' 'ஆதிவாசி ஏக்தா பரிசத்' தொண்டர்கள் ஒலிபெருக்கியுடன் இந்துத்துவ எதிர்ப்பு முழக்கங்களிட்டு மேற்கூறிய பிரச்சாரத்தை நடத்தினர். குஜராத்தில் கிறிஸ்துமஸ் விழாவையே நடத்தவிடாமல் கிறித்தவ ஆதிவாசிகள் மீது அடக்குமுறையை ஏவும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது விழாவில் குறுக்கிட்டு தமக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த போர்க்குணமிக்க ஆதிவாசிகள் அமைப்புகளைக் கண்டு பயந்து விழாவை நிறுத்தியது.

இந்துவெறியர்களின் வனோத்சவ் விழாவுக்கு எதிராக, நவம்பர் - 18 அன்று காலையிலிருந்தே ஜோவ்ஹர் நகரில் ஆயிரக்கணக்கான ஆதிவாசிகள் குவிந்தனர். பீர்சா முண்டாவின் ஆளுயரப் படம் மாலைகளுடன் சிவப்பு - வெள்ளை கொடியுடன் (இது போராளி பீர்சா முண்டாவின் கொடி) ஒரு வாகனத்தில் கம்பீரமாக முன்னே செல்ல, பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆதிவாசிகளின் ஊர்வலம் பின் தொடர்ந்தது. ஒலிபெருக்கியில் எழுந்த இந்துத்துவ எதிர்ப்பு முழக்கங்களை ஆதிவாசிகள் எதிரொலித்தனர்.



பேரணி முடிவில் பொதுக் கூட்டம் நடந்தது. 'ஆதிவா


படிப்பகம்

சிகளின் அடையாளத்திற்கு இந்துத்துவாவினால் எழுந்துள்ள அபாயம்', 'வனோத்சவ்' என்பதிலுள்ள அரசியலும் வனவாசி கல்யாண் ஆசிரமத்தின் நோக்கமும்', 'ஆதிவாசிகளை இந்துமயமாக்குவதன் பின்னணியிலுள்ள சதி' என்று ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், குஜராத், மகாராட்டிராவிலிருந்து வந்த ஆதிவாசிகளின் தலைவர்கள் அம்பலப்படுத்திப் பேசினர். வனவாசி கல்யாண் ஆச்ரம், இந்து சுரக்சா சமிதி, பஜ்ரங்தள், விசுவ இந்து பரிசத் ஆகிய அமைப்புகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை தீர்மானங்களாக நிறைவேற்றினர்.

ஏற்கனவே காடுகளிலான தமது உரிமைகளுக்கு இன்றும் போராடி வரும் ஆதிவாசிகள், தமது போராளி பீர்சா முண்டாவின் வரலாற்றைப் புரட்டி, தம்மை பார்ப்பனமயமாக்கி தமது காடுகள் மீதான உரிமையைப் பறிக்கும் வி.கே.ஏ.வின் சதிகளுக்கு எதிராகவும் போராடக் கிளம்பிவிட்டனர்.

●சுப்பு

# போராட்டங்களைக் கண்டு அஞ்சும் உலக வங்கியின் கைக்கூலிகள்

''கடையடைப்புப் போராட்டம் என்பது மாநிலத்தின் அன்றாட வாழ்வைச் சீரழிக்கும் மிக மோசமான செயலாகும். அராஜக - வன்முறைக் கட்சிகள் இதற்குத் தலைமையேற்று நடத்தினால் நிலைமை விபரீதமாகிவிடும்.

''போராட்டம் நடத்துபவர்கள் பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத கொள்கைகளையோ, மதவெறியையோ, ஊழலையோ எதிர்க்க முன்வராமல், மாநில அரசுக்கு எதிராகப் போராடக் கிளம்பியுள்ளார்கள். இதிலிருந்தே அவர்கள் இந்த ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்பவர்கள் என்று நிரூபணமாகிறது. இப்போராட்டத்தை மக்கள் புறக்கணிக்க வேண்டும். இப்போராட்டத்தில் வன்முறை தலைதூக்கினால் மாநில அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கும்''

- இப்படி கண்டன அறிக்கை விடுத்து எச்சரித்தவர்கள் காங்கிரசு மாநில ஆட்சியாளர்களோ, அல்லது ஆந்திராவின் சந்திரபாபு நாயுடுவோ, தமிழகத்தின் பாசிச ஜெயாவோ அல்ல. பாட்டாளிகளின் தோழன், உழைக்கும் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் என்றெல்லாம் கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளான மே.வங்க 'இடது முன்னணி' ஆட்சியாளர்கள்தான், இப்படி எதிர்க்கட்சிகளின் போராட்டத்தைக் கண்டு அஞ்சி, எச்சரிக்கை விடுத்து அடக்குமுறையை ஏவியுள்ளார்கள்.

மே.வங்க 'இடது முன்னணி' ஆட்சியாளர்கள் பாசிச ஜெயா கும்பலின் வழியில் மின்சாரம் - பேருந்து - கல்விக் கட்டணங்களைக் கண்டபடி உயர்த்தியதோடு, மருத்துவமனை நுழைவுக் கட்டணத்தையும் அண்மையில் அறிவித்து, தம்மை உலக வங்கியின் கைக்கூலி என்று நிரூபித்துக் கொண்டனர். இப்பகற் கொள்ளையை எதிர்த்து ''சுசி'', திரிணமூல் காங்கிரசு மற்றும் சில நக்சல் பாரி குழுக்கள் ஆகியன இணைந்து ஜனவரி 10 அன்று கல்கத்தா நகரில் கடையடைப்புப் போராட்டத்தை அறிவித்தன.

இதற்குக் கண்டனம் தெரிவிக்கக் கிளம்பிய போலி கம்யூனிஸ்டுகள், ''ஐயோ! போராட்டம்; அன்றாட வாழ்க்கை பாதிக்கும்; அராஜகம் விளையும்; ஆட்சியைக் கவிழ்க்க சதி'' என்று அலறுகிறார்கள். தமது கண்டன அறிக்கையில், மருத்துவமனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால் போராட்டம் தேவையற்றது என்றும் மின் கட்டண உயர்வுக்கு மாநில அரசு காரணமல்ல; மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மின்சார நெறிமுறைக் கழகத்தின் உத்தரவுப்படிதான் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது; இதற்கு மாநில அரசு பொறுப்பல்ல என்றும் நியாயவாதம் பேசுகிறார்கள்.


மின்சார நெறிமுறைக் கழகம் என்பது, அரசுத் துறை நிறுவனமான மின்சார வாரியத்தை நட்டக் கணக்கு காட்டி மூடிவிட்டு, அதை தனியார் - அந்நிய பெருமுதலாளிகளிடம் தாரை வார்த்துவிட்டு, அவர்கள் கோரும் இலாப விகிதத்துக்கு ஏற்ப மின் கட்டணத்தைத் தீர்மானித்து தொகையை வசூலித்துக் கொடுக்க உலக வங்கி கைக்கூலி ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பாகும். இக்கழகத்தின் உத்தரவுப்படி ஏற்கனவே உ.பி, ஒரிசா, ஆந்திரா என அடுத்தடுத்து கட்டண உயர்வு திணிக்கப்பட்டு இப்போது தமிழகத்திலும் மே. வங்கத்திலும் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 2000-வது ஆண்டு செப்டம்பரில் இதே வழியில் ஆந்திராவில் மின்கட்டணம் உயர்த்தப்பட்டபோது, அதை எதிர்த்து போலி கம்யூனிஸ்டுகளும் போராட்டத்தில் பங்கேற்றனர். போலீசு துப்பாக்கிச் சூட்டில் சி.பி.எம். கட்சி ஊழியர்களும் கொல்லப்பட்டனர்;பலர் படுகாயமடைந்தனர்.

ஆந்திராவிலும் உலக வங்கிக் கட்டளைப்படி அம்மாநில மின்சார நெறிமுறைக் கழகம்தான் மின்கட்டண உயர்வைத் திணித்தது. 'இடது முன்னணி' அரசைப் போலவே ஆந்திராவின் சந்திரபாபு நாயுடுவின் அரசும் இதை விசுவாசமாக ஏற்றுச் செயல்படுத்தியது. இக்கட்டண உயர்வு மக்களுக்கு எதிரான கொடுஞ்செயல் என்று ஆந்திராவில் போராடிய போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் மட்டும் இது தவிர்க்க முடியாதது; இதற்காகப் போராடக் கூடாது என்று உபதேசித்து, போராட்டம் என்றாலே அராஜகம் - வன்முறை என்று பீதியில் அலறுகிறார்கள்.

மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மின்சார நெறிமுறைக் கழகம் உலக வங்கி உத்தரவுகளைச் செயல்படுத்துமாறு மாநில அரசுகளை நிர்பந்திக்கிறது என்றால், எங்கள் மாநிலத்தில் இதைச் செயல்படுத்த மாட்டோம் என்று போலி கம்யூனிஸ்டுகள் எதிர்த்து நிற்க வேண்டியதுதானே! அதை விடுத்து கட்டண உயர்வை மக்கள் மீது திணிப்பது ஏன்? கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டத்தை வெட்கமின்றி கண்டிப்பது ஏன்? மத்திய அரசு திணிக்கும் மக்கள் விரோத கொள்கைகளை எல்லாம் விசுவாசமாக ஏற்றுச் செயல்படுத்துவதுதான் தங்கள் வேலை என்றால், அதற்கு எந்தக் கழுதையும், ஆட்சியில் இருக்கலாமே! அப்புறம் எதற்காக அங்கே 'இடது முன்னணி'யினர் பதவியில் இருக்க வேண்டும்? நாற்காலி சுகம் காணவா?

இந்த மோசடிப் பேர்வழிகள் உலக வங்கியின் உத்தரவுகளை விசுவாசமாக செயல்படுத்திக் கொண்டே, உலக வங்கியை எதிர்க்கிறார்களாம்! கட்டண உயர்வைத் திணித்து பகற்கொள்ளையடித்துக் கொண்டே, மக்கள் நலனில் அக்கறையோடு செயல்படுகிறார்களாம்! தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கலை எதிர்க்கிறார்களாம்! புரட்சி செய்யப் போகிறார்களாம்! கேழ்வரகில் நெய் வடிகிறதாம்! நம்புங்கள், உழைக்கும் மக்களே!



www.padippakam.com

# சுதந்திர வர்த்தகக் கொள்கையா? பங்குச் சந்தை பயங்கரவாதமா?

அமெரிக்காவைப் பற்றி இந்தியாவில் உள்ள படித்தவர்களும், பாமரர்களும் பொதுவாகத் தெரிந்து வைத்திருப்பது, ''அங்கே, வீட்டு வேலைக்காரிகூட காரில்தான் வேலைக்குப் போவாளாம்'' என்பதுதான். நமது நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கிலுமே அமெரிக்கா பற்றி இப்படிபட்ட கற்பனைச் சித்திரம்தான் விற்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் பீற்றிக் கொள்ளப்படும் இந்தச் செல்வச் செழிப்புப் பற்றி பொருளாதார நிபுணர்களிடம் கேட்டால், அமெரிக்காவின் சுதந்திர வர்த்தகக் கொள்கைதான் இதற்குக் காரணம் எனப் பதில் கூறுகிறார்கள். நமது நாட்டில் கூட அமெரிக்காவின் சுதந்திர வர்த்தகக் கொள்கைதான் தாராளமயம் என்ற பெயரில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆனாலும், நம்மைப் பிடித்தாட்டும் வறுமையை ஒழிக்க முடியவில்லையே என்று கேட்டால், இன்னும் அமெரிக்கா அளவிற்கு நமது நாடு பொருளாதாரத்தில் சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை எனக் கூசாமல் கூறுவார்கள்.

நம்ம நாட்டு கதை கிடக்கட்டும். அமெரிக்காவின் இந்த சுதந்திர வர்த்தகக் கொள்கையை, பாமரனும் புரிந்து கொள்ளும்படி வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால், அது ஒரு ''பயங்கரவாதம்''. ''என்னடா, ஏறுக்கு மாறாகச் சொல்லுகிறார்களே'' என அதிர்ச்சி அடைபவர்கள், தயவு செய்து இந்த உண்மைகளைப் படித்துவிட்டு முடிவு செய்யுங்கள்.

உலகெங்கிலும் நடைபெறும் பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் கொடி கட்டிப் பறக்கும் நிறுவனங்களுள் ஒன்று அமெரிக்காவின் ''மார்கன் அண்ட் ஸ்டான்லி''. உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டவுடனேயே இந்த நிறுவனம், ''அமெரிக்க விமான நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு உதவி செய்யாவிடில், விமான நிறுவனப் பங்குகளின் வர்த்தகம் நடைபெறாது'' எனக் கழுத்தில் கத்தி வைக்காத குறையாக அமெரிக்க அரசை மிரட்டியது.

இந்த மிரட்டலுக்குப் பின் அமெரிக்க அரசு உடனடியாக அமெரிக்காவைச் சேர்ந்த விமான நிறுவனங்களுக்கு 72,000 கோடி ரூபாய் உதவியாக அளித்தது. அமெரிக்காவின் பங்குச்சந்தைச்சூதாட்ட முதலாளிகளுக்கு 7,84,560 கோடி ரூபாய் கடன் உதவியாக அளித்தது.

சட்ட விரோதமான வழிகளில் மிரட்டி, பயபீதியூட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயலுவதுதான் பயங்கரவாதம், தீவிரவாதம் எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. இதன்படி பார்த்தால், பங்குச் சந்தை வியாபாரத்தை நிறுத்தி விடுவோம் என மிரட்டி, பல இலட்சம் கோடி டாலர்களைச் சுருட்டிக் கொண்ட அமெரிக்க முதலாளிகளைப் பங்குச் சந்தை பயங்கரவாதிகள் என்றுதானே கூற வேண்டும்!

உலக வர்த்தக மையக் கட்டிடம் தகர்க்கப்பட்டதைச் சாக்காகக் காட்டி, அமெரிக்க விமான நிறுவனங்கள் ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களை வேலையில் இருந்து விரட்டியடித்தன. இதோடு, ஐந்து நட்சத்திர விடுதிகள், சூதாட்ட அரங்குகள், கணினி நிறுவனங்கள், டிஸ்னிலாண்ட், பங்குச் சந்தைச் சூதாட்ட நிறுவனங்களில் இருந்தும் வீட்டிற்குத் துரத்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால், தாக்குதல் நடந்த ஒரே வாரத்திற்குள் வேலையிழந்த அமெரிக்கத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்தைத் தொடும்.

உலக வர்த்தக மையக் கட்டிடங்களைத் தகர்த்து, அதில் வேலை பார்த்து வந்து ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் கொன்றது பயங்கரவாதம் எனும் பொழுது, ஒரே சொடுக்கில் ஐந்து இலட்சம் அமெரிக்கத் தொழிலாளர்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்கிய, அவர்களை நடைபிணமாக்கிய அமெரிக்க முதலாளிகளை ''அகிம்சா மூர்த்திகள்'' என்றா கூற முடியும்?

முசுலீம் தீவிரவாதிகளுக்கு ''ஜிகாத்'' புனிதம் என்றால், இந்தப் பங்குச் சந்தை பயங்கரவாதிகளுக்கு இலாபம் மட்டுமே புனிதமானது; முசுலீம் தீவிரவாதிகளுக்கு ஷாரியத் சட்டம் என்றால், இந்தப் பங்குச் சந்தைப் பயங்கரவாதிகளுக்கு சுதந்திர சந்தைக் கொள்கை.

இந்தச் சுதந்திர சந்தைக் கொள்கை அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தை மத்திய கால அடிமைத்தனத்திலும், சுரண்டலிலும் இருத்தி வைத்திருக்கிறது. ஆனால், இந்த உண்மைக்கு மாறாக, அமெரிக்கா பற்றி வெளியுலகுக்குக் காட்டப்படும் சித்திரமோ, தமிழ் சினிமாக்களில் வரும் கிராமங்களைப் போல, மோசடித்தனமாக உள்ளது.

### இலாபமே தேசபக்தி - நுகர்வே தேசப் பண்பாடு

உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டவுடன் மூடப்பட்ட நியூயார்க் பங்குச் சந்தை மீண்டும் திறக்கப்பட்ட அன்று, அமெரிக்கப் பங்குச் சந்தை முதலாளிகளின் முன் ''தேசமா? இலாபமா?'' என்ற அறவியல் கேள்வி எழுந்த பொழுது, இலாபம் தேசத்தைத் தோற்கடித்தது. உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டபொழுது கூட உலகெங்கும் பரவாத பீதி, நியூயார்க் பங்குச் சந்தை குறியீட்டு எண் சரிந்ததையடுத்து உலகெங்கும் பரவியது.

உலக வர்த்தக மையக் கட்டிடத்தைத் தகர்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பின்லேடனை முறியடிக்க, அமெரிக்க அரசு அமெரிக்க மக்களிடம் ''அதிகமாக நுகருங்கள்'' என முழங்கியது. அமெரிக்க மக்களின் தேசபக்தி முதலாளிகளின் இலாபத்தால் அளக்கப்பட்டது.

உலக வர்த்தக மையக் கட்டிடம் தகர்க்கப்பட்ட பின் அமெரிக்க மக்கள் தங்களின் தேச பக்தியைக் காட்டுவதற்காக, அமெரிக்கக் கொடிகளைச் சகட்டு மேனிக்கு வாங்கித் தள்ளியபொழுது, அமெரிக்க அதிபர் புஷ், ''உங்கள் கண்களுக்கு தேசியக் கொடியைத் தவிர வேறெதுவும் தெரியவில்லையா?'' என வெளிப்படையாகச் சாடினார்.

''மக்கள் தங்களுக்கு தேவையானதை மட்டும் வாங்கி நுகர்ந்தால், எங்கள் பொருளாதாரம் தேக்கத்தில் மாட்டிக் கொண்டு விடும்'' என்று பச்சையாகப் பதறினார்கள் அமெரிக்க முதலாளிகள்.

தாலிபானின் முசுலீம் மதவெறி ஆட்சி ஆப்கானை காட்டுமிராண்டித்தனமான நிலைக்குத் தள்ளிவிட்டதென்றால், அமெரிக்காவின் ஜனநாயக ஆட்சி முதலாளிகளின் இலாபத்திற்காகத் திணிக்கும் நுகர்வு வெறி, அமெரிக்க உழைக்கும் மக்களை மீள முடியாத கடனுக்குள் தள்ளியிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

**ஒய்யாரக் கொண்டையின் உள்ளே...**

அமெரிக்கப் பொருளாதார வரலாற்றிலேயே, 1990-க்குப் பின்னுள்ள பத்தாண்டுகள்தான் ''அமெரிக்கக் கனவு'' நனவாகிய ஆண்டுகள் எனக் குறிப்பிடுகிறார்கள். இந்த அமெரிக்கக் கனவு நனவு ஆனதற்கு, ஆடம்பர நுகர்பொருட்களின் அமோக விற்பனையும், பங்குச் சந்தைச் சூதாட்டம் சூடு பிடித்து, ஆட்டோ மீட்டர் போல எகிறிக் கொண்டு பாய்ந்ததும் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த அமெரிக்கக் கனவை எளிதாகப் புரிந்து கொள்ளும்படிச் சொன்னால் அந்தப் பத்தாண்டுகள்தான் பணப்புழக்கம் நிறைந்த ஆண்டுகள்.



உலக வர்த்தக மையம் இருந்த மன்ஹாட்டன் பகுதியில் பிச்சையெடுக்கும் அமெரிக்கத் தொழிலாளி : அமெரிக்கச் செழிப்பின் உண்மை முகம்.

''அமெரிக்காவிலுள்ள 90 சதவீத குடும்பங்களிடம் ஒரு காரோ அல்லது வேனோ அல்லது டிரக்கோ சொந்தமாக இருப்பதாகவும், 18 சதவீதக் குடும்பங்களிடம் மூன்றோ, அதற்கு மேற்பட்ட கார்களோ சொந்தமாக இருப்பதாகவும்'' அமெரிக்க அரசு புள்ளி விவரமொன்றை வெளியிட்டுள்ளது.

சாலைகளில் ஓடும் காரும், பைக்கும்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளக்கும் அளவுகோல் என்றால், இந்தியாகூடப் பெருமளவு முன்னேறிவிட்டது என்றுதான் கூற முடியும். உண்மையில், கார் வாங்க வேண்டிய நிர்பந்தம் அமெரிக்கத் தொழிலாளர்களின் மீது திணிக்கப்படுகிறது.

1990-க்குப் பின் அமெரிக்காவில் பொது போக்குவரத்து வசதி வெகுவாகக் குறைக்கப்பட்டதால், புறநகர்ப் பகுதிகளில் இருந்தும், அதையும் தாண்டி கிராமப் புறங்களில் இருந்தும் தினமும் 100-150 கி.மீ. பயணம் செய்து வேலைக்கு வந்து செல்ல வேண்டிய தொழிலாளர்கள், கடன் வாங்கியாவது கார் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் ஆதாயம் அடைந்திருக்கும் அமெரிக்கர்கள் யாரென்றால், ஃபோர்டு கார் நிறுவன முதலாளியும், கந்து வட்டிக்கு விடும் ஃபைனான்ஸ் கம்பெனிகளும்தான்.

எந்தப் பத்தாண்டுகளில் அமெரிக்காவின் கனவு நனவாகியதாக முதலாளிகள் கொண்டாடுகிறார்களோ, அந்தப் பத்தாண்டுகளில்தான், மீள முடியாத கடன் வலையில் சிக்கிக் கொண்ட அமெரிக்கர்கள்; கடனை அடைக்க முடியாமல், வீடு வாசலை ரியல் எஸ்டேட் முதலாளிகளிடம் பறிகொடுத்த அமெரிக்கர்கள்; மஞ்சக் கடுதாசி கொடுத்துப் போண்டியாகிப் போன அமெரிக்கர்களின் எண்ணிக்கையும் அதிகமானது.

நம்மூரில் கந்து வட்டி, ரன் வட்டி, மீட்டர் வட்டி போன்ற கடன்கள் எப்படி உழைக்கும் மக்களின் வாழ்க்கையை ஆட்டிப் படைத்துச் சூறையாடுகிறதோ, அதுபோல அமெரிக்காவில் ''தவணை முறைக் கடன்கள்'', ''கிரெடிட் கார்டு கடன்கள்,'' ''ஆள் முழுங்கிக் கடன்கள்'' (Predatory loans) போன்றவை அமெரிக்கத் தொழிலாளர்களை மொட்டையடித்துப் போண்டியாக்கிவிட்டன.

✱ தவணைமுறைக் கடன் என்பது கார்கள், வீட்டுக்குத் தேவைப்படும் சோபா செட், மெத்தைகள் போன்ற ஆடம்பர நுகர்பொருட்களும் அழகுப் பொருட்களும் வாங்குவதற்குக் கொடுக்கப்படும் கடன் வகை. 1998-ஆம் ஆண்டின் கடன் புள்ளி விவரப்படி, ஓர் அமெரிக்கக் குடும்பம் வாங்கியிருக்கும் மொத்தக் கடனில், ஆடம்பர நுகர் பொருட்களுக்காக வாங்கப்பட்ட தவணைமுறைக் கடன் 12.8 சதவீதமாக இருந்தது.

✱ ''கிரெடிட் கார்டு'' கடன் என்பது வங்கிகள் வழங்குவது; வீட்டு வாடகை கொடுக்கக்கூட வசதியில்லாமல், வீடற்றோர் பாதுகாப்பு இல்லங்களில் தங்கி காலத்தை ஓட்டும் தொழிலாளர்களைக் கூட விட்டு வைக்காமல், அவர்களுக்கெல்லாம் ''உங்கள் தகுதிக்குத் தகுந்த கடனை எங்களிடம் பெறுங்கள்'' எனக் கடிதம் போட்டு வாடிக்கையாளராக மாற்றிவிடும் அளவிற்கு வங்கிகள் ''கிரெடிட் கார்டு'' விற்பனையைப் பேய்த்தனமாக நடத்தின. 1998-ஆம் ஆண்டு எடுத்த புள்ளி விவரத்தின்படி கிரெடிட் கார்டு கடன் வாங்கிய குடும்பங்களில், சரி பாதிக்கும் மேலான குடும்பங்கள் (55 சதவீதம்) வாங்கிய கடனை அடைக்க முடியாமல் திணறித் திண்டாடிப் போய்விட்டன.

✱ ஆடம்பர நுகர் பொருட்கள் வாங்குவதற்காகப் பட்ட கடனை அடைப்பதற்காக, வீட்டை அடமானம் வைத்த அமெரிக்கக் குடும்பங்களின் எண்ணிக்கை 43.1 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. வீட்டை அடகு வைப்பது, மறு அடகு வைப்பது, வீட்டின் மதிப்பைப் பங்குகளாகப் பிரித்து விற்பது என்ற வகைகளின் மூலம் வீட்டுக் கடன் தரப்படுகிறது. 1998-ஆம் ஆண்டில் மட்டும் வீட்டை அடமானம் வைத்ததன் மூலம்தான் 3400 கோடி டாலர் (1,63,200 கோடி ரூபாய்) பெறுமான கிரெடிட் கார்டு கடன் அடைக்கப்பட்டுள்ளது. வீட்டின் பங்குகளுக்குக் கடன் கொடுப்பது மூலம் ரியல் - எஸ்டேட் முதலாளிகள், நடுத்தர வர்க்க அமெரிக்கர்களுக்குச் சொந்தமான வீடுகளின் 44 சதவீதப் பங்கைக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

✱ பல்வேறு வழிகளில் கடனை வாங்கிவிட்டு, அதை அடைப்பதற்குத் திக்கித் திணறிக் கொண்டிருக்கும் அமெரிக்கர்களை அமுக்குவதுதான் ஆள் முழுங்கிக் கடன் (Predatory Loans). ஓரளவுக்கு நல்ல வருமானமுள்ள, எப்படியாவது கடன்களைத் திருப்பிக் கட்டிக் கொண்டு வரும் சிறுபான்மை சமூகத் தொழிலாளர்களைத் தேடிப்பிடித்துக் கொள்கிறது இந்தக் கடன். இதில் சிக்கிக் கொண்டவர்கள் வட்டி கட்டியே சாக வேண்டியதுதான்; மீளவே முடியாது என்பதால்தான் இது, ஆள் முழுங்கிக் கடன் என்றே அழைக்கப்படுகிறது.

நுகர் பொருள் தயாரிக்கும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களும், ஃபைனான்சு கம்பெனிகளும் சேர்ந்து கொண்டு அடித்த கொள்ளையின் விளைவு என்னவென்றால், ஓர் ஆண்டிற்கு 10,000 டாலருக்குக் குறைவாக சம்பளம் பெறும் குடும்பங்களில், 40 சதவீத சம்பளத்தை வாங்கிய கடனை அடைக்கவே அழுத குடும்பங்களின் எண்ணிக்கை 1989-இல் 28.6 சதவீதமாக இருந்தது; 1998-இல் 32.0 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. ஆண்டிற்கு 10,000 டாலருக்கு அதிகமாகவும் 25,000

www.padippakam.com

டாலருக்கு குறைவாகவும் சம்பளம் பெறும் குடும்பங்களை எடுத்துக் கொண்டால், இந்த எண்ணிக்கை 15.0 சதவீதத்தில் இருந்து 19.9 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. 25,000 டாலருக்கு மேல் 50,000 டாலருக்குள் வருமானம் ஈட்டும் குடும்பங்களைப் பொருத்த வரையில், இது, 9.1 சதவீதத்தில் இருந்து 13.8 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. மேலும், வாங்கிய கடனை அடைக்க முடியாமல் போண்டியானப் போன அமெரிக்க ஏழைகளின் எண்ணிக்கை (1980-இல்) 3,30,000-லிருந்து 1999-இல் 14 இலட்சத்தைத் தொட்டுவிட்டது. அதாவது, ''அமெரிக்கக் கனவு'', அமெரிக்கத் தொழிலாளர்களை, ''வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தனா'' என்ற பரிதாபகரமான நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.

> **"ஜார்ஜ் புஷ் பூச்சாண்டி காட்டும் "தீவிரவாதம்", "பயங்கரவாத"த்தைவிட, வேலையிழப்பும், கூலிவெட்டும்தான் அமெரிக்கத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது."**

### வக்கிரமமும் வறுமையும்

''அமெரிக்கக் கனவை'' நனவாக்கிய நுகர்பொருட்களின் அமோக விற்பனை அமெரிக்கத் தொழிலாளர்களைப் போண்டியாக்கியதென்றால், பங்குச் சந்தை சூதாட்டம் விரல்விட்டு எண்ணக் கூடிய அமெரிக்கர்களைப் பெரும் குபேரர்களாக்கியது.

கடந்த பத்தாண்டுகளில், மைக்ரோ சாஃப்ட் நிறுவன அதிபரின் சொத்து மதிப்பு 2,59,200 கோடி ரூபாயாகவும், உல்லாசக் கப்பல் நிறுவனமான கார்னிவல் குருயீஸ் லைன்ஸின் அதிபர் மிக்கி ஆரிசனின் சொத்து மதிப்பு 22,080 கோடி ரூபாயாகவும், லாஸ் வேகாஸ் நகரில் சூதாட்ட விடுதிகளை நடத்தி வரும் தொழிலதிபர் கிர்க் கெர்கோரியன் சொத்து மதிப்பு 25,440 கோடி ரூபாயாகவும் உயர்ந்த அதே அமெரிக்காவில்தான், 40 இலட்சம் அமெரிக்கக் குழந்தைகளும், 1 கோடி அமெரிக்கர்களும் அடுத்த வேளை சோத்துக்கு வசதியின்றிப் பட்டினி கிடக்கிறார்கள். அரசாங்க புள்ளி விவரப்படியே 13.3 சதவீத அமெரிக்கர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள்.

பட்டினி கிடக்கும் அமெரிக்கக் குழந்தைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அடுத்த வேளை சோத்துக்கு வழி ஏற்படுத்தித் தராத அமெரிக்க அரசு, அமெரிக்கத் தொழிலாளர்கள் கடன் வாங்கிப் பங்குச் சந்தையில் சூதாட வசதி ஏற்படுத்தித் தந்தது. சூதாட்ட விடுதிகளில் தோற்றுப் போனவர்களுக்குக் கடன் கொடுத்துச் சூதாடச் சொல்லி கொள்ளையடிக்கும் தந்திரம்தான், அமெரிக்க அரசின் பொருளாதாரக் கொள்கை. சூதாட்ட விடுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் ரவுடி கும்பல் போன்றவர்கள்தான் அமெரிக்காவின் புதுப் பணக்கார கும்பல்!

### வானமே கூரை

அமெரிக்கத் தொழிலாளி, ஒரே ஒரு அறை மட்டும் கொண்ட சுமாரான வீட்டில் வசிக்க வேண்டும் என்றால், அந்தத் தொழிலாளி வீட்டு வாடகைக் கொடுப்பதற்கே குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்துக்குக் கூலியாக 11.28 டாலர்கள் பெற வேண்டும்; தொழிலாளியின் குடும்பம் கொஞ்சம் பெரிதாக இருந்து, இரண்டு அறை கொண்ட வீட்டில் அவர் வசிக்க நேர்ந்தால், அவரின் ஒரு மணி நேரக் கூலி குறைந்தபட்சம் 13.87 டாலர்களாக இருந்தால்தான் அவரால் வீட்டு வாடகையாவது கொடுக்க முடியும்.

ஆனால், அமெரிக்காவில் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டிய சட்டபூர்வ குறைந்தபட்சக் கூலியே மணிக்கு 5.15 டாலர்கள்தான். அமெரிக்கத் தொழிலாளர்களுள் 2 சதவீதம் பேர் - 27 இலட்சம் தொழிலாளர்கள் இந்தக் குறைந்தபட்சக் கூலியைப் பெறும் மணிக்கூலிகளாக வாழ்க்கையை ஓட்டுக்கிறார்கள். அமெரிக்

---

## ரவுடியின் கொட்டத்தை ஒடுக்கியது பு.மா.இ.மு.

செல்லூர், அகிம்சாபுரம் சிவன் தெருவைச் சேர்ந்த முகேஷ் என்பவன் அகிம்சாபுரம் வட்டாரத்தில் நெடுநாட்களாக ரவுடித் தனம் செய்து வந்தான். கடைகளில் பொருட்களை வாங்கி பணம் கொடுக்காமல் செல்வது, கேட்டால் அடிப்பது, மிரட்டுவது என இவனது அராஜகம் தலைவிரித்தாடியது.

கடந்த டிசம்பர் 11-ஆம் தேதியன்று அகிம்சாபுரம் மெயின் ரோட்டில் உள்ள மணிவேல் என்பவரின் தொலைபேசி நிலையத்தில் தொலைபேசியில் பேசிவிட்டு, வழக்கம் போல் பணம் கொடுக்காமல் சென்றுள்ளான். அங்கு வேலை பார்க்கும் கலையரசி பணத்தைக் கேட்டதற்கு 'என்ன எங்கிட்ட பணம் கேக்குற' என்றபடி அவரின் தலைமுடியைப் பிடித்து இழுத்து அடித்துள்ளான். தொலைபேசி கருவியை உடைத்து, இணைப்பு வயர்களை அறுத்துவிட்டுள்ளான்.

முகேஷின் இந்த அடாவடித்தனம் குறித்து செல்லூர் அகிம்சாபுரம் வியாபாரிகள் சங்கம் சார்பில் புகார் கொடுக்கப்பட்டது. புகார் கொடுத்து மூன்று நாட்கள் ஆகியும் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பின்னர் முகேஷை கைது செய்யக் கோரியும், கைது செய்யாவிடில் மக்கள் மத்தியில் அவனைத் தண்டிக்கப் போவதாகவும் பு.மா.இ.மு.-வினர் சுவரொட்டிகளை ஒட்டினர். அப்போதும் போலீசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தோழர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருவதை அறிந்த முகேஷ், தன் எடுபிடிகளைத் தோழர்களிடம் சமரசத்திற்கு தூது அனுப்பினான்.

'முகேஷ் தனது செயல்களுக்கு மக்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். சேதமடைந்த பொருட்களுக்கு உரிய நட்ட ஈடு தர வேண்டும். தனது ரவுடித் தனத்தை அடியோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை' என தோழர்கள் கூறிவிட்டனர். பு.மா.இ.மு. பற்றி கேள்விப்பட்ட முகேஷ் வேறு வழியின்றி நிபந்தனைகளை ஏற்பதாகக் கூறினான்.

அதன்படி டிசம்பர் 14-ஆம் தேதி மாலையில் பு.மா.இ.மு. சார்பில் பிரச்சனை நடந்த தொலைபேசி நிலையத்தின் முன்பாகவே தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் முகேஷின் ரவுடித்தனம் பற்றியும், இவனைப் போன்ற ரவுடிகளை முறியடிக்க போலீசை நம்பி பலனில்லை; மாறாக, புரட்சிகர அமைப்புகளில் மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

இறுதியாக, முகேஷ் மக்களிடம் தன்னை மன்னிக்கும்படியும், இனி ரவுடித்தனம் செய்யமாட்டேன் என்றும் கூறியதோடு, தொலைபேசியை உடைத்ததற்காக நட்டஈடுத் தொகையையும் ஒப்படைத்தான். முகேஷின் ரவுடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க பு.மா.இ.மு. மேற்கொண்ட நடவடிக்கைகள் பகுதி மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன.

தகவல்: பு.மா.இ.மு., மதுரை.


படிப்பகம்

காவின் வீட்டு வாடகையையும், இந்த 27 இலட்சம் தொழிலாளர்களின் கூலியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தத் தொழிலாளர்கள் ஒன்று நடைபாதையில் வசிக்க வேண்டும்; இல்லையென்றால், வீடற்றோர் பாதுகாப்பு இல்லங்களில் இரவு நேரத்தில் ஒரு பாயை விரித்து முடங்கிக் கொள்ள வேண்டும்.



''கடைக்குப் போகும் நேரம்'' என வாடிக்கையாளர்களைக் கூவி அழைக்கும் விளம்பரம் : நுகர்வே தேசப் பண்பாடு.

மீதி 98 சதவீதத் தொழிலாளர்களின் வாழ்க்கை எப்படியிருக்கிறது? தெற்கு டகோடாவில் வீடற்றோருக்கு உதவி புரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றும் பாப் ஹல், ''பெரும்பாலான தொழிலாளர்கள், தங்களின் குறைந்தபட்ச தேவைகளைப் பெறுவதற்கே, தினமும் இரண்டு, மூன்று வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டு, மூன்று வேலைகளின் மூலம் கிடைக்கும் கூலியில், மூன்றில் இரண்டு பங்கை வீட்டு வாடகை பிடுங்கி விடுகிறது: தொழிலாளர்கள் தங்களின் வாழ்க்கையை ஓட்ட, ஏதையாவது தியாகம் செய்ய வேண்டும். சில சமயங்களில் மருந்து வாங்கக் காசில்லாமல்; சில சமயங்களில் மருத்துவக் காப்பீடு எடுத்துக் கொள்ள வழியில்லாமல் - இப்படிதான் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்'' எனக் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் வாழ்க்கையை ஓட்ட இரண்டு, மூன்று வேலைகளைச் செய்ய வேண்டும் என்பது அவர்கள் தினமும் 12 மணி நேரம், 14 மணி நேரம் உழைக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டிருப்பதையும், மே தின்த்துக்கு முன்பிருந்த கொத்தடிமைத்தனத்தில் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் இன்னமும் நைச்சியமாக இருத்தி வைக்கப்பட்டிருப்பதையும்தான் எடுத்துக் காட்டுகிறது.

''ஓர் அமெரிக்கத் தொழிலாளிக்கு இவ்வளவு குறைந்தபட்ச கூலி கொடுக்க வேண்டும் என்ற சட்டமே இருக்கக் கூடாது'' என்கிறார்கள் அமெரிக்க முதலாளிகள். ''இந்தக் குறைந்தபட்ச கூலிதான் அமெரிக்கப் பொருளாதாரத்தைக் கொல்கிறது'' என்கிறார் டியூ-பாண்ட் கம்பெனி முதலாளி திருவாளர் பீடே டியூ-பாண்ட். இதைவிடக் குறைந்த கூலியில் தொழிலாளர்களைச் சுரண்டி, சொத்து சேர்க்க தங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற பேய்த்தனமான பேராசையின் கூப்பாடு இது.

இந்த அற்பத்தனமான குறைந்தபட்சக் கூலியை உயர்த்தக் கோரியோ, குறைந்தபட்சக் கூலியை வெட்டத் துடிக்கும் முதலாளிகளின் திமிரை எதிர்த்தோ போராடக் கூடிய நிலையில் கூட அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் கிடையாது. ஏனென்றால், வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களை, எவ்வித விளக்கமும் இன்றி வேலையை விட்டுத் துரத்தியடிக்கும் சட்டபூர்வ உரிமையை அமெரிக்க முதலாளிகள் பெற்றிருக்கிறார்கள்.

''முசுலீம் தீவிரவாதம் அமெரிக்க மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது'' என உலகெங்கும் பிரச்சாரம் செய்கிறது அமெரிக்கா. உண்மையில் அமெரிக்க முதலாளிகள், அமெரிக்க மக்களை ''வேலையிழப்பு'' என்ற நிரந்தர பீதியில் வைத்திருப்பதுதான் அவர்களின் வாழ்க்கைக்கே பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

இதனால்தான், ஆப்கான் மீது அமெரிக்கா நடத்தி வரும் ஆக்கிரமிப்பு போரை எதிர்த்து வாஷிங்டனில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஓர் அமெரிக்கத் தொழிலாளி, ''அமெரிக்க மக்களுக்கு மருத்துவக் காப்பீட்டை மறுப்பதுதான் பயங்கரவாதம்; அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கி வருவதைத் தடுப்பதுதான் பயங்கரவாதம்'' எனக் கூறினார்.

உலகெங்கிலும் அமெரிக்கா திணித்து வரும் இந்தப் பங்குச் சந்தை பயங்கரவாதம் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருப்பது, செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின் மிகவும் வெளிப்படையாகவே அம்பலமாகிவிட்டது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்குதான், ''தீவிரவாதத்துக்கு எதிரான உலகப் போர்'' என்ற பெயரில் அமெரிக்கா தனது இராணுவ பயங்கரவாதத்தை ஏழை நாடுகளுக்கு எதிராக ஏவிவிட்டுள்ளது. ஆப்கான் மீது அமெரிக்கா நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போர் இதன் தொடக்கம்தான்.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இருக்கும் அமெரிக்காவின் பங்குச் சந்தை பயங்கரவாதத்தையும், இராணுவ பயங்கரவாதத்தையும் எதிர்த்து வீழ்த்தாமல் ஏழை நாடுகள் தங்களின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் காத்துக் கொள்ள முடியாது; அமெரிக்கத் தொழிலாளி வர்க்கமும் நிதி மூலதனத்தின் நுகத்தடியில் இருந்து விடுதலை பெற முடியாது!

●செல்வம்

## தமிழக அரசின் விலைவாசி உயர்வைக் கண்டித்துப் பொதுக்கூட்டம்

★தமிழக அரசு திணித்துள்ள விலைவாசி உயர்வைக் கண்டித்து ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் உழைக்கும் மக்களிடம் தொடர்ந்து பிரச்சார இயக்கம் மேற்கொண்டுள்ளன.

அதன் ஒரு பகுதியாக 'உலக வங்கியின் கைக்கூலி பாசிச ஜெயா அரசின் பயங்கரவாதத்தை முறியடிப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் கடந்த 29.12.01 அன்று மாலை 6.00 மணிக்கு கந்திலி - பர்கூர் ஒன்றியத்தில் செயல்படும் விவசாய விடுதலை முன்னணி கந்திலியில் கண்டனப் பொதுக் கூட்டத்தை நடத்தியது.

இப்பொதுக் கூட்டத்திற்கு தோழர் ஜி.கே. கோவிந்தன் தலைமையேற்றார். ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர். இரா. சீனிவாசன் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் இறுதியில் ம.க.இ.க. மையக் கலை குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி எழுச்சியூட்டும் விதத்தில் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதுடன், மற்ற கட்சியினைச் சேர்ந்தவர்களும் பாராட்டும்படி அமைந்தது.

தகவல் :
வி.வி.மு.,
கந்திலி - பர்கூர் ஒன்றியம்.

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

*''நமது தேசியப் பொருளாதாரத்தில் இருந்து அந்நிய ஏக போக மூலதனத்தை முழுமையாகத் தூக்கி யெறிந்து மொத்த மாக ஒழித்துக் கட்டு வதும் இதன்மூலம் அதன் நாசகார செல்வாக்குகள் அனைத்தில் இருந்தும் நமது மக்களின் பொருளாதார, சமூக வாழ்வை விடுதலை செய்வதும் நமது ஜனநாயகப் புரட்சியின் அவசரமான இரண்டாவது கடமை யாகும்.''*

- சி.பி.(எம்) கட்சியின் 1964-ஆம் ஆண்டு கட்சித் திட்டம், பத்தி 97, பக்: 43.

*''ஏகாதிபத்தியத்தின் நாசகார செல்வாக்கு, பன்னாட்டு தொழில் கழ கங்கள் மற்றும் சர்வதேச ஏகபோக மூலத னத்தின் பல்வேறு ஏஜென்சிகளின் ஆதிக்கம் ஆகியவற்றில் இருந்து நமது மக்களின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்வை விடுதலை செய்வது அவசர மான இரண்டாவது கடமையாகும்.''*

- சி.பி.(எம்) கட்சியின் மேம்படுத்தப்பட்ட 2000-ஆம் ஆண்டு கட்சித் திட்டம், பத்தி 74, பக்:40

''விவசாயிகளின் நலன்களுக்காக முற்போக்கான விவசாயச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவது'' என்கிற முதலாவது முதன்மைக் கடமையோடு மேற்படி இரண் டாவது கடமையைப் பற்றி சி.பி.(எம்) கட்சி தனது 1964 ஆம் ஆண்டு கட்சித் திட்டத்தில் குறிப்பிட்டது. ஆனால், கட்சித் திட்டத்தை மேம்படுத்துவதாகக் கூறிக் கொண்டு 2000-ஆம் ஆண்டு நிறைவேற்றிய திட்டத்தில் மேற்கண்டவாறு திருத்தியுள் ளது. ''மேம்படுத்துவதற்கு'' முன்பும் பின்பும் உள்ளதை ஒப்பிட்டுப் பார்த்தாலே சி.பி.(எம்) கட்சி எப்படிப்பட்ட பித்த லாட்டக் கட்சி என்பது விளங்கும்.

*''நமது தேசியப் பொருளாதாரத்தில் இருந்து அந்நிய ஏகபோக மூலதனத்தை முழுமையாகத் தூக்கியெறிந்து, மொத்த மாக ஒழித்துக் கட்டுவது'' என்கிற வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.*

அந்நிய ஏகபோக மூலதனத்தை முழு மையாகத் தூக்கியெறிந்து, மொத்தமாக ஒழித்துக் கட்டுவதன் மூலமாக நமது மக்களின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்வை அதன் நாசகர செல்வாக்குகள் அனைத்தில் இருந்தும் விடுவிப்பது என்ப தற்குப் பதிலாக,

ஏகாதிபத்தியத்தின் நாசகர செல்வாக்கு, பன்னாட்டுத் தொழில் கழகங்கள் மற்றும் சர்வதேச ஏகபோக மூலதனத்தின் பல்வேறு ஏஜென்சிகளின் ஆதிக்கம் ஆகியவற்றில் இருந்து நமது மக்களின் பொருளாதார, அர சியல், சமூக வாழ்வை விடுதலை செய்வது என்று மாற்றியுள்ளது.

*''தோட்டத் தொழில்கள், சுரங்கங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், தொழிற்சாலைகள், கப்பல் போக்குவ ரத்து மற்றும் வர்த்தகத்தில் உள்ள அனைத்து அந்நிய மூலதனமும் பறி முதல் செய்யப்படும். அனைத்து வங்கி களும் கடன் நிறுவனங்களும் பிற ஏக போக தொழிற்சாலைகளும் தேச உடைமையாக்கப்படும். வெளிநாட்டு வர்த்தகம் தேசஉடைமை ஆக்கப்படும்.''*

என்று சி.பி.(எம்) கட்சியின் 1964 கட்சித் திட்டம் கூறியது. மேலும் அது,

*''அந்நிய ஏகாதிபத்திய மூலதனத் துடன் சமரசமும் கூட்டுறவும் கொள்ளும் கொள்கையுடைய தற்போதைய அர சாங்கம் ஆட்சியில் இருக்கும்வரை அந்நிய ஏகபோக மூலதனம் மற்றும் அதன் காட்டுமிராண்டித்தனமான சுரண்டல் ஆகியவற்றில் இருந்து நமது பொருளாதாரம் விடுபட முடியாது என்பதும் அதே அளவு தெளிவாகிறது. நமது நாட்டில் இருந்து அந்நிய ஏகபோக மூலதனத்தை வேரோடு பிடுங்கி மொத்த மாகத் தூக்கியெறிவதற்கும், நமது சுதந்தி ரத்தை உறுதியான பாதுகாப்பான அடித் தளங்களின் மீது வைப்பதற்கும் பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் மக்கள் ஜனநாயக முன்ன ணியின் ஒரு அரசாங்கத்தை உறுதியாக நிறுவுவதைத் தவிர வேறெதுவும் உத்திர வாதமாக இருக்க முடியாது'' என்று கூறி யது.*

ஆனால், அத்திட்டத்தை மேம்படுத்துவ தா[illegible]றிக் கொண்டு 2000-ஆம் ஆண்டில் சி.பி.(எம்) கட்சி நிறைவேற்றிய திருத்தப் பட்ட திட்டம், தான் அமைக்கவிருக்கும் மக்கள் ஜனநாயக அரசாங்கம்—

*''தொழில்கள், நிதி, வர்த்தகம் மற்றும் சேவைகள் உட்பட பல்வேறு துறைக ளில் உள்ள இந்திய, அந்நிய ஏகபோகங் களை அகற்றுவதற்காக அவற்றின் சொத் துக்களை அரசுடைமையாக்குவது உட் பட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும்''* (சி.பி.(எம்) கட்சியின் 2000-ஆம் ஆண்டுத் திட்டம், பத்தி 6.4.1 பக்:37)

இங்கே ''இந்திய மற்றும் அந்நிய ஏக போகங்களை அகற்றுவது'' என்பதன் பொருள் அக்கட்சியின் 1964 திட்டத்தில் கூறப்பட் டுள்ளதைப் போல அந்நிய ஏகபோக மூல தனத்தை வேரோடு பிடுங்கி, முழுமை யாகத் தூக்கியெறிந்து, முற்றாக ஒழித்துக் கட்டுவதல்ல இந்தியா மற்றும் அந்நிய மூலதனத்தின் ஏக போகங்களை அகற்றுவதுதான். அதாவது அவற்றின் ஏகபோகத் தன்மைகளை அகற் றுவதுதான். ''அரசுடைமையாக்குவது உட்பட பல வடிவங்களில் ஏகபோகத்தை அகற்றுவதற்கும் மற்றும் சொத்துக்கள் குவி வதை உடைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்று இதற்கு சுர்ஜித் விளக்கமளிக்கிறார். சோசலிச வேடம் போட்டுக் கொண்ட இந்திரா காந்தி அர சாங்கம் ஏகபோகத் தடுப்பு சட்டம் **(MRTP)** மற்றும் அரசுடைமையாக்கும் நடவடிக்கை களை மேற்கொண்டதைப் போல சி.பி.(எம்) கட்சி செய்யும். மற்றபடி அந்நிய மூலதனம் நீடிப்பதோடு புதிதாக நுழைவ தையும் கூட வரவேற்கும் என்பதை ''மேம்ப டுத்தப்பட்ட'' திட்டத்தின் இன்னொரு உட்பி ரிவில் தெளிவுபடுத்துகிறது.

*''முன்னேறிய தொழில் நுட்பத்தைப் பெறுவதற்காகவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும். ஒட்டு மொத்தப் பொரு ளாதார நலன்களுக்காக நிதி மூலதனம் நுழைவதை நெறிப்படுத்தும்.''* (சி.பி.(எம்) கட்சியின் 2000-ஆம் ஆண்டு திட்டம் பத்தி 6.6. 11 பக்: 37)

ஆக, அந்நிய ஏகபோக மூலதனத்தை வேரோடு பிடுங்கி, முழுமையாகத் தூக்கி யெறிந்து, முற்றாக ஒழித்துக் கட்டுவது என்கிற தனது பழைய கட்சித் திட்டத்தில் இருந்து மாறி, தெரிந்தெடுக்கப்பட்ட துறை களில் அந்நிய நேரடி முதலீட்டை அனும திப்பது என்கிற புதிய நிலைக்கு சி.பி.(எம்) கட்சி தாவியுள்ளது. அது மட்டுமல்ல; அந்நிய நிதி மூலதன நுழைவைத் தடுக் காது, நெறிப்படுத்தும் என்றும் கூட இப்போது கூறுகிறது.

முன்னேறிய தொழில் நுட்பத்தைப் பெறுவது, உற்பத்தித் திறனை மேம்படுத்து வது, ஒட்டு மொத்தப் பொருளாதார நலன் களுக்காக நெறிப்படுத்துவது என்கிற பசப்புச் சொற்களுக்குப் பின்னே சி.பி.(எம்) கட்சி தனது பச்சை துரோகத்தை மூடி மறைக் கிறது.

இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகள் முன்னேறிய தொழில்நுட்பங்களைப் பெறு வதற்கும், உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும், இதன் ஒட்டுமொத்த பொருளாதார பலன்களை நெறிப்படுத்திக் கொள்வதற்கும் அனுமதிக்கக் கூடிய ஏக

www.padippakam.com

போகமில்லாத அந்நிய நேரடி முதலீடு என்றொன்று இன்றைய காலகட்டத்தில் உள்ளதா? அப்படி எதுவும் கிடையாது என்பதற்கான ஆதாரம் சி.பி.(எம்) கட்சியின் திட்டத்திலும் அதிகாரபூர்வப் பத்திரிகையிலுமே உள்ளன.

''மூலதனத்தின் தற்போதைய படிநிலையில் நிதிமூலதனத்தின் ஒன்றுகுவிப்பும் சர்வதேசமயமாக்கலும் முன்னெப்போதுமில்லாத உச்சங்களை எட்டியுள்ளது. உலக அளவில் நடமாடும் நிதிமூலதனம் தேசங்களின் இறையாண்மை மீது தாக்குதல் தொடுக்கிறது; அந்த இலாபங்களைப் பெறவேண்டி அத்தேசங்களின் பொருளாதாரங்களில் தங்கு தடையின்றி தேடிப் பிடிக்கிறது. ஏகாதிபத்திய ஒழுங்குமுறை, இந்த ஊக மூலதனம் சுதந்திரமாக நுழைவதற்காக எல்லாத் தடைகளையும் தகர்த்து, இந்த மூலதனத்துக்குச் சாதகமான நிபந்தனைகளை உலகின் ஒவ்வொரு பகுதியின் மீதும் திணிக்கிறது. சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் ஆகியவை காலனிய காலத்துக்குப் பிந்திய இந்த அநீதியான உலக ஒழுங்குமுறையை நிரந்தரமாக்குவதற்கான கருவிகளாக உள்ளன. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஊக நிதி மூலதனத்தின் புதிய மேலாதிக்கம், மந்தமான வளர்ச்சியை விளைவிக்கிறது. மூன்றாம் உலகத்துக்குக் கடுமையான சுரண்டலையும் அதிகரித்து வரும் கடன் சுமையையும் ஏற்படுத்துகிறது. வர்த்தகம், தொழில் மற்றும் விவசாய உற்பத்தி, தொழில்நுட்ப பரிமாற்றங்கள் மற்றும் சேவைத்துறை ஆகியவற்றுக்கான நிபந்தனைகள், குறைவளர்ச்சி முதலாளித்துவ நாடுகளை ஏகாதிபத்திய மூலதனத்தின் நலன்களுக்குத் தொங்கு சதையாகும்படி தள்ளுகின்றன'' என்று சி.பி.(எம்) கட்சியின் திட்டம் கூறுகிறது. (பத்தி 2.6 பக்: 7-8)

ஏகபோகமில்லாத அந்நிய மூலதனம் என்று எதுவும் கிடையாது; இன்றைய படி நிலையில் அந்நிய மூலதனம் என்பது ஏகாபத்திய ஏகபோக ஊக நிதி மூலதனம்தான் என்பதை மேற்கண்டவாறு தனது கட்சித் திட்டத்தில் சி.பி.(எம்) கட்சி ஒப்புக் கொள்கிறது.



டெல்லியில் நடந்த உலகமயமாக்க எதிர்ப்புப் பேரணியில் வி.பி.சிங், முலயம்சிங் யாதவுடன் சி.பி.எம். தலைவர்கள்: கையாலாகாத கண் துடைப்பு எதிர்ப்பு.

''இந்த மூலதனத்தின் நலன்களுக்காகத்தான் அமெரிக்காவில் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியம், குறிப்பாக சர்வதேச அளவில் எதிர்ப்பக்கம் அழுத்தம் தரும் சோசலிச சக்தி இல்லாமற் போனதை சாதகமாக எடுத்துக் கொண்டு, மூன்றாம் உலக நாடுகளைப் பொருளாதார ரீதியாக அடிமைப்படுத்தும் நோக்கிலான ஒரு உலக ஒழுங்குமுறையைத் திணிப்பதற்கு எத்தணிக்கிறது. வளரும் நாடுகளைப் பொருளாதார மறுகாலனியாக்கம் செய்யும் அதன் திட்டத்திற்கான கருவியாக ஐ.எம்.எஃப், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் ஆகியவை உள்ளன'' என்கிறார் சி.பி.(எம்) கட்சியின் புதிய சித்தாந்த குரு சீத்தாராம் யெச்சூரி.

இவ்வளவு மோசடியான அந்நிய மூலதனத்தைத்தான் அனுமதிப்பது என்று சி.பி.(எம்) கூறுகிறது. தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக அவ்வாறு செய்வதாகவும் கூறுகிறது.

"அந்நிய ஏகபோக மூலதனத்தை வேரோடு பிடுங்கி, முழுமையாகத் தூக்கியெறிந்து, முற்றாக ஒழித்துக் கட்டுவது என்கிற தனது பழைய திட்டத்திலிருந்து மாறி, தெரிந்தெடுக்கப் பட்ட துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது என்கிற புதிய நிலைக்கு சி.பி.எம். கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டம் தாவியுள்ளது.''

ஆனால், உலக வர்த்தக நிறுவனத்தின் இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் தொழில்நுட்ப பரிமாற்றங்களுக்கும், உற்பத்தி மேம்பாட்டுக்கான மூலதன நுழைவையும் அனுமதிப்பது கிடையாது. ''டிரிம்ஸ்'' **(TRIMS)** எனப்படும் வர்த்தகம் சம்பந்தப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் ''டிரிப்ஸ்'' **TRIPS** எனப்படும் வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவுச் சொத்துரிமை ஆகிய இரண்டு ஒப்பந்தங்கள்தாம் அவை.

வர்த்தகம் சார் முதலீட்டு நடவடிக்கைகள் ஒப்பந்தம், ஏழை நாடுகளில் எந்தத் துறையில், எந்தளவுக்கு மூலதனம் போடலாம் எனத் தீர்மானிக்கும் உரிமையை பன்னாட்டு நிறுவனங்களிடம் கொடுத்து விடுகிறது. வர்த்தகம்சார் அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தமோ பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாக ஏழை நாடுகள் தொழில்நுட்ப மேம்பாடு அடையும் வாய்ப்புகள் அனைத்தையும் தடை செய்கிறது. இவை இரண்டுமே மூன்றாம் உலகநாடுகளுக்குப் பாதகமாகவும், ஏகாதிபத்தியப் பன்னாட்டு தொழில் கழகங்களின் பகற்கொள்ளைக்கும் வழிவகுக்கும் வகையிலானவை என்று சி.பி.(எம்) கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகைகளே எழுதுகின்றன.

உலக வர்த்தக நிறுவனத்தைப் பற்றி ''உலகமயம், சந்தைமயம் மற்றும் மறுகாலனியாக்கம் ஆகிய இந்தப் போக்கின் மிகவும் அப்பட்டமான சின்னமாக உலக வர்த்தக நிறுவனம் - **WTO** உள்ளது'' என்று சி.பி.(எம்) கட்சி கூறுகிறது.

உலக வங்கியின் கொள்கைகளை விமர்சனம் செய்ததற்காக அந்நிறுவனத்தில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட பொருளாதார நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோசப் ஸ்டிக்லிட்ஜ் என்பவரின் நீண்ட மேற்கோளை எடுத்துக் காட்டி பின்வருமாறு சி.பி.(எம்) கட்சி ஏடு எழுதுகிறது.

'''உலகின் பணக்கார தேசங்களுக்கு சேவை செய்யும் ஒரே அரசாங்க அமைப்பினுடைய, ஒன்றைஒன்று இட்டு நிரப்பக் கூடிய முகமூடிகள் தாம் ஐ.எம்.எஃப், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம்' என்று ஒரு சமீபத்திய பத்திரிக்கைப் பேட்டியில் ஸ்டிக்லிட்ஜ் கூறி


படிப்பகம்

யுள்ளார்'' என்கிறது சி.பி.(எம்).

ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பதாக கூறிக் கொள்ளும் சி.பி.எம். கட்சி, அதுவே தரும் விளக்கங்கள் - ஆதாரங்களில் இருந்து என்ன முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கத்துக்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் உலக வர்த்தக நிறுவனம், ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடனான ஒப்பந்தங்களை முறித்துக் கொண்டு, அந்த அமைப்புகளில் இருந்து நமதுநாடு வெளியேறுவதற்கான போராட்டங்களை நடத்த வேண்டும். தான் அமைக்கவிருக்கும் மக்கள் ஜனநாயக அரசு அவ்வாறு செய்வதோடு, அந்நிய மூலதன நுழைவைத் தடுத்து, பன்னாட்டு தொழில் கழகங்களின் சொத்துக்களை நட்டஈடின்றிப் பறிமுதல் செய்யவேண்டும். ஏகாதிபத்திய உலகமயமாக்கத்துக்கு எதிராக இந்தியாவின் சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகத் திட்டம் வகுக்க வேண்டும். அதேபோல ஒடுக்கப்பட்ட நாடுகள் - தேசங்களின் விடுதலையும் அமைய, உலகு தழுவிய அணியில் இணைந்து போராட வேண்டும். ஆனால், சி.பி.(எம்) கட்சி அப்படிச் செய்யவில்லை.

ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தின் விளைவாக இரண்டுபோக்குகள் எழுந்துள்ளதாக சி.பி.(எம்) கட்சி கூறுகிறது.

''ஏகாதிபத்திய உலகமயமாக்கம் இருவகையான விளைவுகளுக்கு இட்டுச் செல்லுகிறது. ஒன்று விரக்தி, சரணடைவு வாதம், 'தவிர்க்க முடியாது' (வேறு வழியில்லை) என்கிற வெளிப்பாடு. மற்றொன்று, இந்த மூர்க்கமாகச் சுரண்டும் உலகமயமாக்கத்தைத் தடுப்பது அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமரசமற்ற எதிர்ப்பு மற்றும் போர்க்குணமிக்க மக்கள் திரள் போராட்டம்'' (சி.பி.(எம்) கட்சி ஏடு ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி'' (மக்கள் ஜனநாயகம்) பக்.15 நவ 11, 2001)

இந்த இரண்டில் சி.பி.(எம்) கட்சி இரண்டாவது வகையைச் சேர்ந்திருப்பதைப் போல பித்தலாட்டம் செய்கிறது. ஆனால், உண்மையில் ஏகாதிபத்திய உலகமயமாக்கம் என்பது தவிர்க்க முடியாதது என்கிற சரணடைவுப் போக்கையே அக்கட்சி மேற்கொண்டுள்ளது. அக்கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டமும், நடைமுறையும் இதைத்தான் காட்டுகின்றன.

சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலி சோசலிச அரசுகள் கவிழ்க்கப்பட்டு அப்பட்டமான முதலாளித்துவ அரசும் பொருளாதாரமும் நிறுவப்பட்ட பிறகு, அந்நாடுகளில் மட்டுமல்ல; உலகம் முழுவதும் உள்ள போலி கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் தலைமையிலான ஒற்றைத் துருவ உலக மேலாதிக்கத்தையும் உலகமயமாக்கத்தையும் தவிர்க்க முடியாதது என்று சரணடைந்து விட்டன.

மையப்படுத்தப்பட்ட சோசலிச பொருளாதாரம் தோல்வியடைந்து விட்டது, சுதந்திர சந்தைப் பொருளாதாரம் தான் சிறந்தது, வெற்றி பெற்றது என்கிற முதலாளித்துவ - ஏகாதிபத்திய கருத்தை இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அரசுடைமை - தேசவுடைமையாக்கப்பட்ட தொழில்கள் நிர்வாக - உற்பத்தித்திறன் குறைந்து, நலிவும் தேக்கமும் அடைந்து விட்டன. ஆகவே தனியார்மயம், தாராளமயம் தவிர்க்க முடியாது என்கிற முடிவையும் ஒப்புக் கொண்டார்கள்.

ஏகாதிபத்தியப் பொருளாதார உலகக் கட்டமைப்புக்குப் போட்டியாகவும் மாற்றாகவும் நிறுவப்பட்ட உலக சோசலிசப் பொருளாதார அமைப்பு தோற்றுப் போய்விட்டது; இனி ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைப்பில் இணைவதைத் தவிர வேறு வழியில்லை; ''சோசலிசநாடுகள்'' தமது நிர்வாக உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், தொழில் நுட்பத்தை நவீனப்படுத்தவும், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவும் ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தோடு தாமும் இணையவேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டு விட்டன.

இதனால்தான் போலி கம்யூனிஸ்டுகள், ஏகாதிபத்திய ஏகபோக நிதிமூலதனம் நுழைவதையும், பன்னாட்டு தொழில் கழகங்கள் தொழிலும் வர்த்தகமும் தொடங்கவும் வசதியாக தமது பொருளாதாரக் கொள்கை - திட்டங்களை மாற்றிக் கொண்டு விட்டனர். ஏகாதிபத்தியப் பொருளாதார மேலாதிக்க அமைப்புகளான உலக வங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தக நிறுவனங்களில் பங்கேற்பதை எதிர்க்கவில்லை. சி.பி.(எம்) கட்சியும் இப்படித்தான் செய்கிறது.

சி.பி.(எம்) போன்ற போலி கம்யூனிஸ்டுகளின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் தற்போது விளங்கும் சீனாவோ ஐ.எம்.எஃப், உலகவங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் ஆகிய ஏகாதிபத்தியப் பொருளாதார மேலாதிக்க அமைப்புகளில் மன்றாடி உறுப்பு நாடாகிவிட்டது. இதை வரவேற்று நியாயம் கற்பிக்கும் சி.பி.(எம்) கட்சி, இந்த நிறுவனங்களில் உறுப்பு நாடாக இருந்து வளர்முக நாடுகளுக்குச் சாதகமான பேரங்கள் நடத்தி ஒப்பந்தங்கள் போட வேண்டும் என்று வாதிடுகிறது.

ஏற்கனவே சி.பி.(எம்) கட்சியின் தலைமையிலான 'இடது' கூட்டணி ஆளும் மாநிலங்களில் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலை அமலாக்கத் துவங்கிவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையை காங்கிரசு அரசு அமலாக்கத் தொடங்கியதில் இருந்து மூன்று ''பாரத பந்த்''களை நடத்தியது சி.பி.எம். தலைமையிலான 'இடது' கூட்டணி. அந்த வரிசையில் 1992 ஆகஸ்டு 15-இல் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்த இந்த இடதுகள், அறிவிப்பின்றி அதைக் கைவிட்டனர். அதன் பிறகு மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வரும்வரை மூச்சுவிடவில்லை. இடையில் சி.பி.(எம்) மற்றும் 'இடதுசாரி'க் கட்சிகளின் ஆதரவு பெற்ற ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தது. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் இருந்து தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கத்துக்கு ஏகாதிபத்திய ஏஜெண்டாக விளங்கும் ப. சிதம்பரம் ஐக்கிய முன்னணி ஆட்சியில் நிதி மந்திரியானார். அவர் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தீவிரமாக அமலாக்கியபோதும் சி.பி.(எம்) கட்சி முணுமுணுத்துக் கொண்டுதான் இருந்ததே தவிர, எதிர்க்கவில்லை.

பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தபிறகு காங்கிரசு, ஜனதா ஆட்சிகளின் கொள்கையை ஒட்டி புதிய பொருளாதாரக் கொள்கையின் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களை அமலாக்குகிறது. அப்பட்டமான அமெரிக்க ஆதரவு அடிவருடித்தனம் - பிற்போக்குத்தனத்தைக் கொண்ட பாரதீய ஜனதா, காங்கிரசு - ஜனதா ஆகியவற்றின் போலி முற்போக்கு முகமூடி அணிந்திருக்கவில்லை. ஆகவே பாரதீய ஜனதாவின் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பதாக இயக்கம் நடத்தும் சி.பி.(எம்) கட்சி, காங்கிரசு, ஜனதா ஆட்சிக் காலத்தில் சமரசமாகப் போனதற்குக் காரணம், அக்கட்சிக்குத் தேவை போலி முற்போக்கு முகமூடிதானே தவிர உண்மையில் உலகமயமாக்க எதிர்ப்பு கிடையாது. எனவேதான், தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கத்தை ராஜீவ் ஆட்சியில் நிதி மந்திரியாக இருந்து இந்த நாட்டில் நுழைத்த வி.பி.சிங் தலைமையில் உலகமயமாக்க எதிர்ப்பு அணியை சி.பி.(எம்) கட்சியும் பிற 'இடதுகளும்' அமைத்துள்ளனர்.

அதுமட்டுமல்ல; கட்டார் நாட்டின் தோகாவில் கடந்த நவம்பர் மாதம் நடந்த உலக வர்த்தக நிறுவன மாநாட்டை ஒட்டி உலகமயமாக்க எதிர்ப்பு தினப் போராட்டம் நடந்தது. அப்போராட்டத்தில் உலகமயமாக்கத்தைத் தீவிரமாக அமலாக்கும் பாரதீய ஜனதா, காங்கிரசு, ஜனதா, சமதா, சிவசேனா போன்ற கட்சிகளின் தொழிற்சங்கங்களோடு அணி சேர்ந்தனர். அதேசமயம் சி.பி.(எம்)., சி.பி.ஐ ஆகிய போலி கம்யூனிஸ்டுகள் உலகமயமாக்கம், தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம் தவிர்க்க முடியாதது என்கிற கையறு நிலைக்கு தமது தொழிற்சங்கங்களைத் தள்ளியுள்ளனர். அவை புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகக் கையாலாகாத கண்துடைப்பு எதிர்ப்புகளைக் காட்டுவதைப் போலவே, ஏகாதிபத்திய உலகமயமாக்கத்துக்கு எதிராகச் சமரச-சரணடைவுப் பாதையைத்தான் பின்பற்றுகின்றன.

(தொடரும்)

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## சிறுவனின் துணிவு ஆர்.எஸ்.எஸ்.இன் பேடித்தனம்!

மத்தியப்பிரதேசத் தலைநகர் போபாலில் நடந்த 62-ஆவது இந்திய வரலாறு பேராயத்தில், ''காவிமயமாக்கப்படும் கல்வி'' என்ற சிறு நூலை விற்ற 'குற்றத்திற்காக', சிறீகாந்த் என்ற ஏழு வயது சிறுவனை ஆர்.எஸ்.எஸ். கும்பல் போலீசிடம் பிடித்துக் கொடுத்திருக்கிறது. இந்தச் சிறுவன், அந்தப் பேராயத்தில் கலந்து கொள்ள வந்திருந்த தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மிருதுளா முகர்ஜியின் மருமகன். பேராயம் நடந்த அரங்கின் வாயிலில் நின்று கொண்டு இந்த நூலை விற்றுக் கொண்டிருந்த சிறீகாந்தை, ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த ராசேந்திர சத்தா என்பவன் மிரட்டிவிட்டுச் சென்றான். இந்த மிரட்டலுக்குப் பயப்படாமல் அந்தச் சிறுவன் மறுநாளும் நூலை விற்றுக் கொண்டிருந்த பொழுதுதான், அவனைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய், போலீசிடம் பிடித்துக் கொடுத்திருக்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இந்தப் பேடித்தனத்தை, இடதுசாரிகளின் 'பகுத்தறிவு பயங்கரவாத'த்திற்கு எதிரான போராட்டம் என மார்தட்டிக் கொள்கிறது இந்து மதவெறிக் கும்பல்.

## பேச்சுரிமைக்கு வேட்டு

அரசை எதிர்த்து ''பந்த்'' நடத்துவதைச் சட்ட விரோதம் எனத் தடை செய்துவிட்ட உச்சநீதி மன்றம், தற்பொழுது, ''தமிழகத்தின் எந்தவொரு நகரத்திலும் முக்கிய வீதிகளில் பொதுக்கூட்டம் நடத்தவும், ஊர்வலம் செல்லவும் தடை விதித்து இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள அடிப்படைக் குடியுரிமையான பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமைகளின் உயிரைப் பறித்துவிட்டது. மக்கள் மீது தொடுக்கப்படும் அரசியல் - பொருளாதாரத் தாக்குதல்களை, மக்கள் கூடும் இடங்களில் அம்பலப்படுத்தி பேசாமல், சுடுகாட்டுப் பொட்டலிலா மேடைப் போட்டுப் பேச முடியும்? அரசுக்கு எதிரான எந்தவொரு மாற்றுக் கருத்தும் மக்களிடம் போய்ச் சேர்ந்து விடக்கூடாது என்ற தீய நோக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த உத்தரவு, சட்டபூர்வ பாசிசம் தவிர வேறென்ன?

## தேயிலை விலை வீழ்ச்சியின் கொடூர விளைவுகள்

பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சியைக் காரணமாகக் காட்டி, தமிழகத்திலுள்ள தேயிலை எஸ்டேட் முதலாளிகள், தொழிலாளர்களின் நாள் கூலியை ரூ. 76.85-லிருந்து அறுபது ரூபாயாக குறைக்கப் போவதென அறிவித்துள்ளனர். இந்தக் கூலி வெட்டுக்கு தொழிற்சங்கங்கள் சம்மதிக்காவிட்டால், எஸ்டேட்டுகளை இழுத்து மூடிவிடுவோம் என்றும் அவர்கள் மிரட்டத் தொடங்கிவிட்டனர். இது ஒருபுறமிருக்க, வால்பாறை பகுதியில் உள்ள எஸ்டேட் முதலாளிகள், இனி கத்தரிக்கோலைப் பயன்படுத்திதான் தேயிலை பறிக்க வேண்டும் எனத் தன்னிச்சையாக உத்தரவிட்டுள்ளனர். கைகளில் 16-18 கிலோ தேயிலை பறிக்கும் தொழிலாளி, கத்தரிக்கோலைப் பயன்படுத்தித் தேயிலை பறித்தால், கிட்டதட்ட 150 கிலோ கொழுந்தைப் பறிக்க முடியும் என முதலாளிகள் குதூகலிக்கிறார்கள். ஆனால், தொழிலாளர்களோ ஒரு கிலோ எடையுள்ள கத்தரிக் கோலைத் தூக்கிக் கொண்டு தேயிலைப் பறிப்பதால், தோள்பட்டை, மூட்டு வலியோடு, பெண் தொழிலாளர்களுக்கு இரத்தப் போக்கும், கருச்சிதைவும் உண்டாகும் என அஞ்சுகிறார்கள்.

சாலையில் நடந்து போவதையே அபாயமாக்கி விட்டது தகவல் தொழில்நுட்ப புரட்சி.



## தலைவிரித்தாடும் அரசு பயங்கரவாதம்

எல் பாகியோவ்லி, எல் ஹாசனோவி கலீத் என்ற இரு டச்சு நாட்டு சுற்றுலாப் பயணிகள் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் காசுமீர் தலைநகர் சிறீநகரில் நட்ட நடுத்தெருவில் பொங்கலன்று சுட்டுக் கொல்லப்பட்டனர். சிறீநகர் தெருவில் ரோந்து சுற்றி வந்த எல்லைப் பாதுகாப்பு படையினர், தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணை மானபங்கப்படுத்த முயன்ற பொழுது, இந்த இரு சுற்றுலாப் பயணிகளும் அதைத் தடுத்ததாகவும், அப்பொழுது நடந்த கைகலப்பின் பொழுதுதான் அவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும் ஜம்மு - காசுமீர் போலீசார் கூறுகின்றனர். ஆனால், எல்லைப் பாதுகாப்புப் படையோ அந்தச் சுற்றுலாப் பயணிகளை ''அல்கொய்தா'' தீவிரவாதிகள், தற்கொலைப் படையினர் எனக் கூறி, இப்படுகொலையை மூடிமறைக்க முயன்று வருகிறது.

## தனியார்மயத்திற்கு எதிராக முற்றுகை போராட்டம்

சேலம் உருட்டாலையைத் தனியாருக்கு விற்பது தொடர்பாக, அந்நிறுவனத்தின் சொத்துக்களைக் கணித்து மதிப்பிடுவதற்காக டாடா, ஜிண்டால், யுசினோர், ஏ.ஐ.இசட். ஆகிய நான்கு தனியார் நிறுவனங்களை உருட்டாலை நிர்வாகம் பாக்கு - வெத்திலை வைத்து அழைத்திருந்தது. ஆனால், உருட்டாலைத் தொழிலாளர்கள் அந்நிறுவன அதிகாரிகள் வந்த அன்று முற்றுகைப் போராட்டம் நடத்தி, அவர்கள் ஆலைக்குள் நுழைந்துவிடாதபடி தடுத்துவிட்டனர். ''ஆலை தனியார்மயமாவதால் உங்கள் வேலை பறி போய் விடாது'' என்று எடுத்துச் சொன்ன நிர்வாகத்தின் பசப்பல்களுக்குத் தொழிலாளர்கள் மசியாததால், தனியார் முதலாளிகள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுத் திரும்பிப் போய்விட்டனர்.

## ''புரட்சியா?'' பகற்கொள்ளையா?

தமிழகத்தில் தகவல் - தொழில்நுட்ப புரட்சியைக் கொண்டு வரப் போவதாகச் சொல்லிக் கொண்டு நுழைந்த பல தனியார் நிறுவனங்கள், ஓரளவுக்கு உருப்படியாக இருந்த சாலைகளையும் உருக்குலைத்து விட்டன. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையில் ஒரு கி.மீ தூரம் தோண்டிக் கம்பிகளைப் பதித்தால், சாலையைச் செப்பனிடுவதற்கும் சாலை வாடகைக்கும் சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்பதுதான் அரசின் விதி. ஆனால், இத்தனியார் நிறுவனங்கள் விசயத்தில் இந்த விதி தளர்த்தப்பட்டு, ஒரு கி.மீ தூரத்திற்கு 9,400/- ரூபாய் செலுத்தினால் போதும் என ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 1,600 கோடி ரூபாய்.

Published and Owned by R. SHANMUGA RAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42646/85
Regd. No. TN/Chief.PMG-544/2001
www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

**தலையில் சுமையையும்**, முகத்தில் ஒருவித **சோகத்தையும்** ஏந்திக் கொண்டு, **தனது கையை** நீட்டி ஏதோ முறையிடும் **இந்தப் பெண்**, ஒரு ''அகதி''; இந்திய **அரசால் சொந்த** நாட்டிலேயே அகதியா**க்கப்பட்டவர். காரணம்**, இந்தியா - பாகிஸ்தான் போர் அபாயம். இந்தியா - பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஜம்மு பகுதி கிராமங்களில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டு வருவதால், அக்கிராமங்களில் இருந்து இவரைப் போல 8,000 குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி **விட்டன. ஜம்மு** தவிர, பஞ்சாப், இராச**ஸ்தான் மாநி**லங்களில் அமைந்துள்ள **எல்லைப்புறக்** கிராமங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான விவசாயிகள், குடும்பம், குடும்பமாக அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

பாக். இராணுவம் ஊடுருவ வாய்ப்பிருப்பதாக இராணுவம் சந்தேகப்படும் எல்லைப்புறக் கிராமங்களில் எல்லாம் கண்ணிவெடிகள் புதைக்கப்படுகின்றன. இதனால் இராசஸ்தானின் ஜெய்சால்மர் பகுதியில், 19 அப்பாவி மக்களும், பிகானிர் பகுதியில் 12 பேரும் இக்கண்ணிவெடிகளுக்கு இதுவரை பலியாகியுள்ளனர். எல்**லைப்புறக் கிராமங்களுக்கு** ஆற்றுநீர்ப் **பாசனம் அடியோடு நிறுத்தப்**பட்டு விட்**டது. மின்சார, தொலைபேசி** இணைப்பு**கள் துண்டிக்கப்பட்டு** விட்டன. இதையெல்லாம் எதிர்த்துக் கேட்க முடியாதவாறு அறிவிக்கப்படாத இராணுவ ஆட்சிதான் எல்லைப்புறக் கிராமங்களில் நடக்கிறது. இப்படி எல்லைப்புறக் கிராமங்களைப் போர்க்களமாக மாற்றிவிட்டு, ''இன்னும் போரே தொடங்கவில்லை; அதற்குள் இவர்களை யார் வெளியேறச் சொன்னது?'' என வக்கணை பேசுகிறது அரசு.

போர் நிமித்தம் அகதிகளாக வெளியேறும் கிராம மக்களுக்கு அரசு நயா பைசா கூட நிவாரணமாக, நட்டஈடாகக் கொடுக்கவில்லை. மாறாக, ''மக்கள் தியாகம் செய்ய முன்வர வேண்டும்'' என எகத்தாளம் பேசி, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது, இந்து மதவெறிக் கும்பல்.

இதோ இந்தப் படத்தில் காணப்படும் 610 கிலோ எடை கொண்ட, ஆங்கில எழுத்து 'S' (எஸ்) வடிவிலுள்ள இந்த கேக், தேசியவாதி காங்கிரசு கட்சியின் தலைவர் சரத் பவாரின் 61-ஆவது பிறந்த நாளுக்காகத் தயாரிக்கப்பட்டு, வெட்டப்**பட்டது. இந்த கே**க்கைத் தயாரிப்பதற்**கான செலவு 80**,000 ரூபாய். பிரதமர் **வாஜ்பாயி, மகா**ராஷ்டிராவின் ஆளுநர், **முதல்வர் உள்ளிட்ட** அதிகார வர்க்கக் கும்பல் கலந்து கொண்ட பிறந்தநாள் விழா ஆடம்பரச் செலவு பத்து இலட்ச **ரூபாய். பிறந்தநாள் விருந்தில் பெரிய இடத்துக் கும்பல் குடித்துக் கும்மாளம் போடவும், தின்று தீர்க்கவும் செலவழிக்கப்பட்ட தொகை 21 இலட்ச ரூபாய்.**

இந்த 'நெருக்கடி'யான நேரத்தில் சரத்பவார் தனது பிறந்தநாளை ஊரைக் கூட்டிக் கொண்டாடியிருக்காவிட்டால், **ஒன்றும் குடிமுழுகிப் போய் இருக்காது. ஆனால், இந்த தேவையற்ற** ஆடம்**பரத்தைத் 'தியாகம்' செய்வதற்குக்** கூட அவர்கள் தயாராக இல்லை.

**சரத் பவார் இப்படிக் கொ**ட்டம் அடித்**தாரென்றால், ஜம்மு - காசுமீர்** முதல்வர் **பரூக் அப்துல்லாவோ,** இந்த 'நெருக்**கடி'யான நேரத்தில் ஓய்**வெடுக்கவும், 'கோல்ப்' விளையாடவும் இலண்ட**னுக்குப் பறந்து போ**னார். இந்த ஊதாரித்**தனத்தையே 'தியாகம்'** செய்ய முடியாத **பரூக் அப்துல்லா,** இந்தியா வசமுள்ள **காசுமீரைப் பாது**காக்க உயிரையே தியாகம் செய்வேன் எனச் சவடால் அடிக்கிறார்.

இந்தியாவின் பாதுகாப்புக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும் சூறையாடப்படும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; தங்களது ஆடம்பர, வக்கிர வாழ்வில் கடுகளவு கூடக் குறைத்துக் கொள்ளாத ஒட்டுண்ணி ஆளுங்கும்பல் மறுபுறம். தேசநலன் என்ற மோசடித்தனத்திற்கு இனியுமா நாம் பலியாக வேண்டும்? ●

